காரை வசந்தம் 2012

October 07, 2012

www.karainagar.com

DOUBLESEAL INSULATING GLASS LTD.

453 SIGNET DRIVE
NORTH YORK, ONTARIO, M9L 1V5

TEL: 416. 742 0146
FAX: 416. 742 4593

CONTACT: MAHADEVAN BALASUBRAMANIAM
EMAIL: mo@doubleseal.ca
CELL: 416. 716 7052



Manufacturing high performance insulating glass units for commercial and residental use.

கனடா - காரை கலாசார மன்றம்

பெருமையுடன் வழங்கும்

காரை வசந்தம் -2012

பன்னிரண்டாவது ஆண்டு கலைவிழா சிறப்பிதழ்

சீன கலாசார மண்டபம்

5183 Sheppard Ave. East, (Markham & Sheppard)

ஒக்ரோபர் 07, 2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30மணி

பிரதமவிருந்தினர்

டாக்டர் கனகமலர் சிறீகாந்தா MBBS, DCH

கனடா - காரை கலாச்சார மன்ற கீதம்

கனடா காரை கலாசார மன்றம்
வாழிய வாழியவே!
இனிதே காரை நகர் வாழ் மக்கள்
இன்புற்று வாழியவே!

மருதமும் நெய்தலும் மருவித் தோன்றும்
மாநிலம் காரைநகர்
கருதும் கல்வி கலையொடு ஒழுக்கமும்
கண்டபண் பாட்டுநகர்!

பால்நிறமான கடலலை மோதிப்
பரவிடும் கரையினிலே
மேலொளி வீசும் கலங்கரை விளக்கம்
விளங்கிடும் மேன்மை நகர்!

அருளம் பலவனார் அல்லின் ஏபிரகாம்
ஆனோர் வளர்த்தநகர்
பொருளை வளர்க்கும் வர்த்தக ராலே
பொலியும் பொன்னரகம்!

பாரிற் புகழொடு பஞ்சரதம் வரும்
பதியும் இதுவே தான்
தேரில் பொலிதரு சுந்தரேஸ் வரரும்
திகழ்வதும் இங்கேதான்

ஈழத்துச் சிதம்பரம் இலங்கிடும் காரை
என்றென்றும் வாழியவே!
தோளொத்த காரை –கனடா மக்கள்
தொடர் பென்றும் வாழியவே!

ஆக்கம்: தமிழருவி ஆசிரியமணி த. சிவகுமாரன்
இசையமைப்பு
குரல்: சங்கீத பூஷணம் காரை ஆ. புண்ணியமூர்த்தி
வயலின்: அளவையூர் இசைஞானபூபதி கேசவமூர்த்தி
மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் பரஞ்சோதி ரதிரூபன்

காரை வசந்தம் - 2012
நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல் அக வணக்கம் தமிழ்த்தாய் வாழ்த்து கனேடிய தேசிய கீதம் பங்கு பற்றுவோர்:	காரைச் சிறார்கள்
வரவேற்புரை: பாலர் பிரிவு பேச்சு –	மலர் குழந்தைவேலு – செயலாளர்
கானாமிர்தம் வழங்குவோர்:	செல்வி ராகவி மனோராகவன் மிதுரன் மனேகரன் கபிலன் சச்சிதானந்தன்
Contemporary நடனம் பங்குபற்றுவோர்:	தயாரிப்பு: Chandrashekara Dance Academy ஆசிரியர் திருமதி. அனுஷா ஜெயன் அவர்களுடைய மாணவிகள்
லயாமுதம் இசை நிகழ்ச்சி வழங்குவோர்:	அமுதீசர் சச்சிதானந்தன் பிரணவி அருள்ரட்னம் கபிலன் சச்சிதானந்தன் பிருந்தா ஜெயானந்தன்
மதுரம் – நடனம்	தயாரிப்பு: பாலவிமல நர்த்தனாலய அதிபர், பரதகலா வித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கம் அவர்களின் மாணவிகள்
பிரதம விருந்தினர் உரை	டாக்டர் கனகமலர் சிறீகாந்தா MBBS, DCH
இசையருவி	நாதாலயா இசைக் கல்லூரி

வழங்குவோர்:

சுபன்யா சிவஜோதி
வெண்ணிலா விக்னேஸ்வரன்
அஜித் ராஜ்குமார்

இசைத்துளிகள்
வழங்குவோர்:

செல்வன் நிர்சாந்த் ஞானேஸ்வரன் குழுவினர்
Navine Manivannan,Suveathan Velauther,
Thanujan Thangadurai Oliver Royster,
Thanujan Thangadurai,
Nirssanth Gnaneswaran, Gulliver Royster
Bharathy Vivkananthan

வானலையின் வரிகள்

ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா
அவர்களின் நூல் வெளியீட்டு விழா

நன்றியுரை:

திருமதி மலர் குழந்தைவேலு

Joys of Spring

தயாரிப்பு: Dance Creations நிரோதினி
பரராஜசிங்கம் அவர்களின் மாணவிகள்

நாடகம்
பங்கு பற்றுவோர்:

Luxury வறுமை-3 ("சொல்வதெல்லாம் உண்மை")

இளையதம்பி தயானந்தா(இலண்டன்)
பரமநாதர் தவராஜா(இலண்டன்)
சங்கரப்பிள்ளை தவராஜா
ரவி ரவீந்திரன்
கந்தையா சந்திரஷேகர்

விவாத அரங்கு

"இடம்பெயர் தேசத்தில் இளைய சமுதாயம்
இன்பத்திலா? – இன்னலிலா?

பங்கு பற்றுவோர்:

ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா
இலண்டன் காரை நலன்புரிச் சங்கத்தின் தலைவர்
திரு. பரமநாதர் தவராஜா,
பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத் தலைவர் திரு.
அருளானந்தம் செல்வச்சந்திரன்
பரமசிவம் தர்மலிங்கம்,
பைரவி சிவராமலிங்கம்

கனடா-காரை கலாச்சார மன்றம்
நடப்பாண்டு நிர்வாக சபை (2011-2012)

தலைவர் : திரு. ரவி. ரவீந்திரன்
உபதலைவர் : திரு. தர்மலிங்கம் பரமசிவம்
செயலாளர் : திருமதி. மலர் குழந்தைவேலு
உபசெயலாளர் : திரு. பாலசுப்பிரமணியம் கணேசன்
பொருளாளர் : திரு. தவராஜா சங்கரப்பிள்ளை
உபபொருளாளர் : திரு. திரு. நடனசபேசன் பொன்னம்பலம்

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

திரு. கோபால் மயில்வாகனம்
திரு. குகதாசன் சோமசுந்தரம்
திரு. மோகன் சங்கரப்பிள்ளை
திரு. நாதன் தர்மலிங்கம்
திரு. உருத்திரலிங்கம் தம்பையா

திட்டமிடல் போஷகர் சபை உறுப்பினர்கள்:

திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன்
திரு. சிவராமலிங்கம் சிவசுப்பிரமணியம்
திரு. கந்தப்பு அம்பலவாணர்
திரு. சிவசுப்பிரமணியம் குகனேசபவன்

கணக்காய்வாளர் : திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதம்பிள்ளை

இணையத்தள பராமரிப்பு: திருமதி. மலர் குழந்தைவேலு

இணையத்தள பராமரிப்பு ஆலோசனை: திரு.விமலராஜா குலசேகரம்

முன் அட்டை வடிவமைப்பு: மலர் குழந்தைவேலு

மலர் வடிவமைப்பு: Graphic Land

கணணி அச்சுப் பதிவு: மலர் குழந்தைவேலு


SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை
சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam
Director / Broker
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
80 Corporate Drive, Suite 307, Toronto, On. M1H 3G5

பிரதம விருந்தினரின் வாழ்த்து செய்தி

காரை வசந்தம் 2012 ம் ஆண்டிற்கு எங்களை பிரதம அதிதியாக அழைத்தமைக்கு கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு எமது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

காரை நகரிலிருந்து புலம் பெயர்ந்து ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு தங்கள் மன்றத்தினூடாக ஆற்றி வரும் பணிகள் மிகவும் மகத்தானது. மிகவும் போற்றத்தக்கதுமாகும்.

காரை மக்கள் தங்கள் ஊரை தாய் போல் மதித்து பல நாடுகளிலிருந்து உதவிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் கனடா காரை கலாச்சார மன்றம் நமது ஊருக்கு மிகப் பெரிய அளவில் பல்வேறு உதவிகளையும் சேவைகளையும் வழங்கி வருகின்றது.

இம்மன்றத்தின் பணிகள் மென்மேலும் வளரவும் அவர்களின் ஆண்டு விழா சிறப்பாக அமையவும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

டாக்டர் க. சிறீகாந்தா
– MBBS DCH
கொழும்பு–6

Airport Limo Canada
GTA Chauffeured Services
அழையுங்கள்
எங்களூர் நண்பன்
சுந்தரேஸன் (Sunny)
Main: 416-594.3400, Tall Free: 1.866.936.8889
Email: airportlimocanada@gmail.com
Web: www.airportlimocanada.com

Heroes CATERING
Take out & Catering
416.286.9334 416.318.9866
232-5215 FINCH AVE EAST
GTA SQUARE
SCARBOROUGH ON
SRI LANKAN ,INDIAN AND, CANADIAN CUISINE

வாழ்த்து

கனடா காரை கலாச்சார மன்றத்தின் 2012 காரை வசந்தம் விழா வழக்கம்போல் மிகச்சிறப்பாக நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விழா ரொரன்ரோ பெரும்பாகத்தில் நடக்கும் வருடாந்த கலை விழாக்களில் ஒரு முக்கிய விழாவாக விமர்சகர்களால் கருதப்படுகின்றது. கனடாவாழ் காரைநகர் மக்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கும் விழாவாக இது அமைகின்றது. கனடா காரை கலாச்சார மன்றம் மூன்று அடிப்படை நோக்கங்களைக்கொண்டு இயங்குகின்றது. காரைநகரைச் சேர்ந்த இளம் சந்ததியினர் கலை, பண்பாட்டு விளையாட்டு என்பனவற்றில் முன்னேற உதவுதல், காரைநகர் வாழ்மக்கள் நலம் பேணுதல், கனடாவிலும் இலங்கையிலும் மனித நேயப் பணிகளை மேற்கொள்ளல் ஆகியவையே இம்மன்றத்தின் அடிப்படைக் குறிகோள்களாகும். இந்த நோக்கங்களில் ஒன்றைப் பூர்த்திசெய்யும் முகமாகவே இவ்விழா வருடம்தோறும் சிறப்பாக நடைபெறுகின்றது.

காரை வசந்தம் போன்ற ஒரு கலைவிழாவை ஏற்பாடு செய்வது இலகுவான காரியமல்ல. இதற்கும் பலரின் ஒத்துழைப்பும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையும் அர்ப்பணிப்பும் தேவை. இவ்விழாவின் மூலம் சேகரிக்கப்படும் நிதி காரைநகரின் தேவையான பணிகளுக்கே செலவழிக்கப்படுகின்றது. காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டுள்ள பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் வருடந்தோறும் நடாத்தப்படும் தமிழ்த்திறன் மற்றும் பண்ணிசைப் போட்டிகள் இச் சிறார்களின் தமிழ்மொழி மற்றும் இந்துசமயம் பற்றிய அறிவையும் ஆற்றலையும் வளர்க்க பெரிதும் உதவி செய்கின்றன. கனேடிய மண்ணில் பிறந்து மேற்குலகக் கலாச்சாரத்தில் வளரும் எமது பிள்ளைகள் இப்போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தமது பிள்ளைகளை இப்போட்டிக்கு தயார் செய்யும் பெற்றோர்கள மிகவும் பாராட்டுக்குரியவர்கள்.

எவ்வளவோ சிரமங்களுக்கிடையிலும் இம்மகத்தான விழாவை ஒழுங்கு செய்த கனடா காரை கலாச்சார மன்றத்தின் நிர்வாகக் குழுவைப் பாராட்டுவதோடு இம்மன்றம் மேன்மேலும் வளர்ந்து இன்னும் பல விழாக்களை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

டாக்டர் விஜயரட்ணம்
MR.C.P(UK), M.R.C.P.C.H, F.R.C.P(CANADA)
F.A.A.P, D.C.H(LONDON), D.C.C.H(EDIN)

நேற்றும், இன்றும் நாளையும்...

கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

உலகின் முதலாவது 24 மணி நேர தனித் தமிழ் ஒலிபரப்பு

CTBC

88, Laird Drive
Toronto, Ontario
M4G 3V1

Tel: 416 - 429 - 2822
Fax: 416 - 429 - 2899
www.ctbc.com
E-mail:info@ctbc.com

தலைவர்/ செயலாளர்/ நிர்வாகசபை
கனடா – காரை கலாச்சார மன்றம்

அன்புடையீர் வணக்கம்
வாழ்த்துச்செய்தி

எமது கிராமத்தின் கல்வி, கலாச்சாரம், சமயம், சுகாதாரம், பொதுநலம், தொழில் இவற்றின் அபிவிருத்திக்காக புலம்பெயர் தேசங்களில் முன்நின்று பணியாற்றி வருவதில் முதன்மையானதும் பழைமையானதும் கனடா – காரை கலாச்சார மன்றம் ஆகும். ஊரின் தேவையறிந்து காலத்திற்கேற்ப பொருளாதார உதவியளித்து தாம் பிறந்த மண்ணில் பல வித இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தம் உறவுகளின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகிறார்கள். அவர்களின் செயல்பாடுகளைப் பாராட்டுகின்றோம்.

காரைநகர் எனும் ஆலமரத்தின் விழுதுகள் இன்று உலகின் பல பாகங்களில் பரந்துள்ளன. நாம் எமது கிராமத்தின் அபிவிருத்தி பணிகளில் மட்டுமன்றி நாம் வாழும் நாடுகளில் உள்ள நம் சிறார்களின் எதிர்கால வாழ்வு பற்றியும் சிந்திக்கும் காலமிது. எமக்கான தனித்துவமிக்க அடையாளங்களான மொழி மற்றும் கலாசாரப் பண்பாடுகளை நம்மோடு அழிந்து விடாமல் காக்க வேண்டும். எதிர்காலச் சந்ததியினரைத் தமது தமிழ் பண்பாட்டு விழுமியங்களில் ஈடுபடுத்தி ஊரில் கல்வி பயிலுகின்ற இளையோரையும் மேலைதேசங்களில் வாழ்கின்ற எமது இளையோரையும் ஒன்றிணைத்து அவர்களுக்கிடையிலான கல்வி வளர்ச்சிக்கு ஒரு உறவுப் பாலம் அமைத்திட வேண்டுமெனவும் இதற்காக புலம்பெயர் தேசங்களில் உள்ள மன்றங்களும், பெற்றோர்களும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

வடமாகாணத்தின் முதன்மைக்கிராமமாக விளங்குகின்ற காரைநகர் அனைத்து வளங்களும் ஒருங்கே அமையபெற்றது. இந்த வளங்களை ஒருங்கமைத்து எமது கிராமத்தின் உன்னதமான வளர்ச்சிக்கு புலம்பெயர் மன்றங்கள் ஒன்றிணைந்து வருகின்ற ஐந்து வருடங்களில் ஒரு சிறிய சிங்கப்பூராக மாற்றவேண்டும் என்றும், காரை வசந்தம்–2012 சிறப்புற நடைபெறவும் காரைநகர் சிவகாமி உடனுறை நடராசப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

நன்றி
இங்ஙனம்
பூ.விவேகானந்தா
சுவிஸ் காரை அபிவிருத்தி சபை
செயற்குழு உறுப்பினர்கள்,
சுவிஸ் வாழ் காரை மக்கள்.

Security Alarm No Contract !

உங்களையும் உடமைகளையும்

பாதுகாத்திட

எம்மை நாடுங்கள்

Video Door Phone
with installation
$389.99

* Some Condition may apply, This offer valid with this ad.

Alarm Monitoring
$17.99/ per month
One time programming & Activation $99.99

Existing Alarm Monitoring
$11.99/ per month
One time programming & Activation $99.99

Line Cut Technology GSM Cellular Backup
$9.99/ Additional per month
One time programming & Activation $249.99

4 Day & Night Sony CCD Color Camera 4 Channel Stand Alone DVR with 500GB HDD 19" LCD Monitor, Standard Installation

$1499.99

NOBLE REIGN

NR

NOBLE REIGN INC

SECURITY & COMMUNICATIONS

1.877.294.9669 | 416.826.5831

www.noblereign.com

பிரதேச செயலகம், காரைநகர்

பிரதேச செயலகம், காரைநகர்

DIVISIONAL SECRETARIAT. KARAINAGAR

தொலைபேசி எண் / தொலைநகல் எண் / Telephone No: 021 222 6090, 021 321 4389

Mail: agakarai@gmail.com

பக்ஸ் / Fax: 021 222 6090

காரைநகர் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

கனடா காரை கலாசார மன்றத்தினால் வெளியிடப்படும் காரை வசந்தம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்வடைகிறேன்.

கனடா காரை கலாசார மன்றம் கடந்த வருடங்களில் காரைநகரில் பல தேவைகளை நிறைவு செய்தமையை கேட்டு அறிந்து கொண்டேன். இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களிற்கு பயிற்சி வகுப்புக்களும், கருத்தரங்குகளும் சிறப்பாக நடாத்தப்பட்டுள்ளன. அதேநேரம் தாய், தந்தையரை இழந்த சிறுவர்களிற்கு நிதியுதவி போன்ற சீரிய பணியை மேற்கொள்வதும் பாராட்டத்தக்கது.

தங்களின் கல்வி ஊக்குவிப்பு நிகழ்வுகள் தொடர வேண்டும் என்பதுடன் காரை வசந்தம் இவ்வாண்டும் நறுமணத்துடன் வெளிவர வாழ்த்துவதோடு, கனடா காரை கலாசார மன்ற அனைத்து உள்ளங்களிற்கும் காரை வசந்தத்தினூடாக வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றேன்.

"தொடர்க தங்கள் பணி"

திருமதி.தே.பாபு.

பிரதேச செயலர்,

காரைநகர்.

Mrs.T.Babu
Divisional Secretary
Karainagar

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

WORKING TOWARDS YOUR SATISFACTION

SUMAN THARMARAJAH

SALES REPRESENTATIVE

416-725-0527

sumanthar@gmail.com

HOMELIFE/CHAMPIONS REALTY INC.,
BROKERAGE
206-8130 SHEPPARD AVE E
SCARBOROUGH, ON
M1B 3W3
BUS: 416-281-8090
FAX: 416-281-2753

HOMELIFE
HIGHER STANDARDS

முதுசங்களைத் தேடி...

லண்டன் காரை நலன்புரிச் சங்கமும் கனடா காரை கலாச்சார மன்றமும் இணைந்து "முதுசங்களைத் தேடி" அதாவது எங்கள் முன்னோர்களின் அரிய ஆக்கங்களை அவர்கள் பற்றிய தகவல்களை மீள உலகெங்கும் வாழும் எங்கள் ஊர் மக்கள் முன் கொண்டு வருதல்,

இதன் முதல் கட்டமாக வித்துவான் FXC நடராஜா அவர்களால்1971 ஆம் ஆண்டு தை மாதம் வெளியிடப்பட்ட "காரை மான்மியம்" எனும் அரிய நூலின் இரண்டாம் பதிப்பினை 07– 01– 2012 சனிக்கிழமை ஈழத்து சிதம்பர திருவெம்பாவை 9 ம் நாள் தேர்த் திருவிழா அன்று காரைநகர் காரை அபிவிருத்தி சபையின் ஊடாக லண்டன் காரை நலன் புரிச் சங்கமும், கனடா காரை கலாச்சார மன்றத்தினரும் இணைந்து வெளியிடுகின்றனர். இதனை அடுத்து லண்டன், கனடா, சுவிஸ், பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இந்த நூலை அந்தந்த சங்கங்கள், மன்றங்களின் ஊடாக வெளியிட உள்ளனர்.

இந்த நூல் வெளியீட்டின் மூலம் கிடைக்கும் நிதி முதுசங்களைத் தேடி எனும் திட்டத்தின் ஊடாக மீண்டும் இன்னும் ஒரு நல்ல படைப்பை வெளிக்கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்படும். உதாரணத்திற்கு அல்லின் ஏபிரகாம் அவர்கள் மற்றும் திருவாசகத்திற்கு உரை எழுதிய பண்டிதர் சு. அம்பலவணார் அவர்கள் இப்படி எம் ஊரில் வாழ்ந்து மறைந்த பல மகான்களின் படைப்புகள் அவர்கள் பற்றி எல்லாம் வெளிக்கொண்டுவருவது.

"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பார்கள். மேலும் அடுத்துவரும் முதுசங்களைத்தேடி நூல் வெளியயீட்டில் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கமும் சுவீஸ் காரை அபிவிருத்தி சபையும் இணைந்து கொள்கின்றது என்பதனை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அறியத் தருகின்றோம்.

ஸ்ரீநிவாச மங்கள பவனம்

கதிர்காம முருகன் துணை

காரைநகர் கதிர்காமசுவாமி கோவில் பிரதம குருவும் கோவில் தர்மகர்த்தாவும் ஆகிய சிவஸ்ரீ ஸ்ரீநிவாசக ஐயர் மகனும், புன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் குருவும் சுழிபுரம் சுப்பையா குருக்கள் அவர்களின் பேரனுமாகிய அலங்கார சிவாச்சாரியார்

சிவஸ்ரீ வாகீஸ்வர குருக்கள்

(இந்துமத குரு, கனேடிய திருமணப் பதிவாளர்)

புதிய வில்லு மணவறை, முத்து மணவறை, பூ மணவறை, குத்து விளக்கு, வாழை மரம், மண்ட அலங்காரம், மணிமாலைகள், தவண்ணக் கோலங்கள், ஆராத்திப் பொருட்கள், நிறைகுடம், கொத்து நிறைநாழி அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்

சகல இந்துமத கிரியைகளுக்கும் மங்களகர சேவைகளுக்கும்
வாகீஸ் ஐயா

கல்யாண மண்டபம், புதிய ஊஞ்சல், திருமணம், பதிவுத் திருமணம், ருதுசாந்தி, புதுமனைப் புகுவிழா, புதுக்கடைத் திறநப்பு விழா, புண்ணியாக வாசனம், திவசம், நவக்கிரக சாந்தி மற்றும் பூ மாலைகள், ஜடை நாகம், தலைப் பாகை, தலைநகை, பூச் செண்டு, பூசைக் குரிய பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

Tel: 416 298 5942 Cell: 416 704 5942

காரைநகரும் இன்றைய கல்வி நிலையும்

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானிலும் நனி சிறந்தனவே"

நாம் பிறந்து வளர்ந்த பூமி காரைநகர் என்றால் மிகையாகாது. ஈழநாட்டில் ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலை தன்னகத்தே கொண்டதும் வெளியிடங்களில் உள்ள மக்களை கவரும் "கசூரினா கடற்கரையை தன்னகத்தே கொண்டதும் நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்ட பிரதேசமுமாக விளங்குவது காரைநகர். கடல் வளமிக்க பிரதேசம் காரைநகர். காரைநகர் வரைபடத்தை நாம் பார்ப்போமாயின் அதன் பிரிவுகள் நன்கு தெரியும். வலந்தலை, களபூமி, துறைமுகம், பலுகாடு, கருங்காலி, வாரிவளவு, தங்கோடை, ஆயிலி, கோவளம், புதுறோட், மாப்பாணவூரி, மொந்திபுலம் எனப் பல்வேறு பிரிவுகள் உள்ளன. வலந்தலைச் சந்தியையும் பொன்னாலைச் சந்தியையும் இணைக்கும் பாலமாக வீதியொன்று அமைந்துள்ளது. காரைநகர் இ.போ.ச(C.T.B) சாலை விளானையில் இருந்தாலும் கிழக்கு வீதி, மேற்கு வீதி வழிகளால் பஸ்சேவை தினமும் அதிகாலை முதல் நள்ளிரவுவரை நடைபெற்று வருவது வழக்கம்.

காரைநகர் மக்கள் சமயப்பற்று மிக்கவர்கள். அதனால் ஒவ்வொரு பகுதிகளிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க சைவ ஆலயங்கள் பல மிளிர்ந்தன. அவற்றில் ஈழத்துச் சிதம்பரம், பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி யம்மன் ஆலயம், திக்கரை முருகமூர்த்தி ஆலயம், வாரிவளவு பிள்ளையார் ஆலயம், கருங்காலி முருகமூர்த்தி ஆலயம், பயிரிக்கூடல் முருகன் ஆலயம், மணற்காடு அம்மன் ஆலயம், வியாவில் ஐயனார் கோயில், மணற்பிட்டி சிவசுப்பிரமணியம் ஆலயம், மடத்துக்கரை அம்மன் ஆலயம் போன்ற பல ஆலயங்களைக் குறிப்பிடலாம். காரைநகரில் இரண்டு பிரதேச சபைகள் உள்ளன. அவையாவன காரைநகர் வடக்கு பிரதேசசபை, காரைநகர் தெற்கு பிரதேசசபை என்பன.

காரைநகரில் பதி...கு பாடசாலைகள் உள்ளன அவற்றுள் கலாநிதி தியாகராசா ம.ம.வித்தியாலயம் (காரைநகர் இந்துக்கல்லூரி), யாழ்ரன் கல்லூரி என்பன A B பாடசாலைகளாகவும், களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், வியாவில் சைவ வித்தியாலயம் என்பன 1B பாடசாலைகளாகவும் ஏனைய பத்து பாடசாலைகளும் 1C பாடசாலை களாகவும் இருந்தன. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக சில பாடசாலைகள் இயங்காமல் இருந்து தற்போது இயங்குகின்றன. காரைநகர் கோட்டக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இந்தப் பதினான்கு பாடசாலைகளும் இயங்குகின்றன. இக்கோட்டக்கல்வி அலுவலகம் தீவக வலயக்கல்வி அலுவலகம் வடமாகாண கல்வித் திணைக்களம் கொழும்பு இசுறுபாய, பத்திரமுல்லையில் அமைந்துள்ள கல்வியமைச்சின் நிர்வாகத்தின் கீழுள்ளன. ஹிட்ஸ் பார்க் முன்பள்ளியில் பாடசாலையொன்று பதினான்கு மாணவருடன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இப்பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் செயற்பாட்டினால் மேலோங்கியது. அதிபர்கள் தமது பாடசாலைகள் உயர்நிலை அடையவேண்டுமென நன்கு பாடுபட்டனர். அப்படிப்பட்ட அதிபர்கள் வரிசையில் பலரைக் குறிப்பிடலாம். அத்துடன் அதேவரிசையில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் என்போ ரையும் குறிப்பிடலாம். 1931ம் ஆண்டு இப்பாடசாலை கள் இந்துபோட் நிர்வாகம் பாரமெடுத்தது. 1960ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது இப்பாடசாலைகளும் அரசினர் பாடசாலை களாக மாற்றம் அடைந்தன.

இப்பாடசாலைகளில் மிக முக்கியமான மூன்று பரீட்சைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன. அவையா வன தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த(சா.த) பரீட்சை, க.பொ.த(உ.த) பரீட்சை என்பன. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக மக்கள் இடம்

பெயர்ந்ததால் தற்போது பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை வழமையை விட வெகுவாகக் குறைந்துள்ளது. மாணவர் எண்ணிக்கை குறைவதால் சில பாடசாலைகளை மூடவேண்டிய நிலை கல்வித்திணைக்களத்திற்கு ஏற்படும். எனவே ஊர்ப்பற்றுள்ள வெளியிடங்களில் உள்ள மக்கள் வாடகைக்கு இருப்பதைவிட்டு தமது கிராமத்திலுள்ள சொந்த வீடுகளில் வாழ்வதன் மூலம் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். இதன் மூலம் எமது ஊரில் கல்வி அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்க முடியும். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்ற முதுமொழிக்கமைய கல்வி வளம் பெருகும்.

காரைநகர் மக்களில் பெரும்பாலானோர் வியாபாரம் செய்வதில் திறமை மிக்கவர்கள். தமது பெரு முயற்சியால் வியாபாரத்தில் ஈடுபட்டு பொருளீட்டினர். சிலர் விவசாயம் செய்வதில் கூடிய கவனம் காட்டினர். மற்றும் சிலர் அரச உத்தியோகங்களை மேற் கொண்டனர். இன்னும் சிலர் கூலி வேலைகளின் ஈடுபட்டனர். இன்னும் சிலர் தச்சுவேலை, முடிவெட்டுதல், சுருட்டுத்தொழில், மீன் பிடித்தல் போன்ற பல்வேறு தொழில்கள் செய்தனர். காரைநகர் மக்கள் விடாமுயற்சியும், இறைபக்தியும், ஊர்ப்பற்றும் மிக்கவர்கள். காரைநகர் கோயில்களில் மகோற்சவம் தொடங்கி விட்டால் இலங்கையில் எப்பாகத்தில் காரைநகர் மக்கள் இருந்தாலும் உடனடியாக எமது கிராமத்திற்கு வந்து கோயிலுக்குச் சென்று வணங்கும் பழக்கம் உடையவர்கள்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றார் தொழாரெனின்"
என்ற வள்ளுவர்வாக்கு இங்கு பொருத்தமானது.

கனடாவில் வாழும் காரைநகர் மக்களால் உருவாக்கப்பட்ட காரை கலாச்சார மன்றம் காரைநகர் கிராமத்தின் வளர்ச்சிக்காக பல அளப்பரிய சேவைகளைச் செய்து வருகின்றது. காரைநகர் பாடசாலைகள், கோயில்கள், ஏழை மக்கள், நோயாளிகள் போன்றோருக்கு தம்மால் இயன்ற நிதியுதவி செய்து வருவது பாராட்டிற்குரியது.

வாழ்க! காரை கலாச்சார மன்றம் வளர்க! அதன் பணிகள்.

தம்பையா. அம்பிகைபாகன் B.Ed
சமாதான நீதவான்(அகில இலங்கை)
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்விப் பணிமனை, கொழும்பு.



Home Life GTA Realty Inc., Brokerage

தரமான சுற்றாடலில்
உங்கள் முகவரியை தெரிவு செய்திட...
அழையுங்கள்

Sekhar Kandiah *B.Sc.Eng*
Sales Representative

5215 Finch Ave East, Suit 203, Toronto, Ontario, M1S 0C2
Bus: 416-321-6969 Fax: 416-321-6963
Cell: 416 918 8079
email: s.kandiah@rogers.com

கொடும்பாவி சாகாளோ கோடிமழை பெய்யாதோ

அ.காண்டீபன்

காரைநகரில் மழையில்லாமல் ஏற்பட்ட வறட்சியால் தண்ணீர் தட்டுப்பாடு நிழவுகின்றது. வறட்சி காரணமாக சுன்னாகம் பகுதியில் நீர்பெறுவதில் பாரிய நெருக்கடிகள் அதனால் குடிநீர் பிரச்சனைக்கு காரைநகர் பிரதேச சபை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையிடம் உதவி கேட்டுள்ளது. காரை நகரில் 1946 தொடர்ந்து மூன்று வருடம் மழையில்லை கடும் வறட்சி அரசாங்கம் குடும்ப அங்கத்தவர்களை எண்ணி அதற்கு ஏற்றவாறு கூப்பனுக்கு தண்ணீர் கொடுத்தது. ஆனால், விவசாயத்திற்கும் ஆடு மாடுகளுக்கும் கட்டாயம் மழை பெய்தே ஆக வேண்டும். காரைநகரில் விவசாயம் மழையை நம்பியே இருக்கிறது. தண்ணி இல்லாமல் கால்நடைகள் செத்துப்போகும் அல்லது விற்க வேண்டி வரும்.

சுமார் 25 வருடத்திற்கு முன்னம் வரை மழை பெய்யாவிட்டால் ஊருக்குள் மூதேவி குடியேறியதால் தான் மழையில்லாமல் போனதாகக் கருதி கொடும்பாவி எரிப்பது வழக்கம். ஊரில் பெருசுகள் "மழையைக் காணம் ஒருக்கா கொடும்பாவி எரிச்சா நல்லது" என்று கதைக்க தொடங்கினால் போதும் பொடியங்களுக்கு கொண்டாட்டம். அந்த காலத்தில் இப்படியான நிகழ்வுகள்தான் பொழுதுபோக்காவும் இருந்தது. ஊரில் இருக்கிற பொடியங்கள் சேர்ந்து தடிகள் வைக்கோல், சீலை கொண்டு கொடும்பாவி கட்டுவினம். சில நேரம் கொடும்பாவியை சில்லுப்பூட்டிய பலகையில் நிற்கவைத்தும் கட்டுவார்கள். பிறகு சூரியன் மறைய சில வயது முதிர்ந்த பெண்களும் ஒப்பு படிக்க வந்து சேர்வார்கள். அப்படி பெண்கள் வராட்டி, ஆண்களே ஒப்பு படிக்க பெண்கள் வேடம் போடுவதும் உண்டு. அந்த காலத்தில் மின்சாரமில்லாததால் தீவட்டிகள், தீப்பந்தங்களும் தயார் செய்யப்பட்டிருக்கும்.

இந்த தீப்பந்தங்களை எரித்துக் கொண்டு ஊரில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டு படலைக்கு முன் நிண்டு மாரடித்து ஒப்பாரி பாடுவினம். ஒப்பாரி பாடல்கள் கிராமிய பாடல் என்பதால் ஊருக்கு ஊர் சில மாற்றங்கள் இருக்கும். ஆனாலும் எல்லா ஒப்பாரி பாடல்களும் மூதேவியை திட்டியும் வர்ணபகவானை கெஞ்சியும் இருக்கும். இடப்பெயர்வினால் கொடும்பாவி எரிக்கும் வழக்கம் எம்மவர் மத்தியில் மறந்து போய்விட்டது. இந்த ஒப்பாரி பாடலை ஊரில் வயதுபோனவர்களிடமும் இணையத்திலும் தேடியும் முழுமையாக கிடைக்கவில்லை. கிடைத்த பகுதியை தருகின்றேன்..

கொடும்பாவி சாகாளோ கோடிமழை பெய்யாதோ
மாபாவி சாகாளோ ஒரு மாரி மழை பெய்யாதோ
கெட்ட கொடும்பாவி கேடுகெட்ட மாபாவி
மாபாவி சண்டாளி இங்கு மாரி மழை பெய்யாதோ
எட்டுத் திட்டை மா இடித்து
ஏழு திட்டை இறக்கி தெள்ளி
மா குழைக்க தண்ணி இல்லை
மானத்து ராசாவே மேகத்து மந்திரியே
வர்னனுடன் தேவியரே இங்கு
ஒரு மழையை வரக்காட்டாயோ

வட்டிக்கோ நெல் வாங்கி
வயலை விதைத்து வைத்தோம்
வட்டி வளருதல்லோ
மானத்து ராசாவே மேகத்து மந்திரியே இங்கு
ஒருமழையை வரக் காட்டாயோ

கூடை கொண்டு எரு பொறுக்கி
குளம் கரைய சேராடி
மாடு கொண்டு வயல் உழுது
நெல்லை விதைத்து வைத்தோம் நாங்கள்
வளர்த்த பயிர் வாடுதல்லோ சோருதல்லோ
மானத்து ராசாவே மேகத்து மந்திரியே
ஒரு மழையை வரக்காட்டாயோ

ஊசி போல் மின்னல் மின்னி
உலக்கை போல் இடி இடித்து
பாசி போல் படர்ந்த மழை– இங்கு
ஒரு பெரும் துமியாய் துமிக்குதில்லை

திட்டை உரல் மானத்து வானத்து
இப்படியாக ஒப்பாரி நீண்டு போகும். தொண்டை
நோக இப்படி ஒப்பாரி பாடி கொடும்பாவி இழுத்து
வருபவர்களுக்கு சில வீடுகளில்
கோப்பி/தேத்தண்ணியும், சில வீடுகளில்
தீப்பந்தத்திற்கு எண்ணெய்யும், கூடவே உண்டியலில்
காசும் போடுவார்கள். ஒரு சிலர் படலையை
கட்டிவிட்டு வீட்டுக்குள்ளே இருந்து விடுவார்கள்.
கொடும்பாவி இழுப்பவர்கள் சும்மாவா விடுவார்கள்.
உடனே தமது ஒப்பாரியை இப்படி
நக்கலாக பாடுவார்கள்...

கொடும்பாவி சாகாளோ கோடிமழை பெய்யாதோ
இந்த புண்ணியவான் படலையிலே ஒரு புழுத்த மழை
பெய்யாதோ
கொடும்பாவி சாகாளோ கோடிமழை பெய்யாதோ
இந்த தருமவான் படலையிலே ஒரு சலித்த மழை
பெய்யாதோ

ஊரெல்லம் கொடும்பாவி இழுத்து முடிய
நடுச்சாமமாகி விடும், கடசியாக கொண்டுவந்து
ஒரு பொது இடத்தில் எரிப்பார்கள். கோவளத்தில்
"மெலிஞ்சோடை" மைதானத்துக்கு கொண்டு வந்து
அங்கும் ஒப்பாரி பாடி எரிப்பது வழக்கம்.
கொடும்பாவி எரித்தல் என்பது மூதேவியின் மரண
சடங்காக கருதுவதால் கொடும்பாவி இழுத்தவர்கள்
வீட்டுக்குச் சென்று தோய்வார்கள். சிலவேளை
கோவளக் கடற்கரைக்கும் அந்த நடுச்சாமத்தில்
குளிக்கப் போவார்கள். அடுத்த நாள் முதல்நாள்
சேர்த்த காசுக்கு மெலிஞ்சோடையில் பச்சையரிசி
கஞ்சி காய்ச்சி ஊர் மக்களுக்கு கொடுத்து
குடிப்பார்கள். காகம் இருக்க பனம்பழம் விழுந்த
கதையாய் மழையும் சில தினங்களில் பெய்யும்!!! ம்...
அதெல்லாம் ஒருகாலம், இப்ப எங்க?

வாடகைப் பணத்தை சொந்த வீடாக்க
இன்றைய சேமிப்பை நாளைய முதலீடாக்க.....
வீடு வாங்க விற்க
நம்பிக்கையுடன் அழையுங்கள்
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc., Brokerage
Gugarajan Mahathevan
Sales Representative
7 Eastvale Drive #205 Markham , ON L3S 4N8
Tel:(905)201-9977, Fax:(905)201-9229,
Cell:(647)388-7065
Any kind of realestate needs please contact me.

காரைநகரும் விளையாட்டுத் துறையும்

மனவளம் நிறைந்த காரைநகர் மக்கள் பழமைக்கு பழமையாயும் புதுமைக்கு புதுமையாயும் தாம் பிறந்த பூமிக்கு புகழ் தேடித் தந்தார்கள். காரைநகரில் தோன்றி மறைந்து புகழ் சேர்த்த பெருமக்கள் வரிசையில் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டோரும் உள்ளனர்.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை உடற்கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு கல்விமுறையில் சிறப்பான வகிபாகத்தை உடற் கல்வி பெற்றுள்ளது. உடற்கல்வி மாணவர்களின் ஆளுமை யை செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தி, வாழ்க்கை யின் பல்வேறு கட்டங்களிலும் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்கத் தேவைப்படும் பக்குவத்தையும், பயிற்சியையும் வழங்குகின்றது. மாணவர்களின் சமநிலை ஆளுமை வளர்ச்சியுற இது அத்திவாரமாக அமைகின்றது.

இளைஞர்களின் சிந்தனை செயல்கள், வழி தவறி செல்லாமல் மாலை வேளைகளில் பயன்தரு செயல் களில் ஈடுபட விளையாட்டு வழி அமைக்கின்றது.

விளையாட்டில் ஈடுபடுவோர் உடல் வலிமை பெறல் மாத்திரமன்றி சகவீரர்களுடன் சேர்ந்து இயங்கி தன் அணியின் வெற்றிக்கு உழைக்கும் மனப்பான்மை, மதிநுட்பத்துடன் செயற்படல், மனக்கலக்கம் இன்றி செயலை எதிர் கொள்ளல், கலக்கமற்ற வீரம் போன்ற நற்பண்புகளை உருவாக்கும் களமாக விளையாட்டு மைதானங்கள் திகழ்கின்றன.

நமது இளைஞர்கள் மாலை வேளைகளில் கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், யாழ்ரன் கல்லூரி, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், வியாவில் சைவ வித்தியாலயம் ஆகிய பாடசாலை களின் விளையாட்டு மைதானங்களில் தரவை, சிதம்பரா மூர்த்தி கேணியடி, மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வீதி, சடையாளி, நீலிப்பந்தனை சனசமூக நிலையம், கேசடை வீதியில் உள்ள வயல்வெளி, வாரிவளவு கற்பக விநாயகர்வீதி, கோவளம் விளையாட்டு மைதானம், சிவகாமி அம்மன் கோவிலடி, வியாவில் சனசமூக நிலையம், தோப்புக்காடு போன்ற இடங்களில் விளையாட்டில் ஈடுபடுவர்.

1920ம் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் விளையாட்டில் உயர் அந்தஸ்தை பெற்று இருந்த ஆசிரியர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை (சிவன் கோவிலடி) அவர்களால் காரை விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கெப்டன் தர்மரத்தினம் அவருடைய சகோதரர் கனகரத்தினம் (புது றோட்டு) ஆகியோர் இப்பணியில் இணைந்து பணியாற்றினர். காரை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், மலாய் நாட்டில் சேவையாற்றி ஓய்வூதியம் பெற்று காரை நகரில் வாழ்ந்தவர்கள், காரைவாழ் வர்த்தகப் பெருமக்கள் கழகத்திற்கு பொருளுதவி வழங்கினர்.

இக்காலப்பகுதிகளில் தரவை மைதானம் விளையாட்டு நிகழ்வுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. காரைநகரின் சகல குறிச்சி இளைஞர்களும் மாலை வேளைகளில் இங்கு வந்து சேருவர். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் யாழ் மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் இங்கு வந்து சேருவர். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரிகள், கழகங்களுடன் காரை விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றியது. 1933இல் சென்பற்றிக்ஸ் (St.Patrick's League) கழகத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டிகளில் கழகம் பங்கு கொண்டது. யாழ் மாவட்ட உதைபந்தாட்ட தெரிவு அணியில் காரை விளையாட்டு கழக வீரர்கள் இடம் பெற்றனர்.

யாழ் மாவட்ட பிரபல பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணியில் காரைநகர் வீரர்கள் முன்னணியில் இருந்தனர். 1933, 1945ம் ஆண்டு காலப்பகுதியில் காரை விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண உதை பந்தாட்டத்தில் செல்வாக்கு பெற்றிருந்தது.

ஒரு காலகட்டத்தில் அமரர்கள் செல்வரத்தினம் (மாப்பாணவூரி) தர்மரத்தினம், கனகரத்தினம், (புது றோட்டு) சீவரத்தினம் (கோவளம்) நவரத்தினம் (மல்லிகை) காரை விளையாட்டுக் கழக உதை பந்தாட்ட அணியில் விளையாடியமையால் "இரத்தினங்கள் அணி" எனவும் அழைக்கப்பட்டது. அமரர் F.X.C. நடராஜா ஆகியோர் குரடடியஉம நிலையில் விளையாடினார்.

அமரர் சண்முகம் சுந்தரசிவம் (மருதடி) யாழப்பாண ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்ட வீரர் திரு. ஆறுமுகம் இரத்தினகோபால் (புது றோட்டு) 1954இல் சென்னை அணியுடன் போட்டியிட்ட யாழ் மாவட்ட அணித் தலைவர், யாழ்ப்பாண விக்டோரியன் கழகத்தின் அணித் தலைவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பயிற்றுனராக பத்து ஆண்டுகள் பணியாற்றி கல்லூரிக்கு பல வெற்றிகளை தேடிக் கொடுத்தவர். காரை இந்துக் கல்லூரி, காரை விளையாட்டுக் கழகம், சோலையான் விளையாட்டுக் கழகம், கோவளம் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் பயிற்றுவிப்பாளர். யாழ்ப்பாண மாவட்டத்தில் உதைபந்தாட்டத்தில் சிறப்பான இடத்தை வகித்தவர். திரு.A.K.நடராஜா (மாப்பாணவூரி) விக்டோரியின் அணியில் இடம் பெற்று Ceylon Football Assoccation நடாத்திய போட்டிகளில் பங்குபற்றியவர். அமரர் செல்லப்பா சுப்பிரமணியம் (மருதடி) காரை விளையாட்டுக் கழகத்தின் சிறந்த முன்னணி வீரர். நொத்தாரிசு க.மு.தர்மராஜா சிறந்த கோல் காப்பாளர். அமரர் ஆ.குமாரசாமி உதைபந்தாட்ட போட்டிகள் ஓட்டப் போட்டிகளில் கல்லூரிக் காலங்களில் பங்குபற்றியவர். சென்னை Y.M.C.A கல்லூரியில் உடற்கல்விப் பயிற்சிநெறி பயிலும் போது லு.ஆ.ஊ.யு அணியின் உதைபந்தாட்ட வீரர் காரைநகர் இந்துக் கல்லூரி விளையாட்டுத் துறை ஆசிரியராக கடமை ஆற்றியவர்.

1960களில் மலேசியாவில் இருந்து வருகை தந்த திரு. நல்லையா பொன்னையா (மாப்பாணவூரி) காரை விளையாட்டுக் கழகத்தை மீண்டும் இயக்கினார். கழகத்தின் செயற்பாடுகளுக்கு பொருளுதவி வழங்கி பலம் மிக்க உதைபந்தாட்ட அணியை உருவாக்கினார். கழகத்தின் உதைபந்தாட்ட அணித்தலைவராக இருந்து கழகத்தின் வெற்றிக்கு காரணமாயிருந்தார்.

1970களில் திரு. நவரத்தினம் தருமராஜா (மல்லிகை) பொருளுதவி வழங்கினார். திரு. தர்மராஜா உதைபந்தாட்ட, கரப்பந்து, துடுப்பாட்ட அணிகளுக்கு தலைமை தாங்கினார். இக்காலகட்டத்தில் கழகம் நெடுங்கேணி பிரிவுக்கு விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக சுற்றுலாவை மேற்கொண்டது.

1979ஆம் ஆண்டு காரை விளையாட்டுக் கழகம் நிறுவனமயப்படுத்தப்பட்டது. கழகத்திற்கு நிருவாகம், வங்கிக் கணக்கு, இலச்சனை, கொடி, யேர்சி (JERSEY) என்பன உருவாக்கப்பட்டன. 20.10.1979இல் காரை விளையாட்டுக் கழகத்திற்கு தேவையான நிதியை உருவாக்குவதற்காக தீபாவளிச் சிறப்பிதழ் ஒன்று கலை நிகழ்வுகளுடனும் நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் பிரதம அதிதி சட்டத்தரணி ந. சிறிகாந்தா அவர்களினால் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது. கழகத்தின் போஷகர்களாக காரை இந்துக் கல்லூரி, யாழ்ரன் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. அ. சோமஸ்கந்தன், திரு. அ. தியாகராஜா, வேதர் அடைப்பைச் சேர்ந்த கொழும்பு பிரபல வர்த்தகர் திரு. செ. பரம்சோதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இச்சிறப்பிதழ் வெளியிடுவதற்கான விளம்பரங்களை கழகத்தின் போஷகர் திரு. செ. பரம்சோதி பெற்றுத் தந்தமை குறிப்பிடத்தக்கது.

1970இன் பிற்பகுதிகளில் காரை விளையாட்டுக் கழகத்தின் மீள் எழுச்சியும், செயற்பாடுகளும் காரைநகரில் பல விளையாட்டுக் கழகங்களின் தோற்றத்திற்கும், விளையாட்டு நிகழ்வுகள் சுறுசுறுப்பு அடையவும், காரணமாயிற்று இக்காலகட்டத்தில் காரைநகர் கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட, கரப்பந்து, துடுப்பாட்ட போட்டிகள் ஆரோக்கியமான சூழலில் நடைபெற்றது. களபூமி சனசமூக நிலைய இளைஞர்கள் காரை விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து செயற்பட்டமை காரை விளையாட்டுக் கழகம் பல வெற்றிகளை பெறவும் ஸ்திரமான செயற்பாட்டிற்கும் உறுதுணையாயிற்று.

1980களில் காரைநகருக்கு ஒரு பொது விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக காரை விளையாட்டுக் கழகம் வலந்தலைச் சந்தியில் (தற்போது உதவி அரசாங்க அதிபர் பணிமனை, விவசாய விரிவாக்க பணிமனை, தொழிற்பயிற்சி நிலையம் உள்ள வளாகம்) தென் இந்தியா சிதம்பர தேவஸ்தானத்திற்கு உரித்தான காணியில் உள்ள ஒரு பகுதியை 99 ஆண்டுகளுக்கு தம்பிரான் சுவாமிகளிடம் குத்தகைக்கு பெற்று மைதானம் அமைக்க எடுத்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

காரை விளையாட்டுக் கழகம், ஊர்காவற்துறை, அராலி, யாழ்ப்பாணம் பண்டதரிப்பு ஆகிய இடங்களில் நடாத்தப் பெற்ற சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றியது. அதே வேளை சிநேக பூர்வ போட்டிகளிலும் பங்கு பற்றியது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க பிரிவில் விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும் "பாலா பிறதர்ஸ்" தீவுப் பகுதி கழகங்களுக்கிடையில் நடாத்திய போட்டிகளிலும் பங்குபற்றியது. "பாலா பிறதர்ஸ்" ஸ்தாபனத்தால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டி "சீவலி டயறி" வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

வாரிவளவு நல்லியக்க சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 14 விளையாட்டு நிகழ்வுகளில் 13 வெற்றிக் கேடயங்களையும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் காரை விளையாட்டுக் கழக யுஇ டீ அணிகள் பங்குபற்றி 1ம், 2ம் இடங்களையும் பெற்றது. தீபாவளி தினத்தன்று காரைநகர் கடற்படையும் காரை விளையாட்டுக் கழகமும் பங்குபற்றும் உதைபந்தாட்ட போட்டி ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றது.

காரைநகரில் இயங்கும் விளையாட்டுக் கழகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களை கொண்ட அணி இக்காலத்தில் காரைநகருக்கு வெளியே நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றியமை சிறப்பம்சமாகும்.

1991ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது காரை விளையாட்டுக் கழகம் அனைத்து உடமைகளையும் இழந்தமையும், அங்கத்தவர்கள் பல்வேறு இடங் களிலும் வாழ்கின்றமையும் காரை விளையாட்டுக் கழகத்தை செயற்படாநிலைக்கு தள்ளியது. கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டிக்கு காரை விளையாட்டுக் கழகத்தால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக அமரர்களான விளையாட்டு வீரர்கள் விளையாட்டுத் துறை ஆர்வலர்கள் ஞாபகார்த்தமாக காரை விளையாட்டு கழக அங்கத்தவர்கள் அமரர்களான வீரர்கள் ஆர்வலர்களின் உறவினர்களால் 87,000/= பெறுமதியான சுழல் வெற்றிக் கேடயங்கள் பதினெட்டும் வீரர்களுக்கான இருபத்து மூன்று வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டது. அன்னார்களின் பங்களிப்பு தொ[illegible]ான துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது. கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய உதைபந்தாட்ட அணிகளுக்கான (Jersey) 65,000/= பெறுமதியான யேர்சி வழங்கப்பட்டது. காரை விளையாட்டுக் கழகத்தை இயக்குவதற்கான சிந்தனைகள் செயற்றிட்டங்கள் இருப்பினும் இயக்குவதில் சிரமங்கள் தென்படுகின்றன. காரைநகர் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கான முன்மொழிவு கள் காரை விளையாட்டுக் கழகத்திடம் இருப்பதால் எதிர்காலத்தில் பணிகள் ஆரம்பிக்கும் சாத்தியம் உண்டு.

1930–1937ஆம் ஆண்டு வரைக்கும் சித்திரை பாடசாலை விடுமுறை காலத்தில் அகில காரைநகர் மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் காரைநகரின் சகல பகுதிகளிலும் வாழ்ந்த மக்களும் உயர்கல்விக்காக யாழ்நகரின் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்ற காரைவாழ் மாணவர்களும் மிக்க ஆர்வத்துடன் பங்குபற்றினர். இப்போட்டிகளை நடாத்துவதில் பெரும் பங்காற்றியவர் நடுத்தெருவைச் சேர்ந்த அமரர் திரு. நா. பொன்னம்பலம் காரை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கியவர். இவருடன் சேர்ந்து உழைத்தவர் மொறக்கோ சுப்பிரமணியம் எனப் போற்றப்பட்டு வந்த களபூமி மு.மு.சுப்பிரமணியம் அப்புக்காத்தர் திரு. நா. பொன்னம்பலம் காரை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முதற் செயலாளர். அரச சேவையில் எழுதுவினைஞராக சேர்ந்து கணக்காளராகப் பதவி உயர்வு பெற்றவர்.

தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்

தோப்புக்காடு கிராமத்தில் பல குழுக்களாக விளையாட்டில் ஈடுபட்டு இருந்த இளைஞர்கள் தமது கிராமத்து விளையாட்டு நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக 30.11.1979இல் தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்தனர். நாளடைவில் ஆர்வலர்கள் சமூகப் பிரதிநிதிகள், பெண்களை கழகத்தில் இணைத்துக் கொள்வதற்காக தோப்புக்காடு விளையாட்டுக் கழகம் என மாற்றமடைந்தது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப் பெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டியது. இப்பிரிவில் எல்லே விளையாட்டு நிகழ்விற்கான வெற்றிக் கேடயத்தை தொடர்ந்து பல ஆண்டுகளாக தோப்புக்காடு விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது. இக்காலப்பகுதியில் காரைநகரில் இயங்கிய விளையாட்டுக் கழகங்கள், கடற்படை அணி, இலங்கை போக்குவரத்துச் சபை அணிகளுடன் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து

கொண்டது. காரைநகர் தெரிவு அணியிலும் தோப்புக்காடு விளையாட்டுக் கழக வீரர் இடம் பெற்றனர்.

1985ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இப்பிரதேச மக்கள் வட்டுக்கோட்டையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் பொழுது வலிகாமம் மேற்குப் பிரிவில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிக் கேடயங்களைப் பெற்றுக் கொண்டனர். மேலும் யாழ் மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்கள் திருமலை நட்சத்திர விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் உதைபந்தாட்ட போட்டியில் பங்குபற்றினர்.

தோப்புக்காடு கிராமத்தினர் மீளக்குடியமர்ந்த பின்னர் காரைநகர் உதவி அரசாங்க பிரிவினால் நடாத்தப் பெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்றுள்ளனர். இக்கிராம மக்கள் உறுதியான வாழ்வாதாரமின்றி தம் வாழ்க்கையை நடாத்திக் கொண்டு இருக்கிறார்கள். தோப்புக்காடு விளையாட்டுக் கழகம் ஊக்குவிக்கப்படுமிடத்து தரமான வீரர்களை உருவாக்கும்.

சோலையான் விளையாட்டுக் கழகம்

வேதர் அடைப்பு, வடகாடு, அல்லின் வீதி போன்ற குறிச்சிகளில் வசித்த விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்களை ஊக்குவித்து விளையாட்டுத் துறையில் ஈடுபடுத்தும் நோக்குடன் 1981ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் நாள் திரு. மு.ஊ. கந்தசாமி (இ.போ.ச காரைநகர் சாலை முகாமையாளர்) எடுத்துக் கொண்ட பயனுறு முயற்சியால் உருவாக்கப்பட்டது. கழகத்தை உருவாக்குவதிலும், வளர்ச்சியிலும், பயிற்சி வழங்குவதிலும் விளையாட்டு வீரர் அமரர் ஆ. இரத்தினகோபால் பேராசிரியர் வே. இராமகிருஸ்ணன், அமரர் திரு. ஆ. கனகசபை, திரு. த. துரைசாமி (ஆசிரியர்) ஆகியோர் பங்குபற்றினர். சோலையான் விளையாட்டுக் கழகம் இயங்கிய பிரதேச மக்கள் உணர்வுபூர்வமாக வழங்கிய ஒத்துழைப்பு கழகம் மிகக் குறுகிய காலத்தில் மிகப் பெரிய வெற்றிகளை அடையக் காரணமாயிற்று. 1981ம் ஆண்டு மார்ச் மாதம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கழகம் 1ஆம் இடத்தை ஆண்கள் பெண்கள் பிரிவில் பெற்று வெற்றிக் கேடயத்தை பெற்றுக் கொண்டது. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் 1ஆம் இடத்தை தனதாக்கி கொண்டது. 1989ஆம் ஆண்டு சித்திரை 15ஆம் நாள் ஆண்டு விழாவை கழக மைதானத்தில் வெகு விமரிசையாக கொண்டாடியது. இவ்விழாவில் காரைநகரில் செயற்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றின. கழகத்தின் ஆரம்பக் காலத்தில் திரு. ஸ. செல்வச்சந்திரன், திரு. ஸ. தேவராஜா, திரு. ஸ. நடராஜா, திரு. வே. குலானந்தராசா, பொ. சிறிஸ்கந்தராஜா ஆகியோர் கழகத்தின் ஆரம்பகால வெற்றிகளுக்காக உழைத்தவர்கள். திரு.செல்லையா ஞானேஸ்வரன் (ஞானி – வேதர் அடைப்பு) யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று சாதனை ஏற்படுத்தியதுடன் தேசிய மட்ட போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றார்.

மீள்குடியேற்றத்தின் பின் திரு. மு.ஊ. கந்தசாமியின் முயற்சியின் பெறுபேறாக 1997, 1998, 1999ம் ஆண்டு காலப் பகுதிகளில் கழகம் வெற்றிகளை பெற்றுக் கொண்டது. இக்காலகட்டத்தில் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய விளையாட்டுத் துறை ஆசிரியர் திரு. அ. ஜெகதீஸ்வரனின் பயிற்சியும் வழிகாட்டலும் பாராட்டுக்குரியது எனக் குறிப்பிடுகிறார் திரு. மு. ஊ. கந்தசாமி.

கோவளம் விளையாட்டுக் கழகம்

விளையாட்டுத் துறையில் ஆற்றலும், ஆர்வமும் கொண்ட இளைஞர்கள் தம் ஆற்றலை வெளிப்படுத்த கோவளம் இளைஞர் மன்றம் என்ற ஓர் அமைப்பு ரீதியாக 1981இல் இருந்து செயற்பட ஆரம்பித்தனர். கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஒரு பகுதியில் வாசிகசாலை நூல்நிலையம் என்பவற்றை ஆரம்பித்த தோடு மெலிஞ்சியோடை மைதானத்தை தமது விளையாட்டு நிகழ்வுகளுக்கு பயன்படுத்தினர். 1981ல் ஒரு விளையாட்டு போட்டியை நடாத்தியது. 1982இலிருந்து பச்சை, சிவப்பு இல்லங்களை அமைத்து 20 – 40, 40 – 50, 50இற்கு மேல் எனப் பிரித்து விளையாட்டு போட்டிகளை நடத்தினர். 1990 வரை இப்போட்டிகள் கோவளத்திற்கு அண்மையிலுள்ள குறிச்சி மக்களின் போராதரவுடன் நடைபெற்றன. விளையாட்டு போட்டிக்கு ஊர் மக்கள் வயது வேறுபாடின்றி திரண்டிருப்பர்.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறும் போட்டிகளில் கழக வீரர்கள் பங்குபற்றி சாதனை நிகழ்த்தி உள்ளனர். 1982, 1983ம் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப் பெற்ற மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் வெற்றிக்

கிண்ணத்தை பெற்று பத்திரிகைகளினதும், விளையாட்டுதுறை அபிமானிகளினதும் பாராட்டையும் பெற்றது. வாரிவளவு நல்லியக்க சபையினால் நடாத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட வெற்றிக் கேடயத்தை பலமுறை பெற்றுக் கொண்ட கோவளம் இளைஞர் மன்றம் வன்பந்து துடுப்பாட்டத்திலும் ஈடுபட்டு வந்தது. மாவட்ட ரீதியில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியில் நடைபெறும் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற போட்டிகளில் கழகம் பங்குபற்றி வெற்றிக் கேடயங்களை பெற்றுக் கொண்டது. காரை விளையாட்டுக் கழகத்துடன் நடைபெறும் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பானதும் உணர்வு பூர்வமானது மாகும். காரைநகரில் அமைந்துள்ள கடற்படை அணியுடனும் 1981, 1982 ம் ஆண்டு காலப்பகுதியில் காற்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றியது.

கோவளம் இளைஞர் கழகத்தின் வெற்றியில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தனது பள்ளிப் பருவத்தில் விளையாட்டுத்துறையில் நன்கு பிரகாசித்து, பின்னர், அக்கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியராக சேவையாற்றிய திரு. த. சிவகுமாரின் வழிகாட்டலும் அனுபவமும் கோவளம் இளைஞர் மன்றம் ஆற்றல் மிக்கதாக வளர்ச்சியுற காரணமாக அமைந்தது.

திரு. செல்வரத்தினம் நீதிபதி மார்க் ஓடுகள் உரிமையாளர், திரு. வே. பரஞ்சோதி, திரு. சு. தவராசன், திரு. சு. உருத்திரசிங்கம முதலான கோவளம் வர்த்தகப் பெருமக்களின் அனுசரணையும் உற்சாகமும் குறிப்பிடத்தக்கது.

திரு. அ. தியாகராஜா திரு. S. சேனாதிராஜா, திரு. P. பொன்னுசாமி ஆகியேர்களின் வழிகாட்டல் மேலும் உதவியாக அமைந்தது. சகல விளையாட்டு நிகழ்வுகளிலும் ஈடுபடும் திறமை கொண்ட அணியினர் கழகத்தின் வெற்றிகளுக்கு காரணமாயினர். திரு. த. சிவகுமாரன், திரு. த. சிவபாலன், திரு. தி.சிவகணேசன், திரு. தி.சிவசோதி, செ.ஞானசோதி, அ.சர்வேஸ்வரன், திரு. அ.ஏகேஸ்வரன், ப. நந்தகுமாரன், சி. இந்திரன், சி. ரவீந்தின், த. கண்ணன், இ. இரவீந்திரன், இ. சுரேந்திரன் ஆகியோர் ஆவர்.

களபூமி சனசமூக நிலையம்

1970இன் இறுதிப் பகுதியில் 33ஆவது ஆண்டு விழாவை கொண்டாடியது. வீதி ஓட்டப் போட்டிகள், சைக்கிள் ஓட்டப் போட்டிகள், காரைநகர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் என இரண்டு வாரங்களாகக் கொண்டாட்டம் நீடித்தது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கதிர்வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். விழாவின் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

வாரிவளவு நல்லியக்க சபை

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை உடற்கல்வி என்பதை காரைநகரில் நடைமுறைப் படுத்தியவர் வாரிவளவு நல்லியக்க சபை செயலாளர் திரு. சி. பத்மநாதன் (பட்டுமாமா) பாலர் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்க 14 வகையான விளையாட்டு நிகழ்வுகள், காரைநகர் கடற்படையின் ஆதரவுடன் நீச்சல் போட்டி என்பனவற்றை சித்திரை மாதங்களில் நடாத்தி சித்திரை வருடப் பிறப்பை குதூகலமாக கொண்டாட காரைநகர் மக்கள் அனைவரையும் வாரிவளவிற்கு வரைவழைப்பார்.

அன்னாரின் கல்வி செயற்பாட்டினால் காரைநகர் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்துடன் இணைந்திருந்த காலத்தில் கோட்டத்தில் 25 மாணவர்கள் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய போது 12 மாணவர்கள் காரைநகரில் சித்தி எய்துவது வழமை. வாரிவளவு நல்லியக்க சபையின் வெற்றிடம் இப்பொழுது உணரப்படும் என நம்புகின்றேன். வாரிவளவு நல்லியக்க சபையை அமரர் பத்மநாதன் நிருவாக முறையில் மீண்டும் ஆரம்பிப்பது காலத்தின் தேவை.

தற்போது காரைநகரில் செயற்படும் விளையாட்டுக் கழகங்கள்

1996ம் ஆண்டு மீளக்குடியமர்ந்த பின்பு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையான தடகளப் போட்டியில் சோலையான் விளையாட்டுக் கழகம் காரைநகர் பிரதேச விளையாட்டு வீரர்களை உள்ளடக்கி அந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பிரதேச வெற்றிக் கேடயத்தை தனதாக்கி வெற்றியீட்டியது. 1997, 1998, 1999ஆம் காலப்பகுதியில் பின்வரும் கழகங்கள் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றின.

கலைத் தென்றல் :– கல்லாந்தாழ்வு பகுதி J/40
சிவகௌரி :– பெரியமணல் J/40

இளம்சோலை :– கல்லின் வீதி J/46
இளம் சுடர் :–
ஒளிச்சுடர் :– காரை மத்தி J/48
கோவளம் விளையாட்டுகழகம் :– J/41
இளம் தென்றல் விளையாட்டுக் கழகம்
தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்:– J/44
அம்பாள் விளையாட்டுக் கழகம் :–ஊரி J/42
துள்ளுமீன் விளையாட்டுக் கழகம் :–மருதபுரம் J/45
கலாநிதி விளையாட்டுக் கழகம் –வலந்தலை J/47
நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகம்:– மருதடி

2003ஆம் ஆண்டு காரைநகர் தனியான உதவி அரசாங்க பிரிவாக பிரிக்கப்பட்டதன் பின்னர் இக்கழகங்கள் இப்பிரிவின் கீழ் பதிவு செய்து செயற்பட்டன. பின்பு நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் இவைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைய ஆரம்பித்துவிட்டன. 2004, 2005, 2006, 2007, 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க விளையாட்டுக் கழகங்களாகப் பின்வருவன செயல்படுகின்றன.

1. ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம்
2. கோவளம் விளையாட்டுக் கழகம்
3. இளம் தென்றல் விளையாட்டுக் கழகம்
4. தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்
5. அம்பாள் விளையாட்டுக் கழகம்
6. கலாநிதி விளையாட்டுக் கழகம்
7. நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகம்

2011 ஆண்டிற்கான பிரதேச மட்ட தடகளப் போட்டியில் இக்கழகங்கள் பங்குபற்றின. இதில் கலாநிதி விளையாட்டுக்கழகம் வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. 2011ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பு தினத்தன்று விளையாட்டுக் கழகத்தினர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் புத்தாண்டை பொங்கல் பொங்கி கொண்டாடினர்.

பாடசாலை விளையாட்டு நிகழ்வுகள்

காரைநகர் பாடசாலைகளில் அன்றும் இன்றும் விளையாட்டுப் போட்டிகள் முதலாம் தவணையில் நடைபெறும். கலாநிதி.ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், யாழ்ரன் கல்லூரி, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய, மாணவர்கள் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பெறும் பெருவிளை யாட்டுக்களில் பங்குபற்றுவார்கள். கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார்கள்.

கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத் தின் முதலாவது மெய்வல்லுனர் போட்டி வலந்தலை கண்ணகி அம்மன் கோயிலுக்கு கிழக்கே உள்ள வெளியில் நடைபெற்றது. தினந்தோறும் மாணவர் களை ஆசிரியர்கள் விளையாட்டில் ஈடுபட இப் பகுதிக்கு அழைத்துச் செல்வது வழமை. 1953ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு வீதியில் அமைந்துள்ள குழுவி மதவுக்கு பின்புறமாகவுள்ள தச்சன் பனையடி என்னும் இடத்தில் மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட்டனர். அமரர் ந. நடராஜா ஞாபகார்த்த மண்டபம் மகப்பேற்று மருத்துவமனை ஆகியவற்றை நிர்மாணித்து எஞ்சிய காணியை அவரின் துணைவியார் அமரர் தங்கம்மா நடராஜா அவர்களால் தற்போதைய விளையாட்டு மைதானம் அன்பளிக்கப்பட்டது. இம்மைதானத்தை சீரமைப்பதில் அமரர் து.ஊ. அருளம்பலம் பெரும் பங் காற்றினார்.

1964ஆம் ஆண்டு கட்டப்பட்ட பார்வையாளர் அரங்கும், 1970களில் அமைக்கப்பட்ட சுற்று மதில்களும் சேதமடைந்துள்ளது. இம்மைதான விளையாட்டு இடப்பரப்பு விஸ்தரிக்கப்பட்டு, பார்வையாளர் அரங்கு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு, அத்திவாரமிடப் பட்டு கம்பி வலை சுற்று வேலி (றுசைந அநளா) அமைக்கப்பட்டு மழை காலங்களிலும் மைதானம் பாவிக்கக்கூடியதாக தயார் செய்யப்படல் வேண்டும். காரைநகர் மத்தியில் அமைந்துள்ள இம்மைதானம் மாவட்ட மைதான தரத்துக்கு தரம் உயர்த்துவதற்கு மேற்கூறிய பணிகளை நிறைவு செய்ய 10 மில்லியன் ரூபாய்கள் தேவைப்படும்.

யாழ்ரன் கல்லூரி விளையாட்டு மைதானம் கனடா காரை கலாசார மன்றத்தின் உதவியுடன் சுற்று வேலிகள் அமைக்கப்பட்டு போதுமான விளையாட்டு இடப்பரப்பு உள்ளதாக அமைந்துள்ளது. விளையாட்டு நிகழ்வுகளுக்கு உபயோகிக்கப்படும் இடத்தின் நிலத்தன்மையை அபிவிருத்தி செய்தல், புல் நடுதல் ஆகியன விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஊக்குவிப்பாக அமையும் எஞ்சியுள்ள நிலப்பரப்பில் பயன்தரு மரங்களை நாட்டிப் பேணல் கல்லூரியின் கவினுறு நிலையை மேம்படுத்தும்.

சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தின் ஆரம்பகால பிரதான மண்டபம் 10 ஆண்டுகளுக்கு மேலாக

பழுதடைந்து பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அம்மண்டபம் அகற்றப்பட்டு ஆலடியில் இயங்கும் ஆரம்ப பிரிவுக்கு தேவைப்படும் கட்டடத் தொகுதியை அமைக்க பயன்படுத்தலாம். இம்மண்டபம் அமைந்துள்ள இடப்பரப்பை ஏற்கனவே திட்டமிட்ட வாறு விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

வியாவில் சைவ வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் புல் நடுதல் விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஊக்குவிப்பாக அமையும். மைதானத்தை சுற்றி அத்திவாரம் அமைத்து அவற்றிற்கு கம்பி வலை சுற்றுவேலி (wire mesh) அமைத்தல் வேண்டும்.

விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்கு அவசியமான தொன்றாகும்.

கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் யாழ் மாவட்டம், வடக்கு, கிழக்கு மாகாண போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றிய விபரங்கள்

1934ஆம் ஆண்டு நடைபெற்ற (ALL CEYLON ATHLETIC MEET) அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான போட்டிகளில் பங்கு பற்றி திரு. அ. சுந்தரம்பிள்ளை, திரு. க. சுப்பிரமணியம் ஆகியோர் பரிசில்களைப் பெற்றுள்ளனர் என 1934ஆம் ஆண்டில் கரவெட்டியில் வெளியிடப்பட்ட "ஞானசித்தி" எனும் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1934ஆம் ஆண்டு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் ஜே.எஸ் பரீட்சையில் 13 பேர் இரண்டாம் பிரிவிலும் வடமாகாணத்தில் ஒருவர் 1ஆம் பிரிவிலும் சித்தி எய்தியமைக்கான பாராட்டு விழா சிவத்திரு. அ. சீதாராம ஐயர் தலைமையாசிரியர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இவ்விருவரினதும் வெற்றிச் செய்தி கிடைக்கப்பெற்று அறிவிக்கப்பட்ட பொழுது மாணவர் எல்லைமீறி குதூகலித்தமையை அன்றைய விழாவில் சமூகமா யிருந்த மாணவர் மூலமாக அறியக்கூடியதாக விருந்தது.

1. திரு. அ. சுந்தரம்பிள்ளை கோல் ஊன்றிப் பாய்தல், குறுந்தூர ஓட்ட வீரர் உதைபந்தாட்டத்தில் இடது கரை வீரர் (Right extreme)
2. சடையாளி பரியாரி நாராயணியின் சகோதரர் கணபதிப்பள்ளை பொன்னாலையில் வசித்தவர். தனது மகன் சுப்பிரமணியத்தை காரை இந்துக் கல்லூரியில் கற்பதற்காக அனுப்பி வைத்தார். திரு. சுப்பிரமணியம் குறுந்தூர ஓட்ட வீரர்.
3. 1960ஆம் ஆண்டின் முற்பகுதியில் காரைநகர் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற மாப்பாணவூரியை சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை சிவம் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றினார்.
4. செல்வன். செல்வரத்தினம் இராதாகோபாலன் 1973, 1974ஆம் ஆண்டுகளில் 13 வ. கீ 15 வ. கீ ஆண் பிரிவுகளில் யாழ் மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டியில் 100அ, நீளம் பாய்தல், உயரம் பாய்தல் நிகழ்ச்சிகளில் 1ஆம் இடங்களைப் பெற்று இலங்கைப் பாடசாலைகள் சங்க 1973ஆம் ஆண்டு மெய்வல்லுனர் போட்டியில்100அ இ உயரம் பாய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் 1ஆம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். நீளம் பாய்தல் நிகழ்வில் 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார். 1974 இல் 100அஇ 1ஆம் இடம் தங்கப்பதக்கம் நீளம் பாய்தல் 2ஆம் இடம் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
5) செல்வன். கந்தமூர்த்தி ஆனந்தசற்குணநாதன் 1978, 1977, 1980, 1981, 1982ம் ஆண்டுகளில் 15 வ. கீ ஆண், 17 வ. கீ. ஆண், 19 வ. கீ. ஆண் ஆகிய பிரிவுகளில் 200அஇ 400அஇ உயரம் பாய்தல், ஈட்டி எறிதல், 400அ தடைதாண்டல், தட்டு எறிதல், முப்பாய்ச்சல் ஆகிய நிகழ்ச்சிகளில் யாழ் மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டியில் 1ஆம் இடங்களைப் பெற்று இலங்கைப் பாடசாலைகள் சங்க மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றியவர். 1980ஆம் ஆண்டு: இலங்கைப் பாடசாலைகள் சங்க மெய்வல்லுனர் போட்டியில் 400அ தடை தாண்டலில் 4ஆம் இடத்தைப் பெற்றவர்.
6) செல்வன். சபாரத்தினம் கோவிந்தராசா

1977, 1978, 1979, 1980, 1981ஆம் ஆண்டுகளில் 13 வ.கீ. ஆண், 15 வ.கீ ஆண், 17 வ.கீ. ஆண், 19 வ.கீ. ஆண் ஆகிய பிரிவுகளில் 100m, 200m, நீளம் பாய்தல் நிகழ்ச்சிகளில் யாழ் மாவட்ட மெய்வல்லுனர் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்று இலங்கைப் பாடசாலைகள் சங்க மெய்வல்லுனர் போட்டிக்கு தகுதி பெற்று பங்குபற்றியவர். 100m, 200m, நிகழ்ச்சிகளில் தெரிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டிகள் வரை முன்னேறியவர்.

7) செல்வன். திருநாவுக்கரசு யோகராசா
1980, 1981, 1982ம் ஆண்டுகளில் 17 வ.கீ. ஆண், 19 வ.கீ. ஆண் ஆகிய பிரிவுகளில் 1500m, 3000m நிகழ்ச்சிகளில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்று இலங்கை பாடசாலைகள் சங்க மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றியவர்.

8) 4x100, 4x400 அஞ்சல் அணிகள் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் கல்வித் திணைக் களம் நடாத்திய போட்டியில் தேசிய ரீதியிலான போட்டிக்குத் தெரிவு செய்யப் பட்டும் போட்டியில் பங்குபற்றவில்லை அணி வீரர்கள் விபரம்

1. ந. யோகநாதன்
1. ந. சுந்தரேஸ்வரன்
2. வே. பரராஜசிங்கம்
2. பொ. இராசரத்தினம்
3. ந. உருத்திரசிவம்
3. மு. அழகேந்திரன்
4. ந. ஜீவராஜ்
4. க. சிவலிங்கம்

இந்த மெய்வல்லுனர் போட்டியில் பல நிகழ்ச்சிகளில் வெற்றிகளைப் பெற்று காரை இந்துக் கல்லூரி 1ஆம் இடத்தைப் பெற்றது. இப்போட்டியின் பிரதம அதிதி திரு. S. தங்கராசா, பிரதம கல்வி அதிகாரி உரையாற்றும் போது கிராமப் பாடசாலை ஒன்று யாழ் மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளுடன் போட்டியிட்டு 1ஆம் இடத்தைப் பெற்றமை அப்பாடசாலைச் சமூகம் விளையாட்டில் எடுத்துக் கொண்ட முயற்சியும் அர்ப்பணிப்பும் பாராட்டப்பட வேண்டியது என்று குறிப்பிட்டார்.

மேற்கூறப்பட்ட இலக்கங்கள் 04-07 வரையான நிகழ்வுகள் திரு. அ. சோமஸ்கந்தன் விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியராக கடமை ஆற்றிய காலத்தில் பயிற்றுவிக்கப்பட்டு யாழ் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய போட்டிகளில் பங்குபற்றியவர்கள் (08 உட்பட)

திரு. அ. சோமஸ்கந்தன் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் வசித்தவர். 1965ஆம் ஆண்டில் இருந்து 1983 வரை கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியராக கடமை ஆற்றியதுடன் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரி யராக கடமை ஆற்றிய காலத்தில் மேற்கூறப்பட்ட மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு மாவட்ட, தேசிய மட்ட விருதுகளை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர். விஞ்ஞானம் கற்பித்தலில் நுட்பங்களை கையாண்டு கற்பித்தமையால் மாணவர் மனங்களை வென்றவர். காரைநகர் விளையாட்டுத்துறைக்கு திரு. சோமஸ்கந் தனின் பங்களிப்பு காத்திரமானவை

9) செல்வன் சொர்ணலிங்கம் புஸ்பலிங்கம்
2001ஆம் ஆண்டு 15 வ.கீ ஆண்கள் பிரிவில் உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் வடகிழக்கு மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றினார். தேசியமட்டத்தில் 10ஆம் இடத்தைப் பெற்றார்.

10) 2002, 2003ஆம் ஆண்டுகளில் 17 வ.கீ. ஆண் பிரிவில் வடகிழக்கு மாகாண மட்டப் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்றதுடன் 1.72m உயரத்தைத் தாண்டி புதிய சாதனையையும் ஏற்படுத்தி தங்கப் பதக்கம் பெற்றவர். தேசிய மட்டத்தில் 2002ஆம் ஆண்டு 8ஆம் இடத்தைப் பெற்றார்.

அமெரிக்கரான Fosbury என்பவர் Fosbury Flop என்று அழைக்கப்படும் நுட்பத்தை அறிமுகப் படுத்தி 1968ல் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்ற நுட்பத்தை செல்வன் சொ.புஸ்பலிங்கம் காரைநகரில்

முதன் முறையாக கையாண்டார். இம்மாணவன் வைக்கோலை சாக்கிற்குள் நிறைத்து அவற்றை மெத்தையாகப் பாவித்து (பாய்தலுக்கான மெத்தை இன்மையால்) பாய்வதும் பேட்டியும் காரை ஆதித்தியன் 2005 சுடர் 01 இல் பிரசுரமாகியிருந்தது.

11) செல்வி காந்திதிலகர் உதயா
2001ம் ஆண்டு 17வ.கீ.பெண்கள் பிரிவில் 1500அ நிகழ்ச்சியில் 3ம் இடத்தை வடகிழக்கு மாகாணப் போட்டியில் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றினார்.

12) செல்வி பரமானந்தசிவம் கலைமகள்
2001ம் ஆண்டு 19வ.கீ. பெண்கள் பிரிவில் 1500அஇ 3000அ நிகழ்ச்சியில் வடகிழக்கு மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொண்டார்.

13) செல்வன் சந்திரசேகரம் சந்திரகுமார்
2003ம் ஆண்டு 14 வ.கீ. ஆண்கள் பிரிவில் யாழ் மாவட்ட Junior Atheltic Meet இல் 1ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட Junior Atheltic அநநவ இல் பங்குபற்றினார்.

14). தேசியமட்டப் போட்டியில் தகுதி பெற்றிருந்தும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றாத மாணவர் விபரம்

செல்வி வேலாயுதம் சிவதாரணி

- 2002ம் ஆண்டு 19 வ.கீ. பெண்கள் பிரிவில் 400அ தடைதாண்டல் நிகழ்ச்சியில் வடகிழக்கு மாகாண மட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டார்.

செல்வன் பேரின்பராசா சசிக்குமார்

- 2001ம் ஆண்டு 13 வ.கீ.ஆண்.கள் பிரிவில் வடகிழக்கு மாகாண மட்டப் போட்டியில் 200அ நிகழ்ச்சியில் 3ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

செல்வி சோ.திவ்வியா

- 2004ம் ஆண்டு துயகயெ District Junior Athletic meet இல் 16 வ.கீ.பெண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்ட Junior Athletic meet இற்கு தெரிவுசெய்யப்பட்டார்.

இலக்கம் 9 – 13 வரையிலான நிகழ்வுகள் திருஅ.ஜெகதீஸ்வரன் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக கடமை ஆற்றிய காலத்தில் பயிற்றுவிக்கப்பட்டு வடகிழக்கு மாகாண ரீதியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள். (14 உட்பட)

திரு. அ. ஜெகதீஸ்வரன் விஞ்ஞான பாட ஆசிரியராக 1996 – 2010 வரை கடமை ஆற்றியவர். செல்வன். செ. புஸ்பலிங்கம் ஆதித்தனுக்கு வழங்கிய பேட்டியில் தனது திறமையை இனங்கண்டு பயிற்றுவித்து, மேலதிக பயிற்சிக்கு யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பயிற்றுவிப்பாளர் திரு. செ. ரமணனிடம் தனது மோட்டார் சைக்கிளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்திற்கு அழைத்துச் சென்று பயிற்சி வழங்கி சாதனை படைக்க வழி செய்தவர் திரு. அ. ஜெகதீஸ்வரன் என நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார். திரு. அ. ஜெகதீஸ்வரன் வீரர்களுக்கு வழங்கிய பயிற்சியும் வழிகாட்டலும் 1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் சோலையான் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற துணைநின்றதாக சோலையான் விளையாட்டுக் கழக தலைவர் திரு. மு .ஊ. கந்தசாமி குறிப்பிட்டுள்ளார். திரு. அ. ஜெகதீஸ்வரன் வாய்ப்புகளும் வசதிகளும் அரிதான போக்குவரத்து கஸ்டங்களுக்கு மத்தியில், மிக நெருக்கடியான கால கட்டத்தில் ஆற்றிய பணி என்றும் பாராட்டுக்குரியது.

உதைபந்தாட்டம்

செல்வன். கந்தமூர்த்தி ஆனந்தசற்குணநாதன் (சக்கலாவோடை) யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் கழகத்தின் ஆதரவுடன் 1981இல் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போடடிகளில் யாழ் மாவட்டத்தில் முன்னணி வீரராக தெரிவு செய்யப்பட்டு இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட அணி தெரிவிற்கான தெரிவு

போட்டிகளில் பங்குபற்றியவர்.

1930 – 44களில் கீழ் குறிப்பிடப்படும் வீரர்கள் யாழ்ப்பாண பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளில் இடம் பெற்றதோடு மாத்திரமல்லாமல் யாழ் மாவட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் வீரர்களாக திகழ்ந்தார்கள்.

- திரு. அ. சுந்தரம்பிள்ளை (சிவன் கோவிலடி) யாழ்ப்பாண கல்லூரியின் உதைபந்தாட்ட வீரர்.

- அமரர் திரு. தர்மரத்தினம் (புதுறோட்டு) யாழ்ப்பாணக் கல்லூரி உதைபந்தாட்ட வீரர், துடுப்பாட்ட அணித்தலைவர் துடுப்பாட்டத்தில் சாதனை ஏற்படுத்தியவர். கெப்டன். தர்மரத்தினம் ஆங்கிலேயர் நாட்டு இராணுவத்தில் R.A.S.C Royal Artillery Service இல் சேர்ந்து ஜேர்மன் நாட்டு படைகளுக்கு எதிரான யுத்ததில் பின்நாளில் பங்குபற்றியவர்.

- அமரர் வே.சிவசுப்பிரமணியம் (நடுத்தெரு) யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர்.

- அமரர் கனகரத்தினம் (புது றோட்டு) பரமேஸ்வரா கல்லூரி அணித் தலைவர்

- அமரர் து.ஊ.அருளம்பலம் (தபாற் கந்தோரடி) யாழ்ப்பாண கல்லூரி உதைபந்தாட்ட வீரர் காரை இந்துக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் சேவையில் இருக்கும் போது அமரரான அருளம்பலத்தின் பூதவுடல் தாங்கிய குதிரை வண்டியை கல்லூரி உதைபந்தாட்ட அணிவீரர்களும், மாணவர் களும் மயானம் வரை இழுத்துச் சென்று மரியாதை செலுத்தினர்.

- திரு. ஆ. இரத்தினகோபால் (புது றோட்டு) 1945, 1946ஆம் ஆண்டுகளில் யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி உதைபந்தாட்ட அணிகளின் தலைவர். 1945ஆம் ஆண்டு யாழ் மாவட்டக் கல்லூரிகளில் திறமையான கால்பந்தாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டவர்.

- திரு. செல்லையா சிவசோதி (ஓவசியர் முல்லைப்பிலவு)
  1949, 1950ஆம் ஆண்டுகளில் யாழ் இந்துக்கல்லூரி உதைப்ந்தாட்ட அணித் தலைவர்.

- திரு.யு.செல்வரத்தினம் (WALKERS, மாப்பாணவூரி) 1951ம் ஆண்டு காரைநகர் இந்துக்கல்லூரி உதைபந்தாட்ட அணித்தலைவர், துடுப்பாட்ட வீரர். காரை இந்துக்கல்லூரி உதைபந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர்.

- திரு நல்லையா பொன்னையா (மாப் பாணவூரி) சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி உதைபந்தாட்ட அணித் தலைவர்.

- திரு.சண்முகம் சிவசோதி (களபூமி) யாழ் மத்திய கல்லூரியின் துடுப்பாட்ட அணித் தலைவர். துடுப்பாட்டத்தில் நீண்ட காலமாக ஈடுபட்டு பிரபல்யமான துடுப்பாட்ட வீரர்.

- திரு. செல்வரத்தினம் இராதாகிருஸ்ணன் (மாப்பாணவூரி) 1964ம் ஆண்டுகளில் சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி உதைபந்தாட்ட அணியின் சிறந்த கோல் காப்பாளர்.

- திரு.செல்வரத்தினம் இராதா கோபாலன் (மாப்பாணவூரி) 1975ம் ஆண்டுகளில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் சிறந்த கோல் காப்பாளர்.

- திரு. த. சிவகுமார் (கோவளம்) 1978இல் யாழ் இந்துக் கல்லூரி உதைபந்தாட்ட அணித் தலைவர் 1978, 1979 துடுப்பாட்ட, ஹொக்கி, அணிகளின் பிரதி தலைவர். 1976இல் இலங்கை பத்திரிகை சம்மேளனம் நாடாளவிய ரீதியில் நடாத்திய துடுப்பாட்ட போட்டியில் பங்குபற்றிய யாழ் இந்துக் கல்லூரி அணி வீரர் யாழ் இந்துக் கல்லூரி இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியுடன் விளையாடி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

- 1979ல் திரு.பாலசிங்கம் ஆனந்தகுமார் (அரசடிக்காடு) யாழ்ப்பாணக் கல்லூரியின் உதைபந்தாட்ட, துடுப்பாட்ட அணித்தலைவர்.

- 1983ல் மயில்வாகனம் சிவராஜா (பலுகாடு) மகாஜானக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணித்தலைவர்.

- 1986ல் கனகசபை சத்தியதாசன் (அல்லின் வீதி) மகாஜானக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணித்தலைவர்.

- திரு. இராஜதுரை இரவீந்திரன் (கோவளம்) 1992 – 1996 ஆண்டுகளில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கற்கும் காலத்தில் மொறட்டுவ பல்கலைக் கழக உதைபந்தாட்ட அணி வீரர்.

- திரு.தர்மலிங்கம் திருச்செல்வம் (திக்கரை) 1991 – 1994 ஆண்டுகளில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கற்கும் காலத்தில் மொறட்டுவ பல்கலைக் கழக உதைபந்தாட்ட அணித்தலைவர்.

- திரு.கந்தையா கமலேந்திரன் (திக்கரை) சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று கொழும்பு டி.எஸ் சேனநாயக்கா கல்லூயில் கல்வி பயின்றவர். 1997ல் நாடாளவிய ரீதியில் நடைபெற்ற மைலோ வெற்றிக்கிண்ணத்திற் கான உதைபந்தாட்ட போட்டியில் பங்குபற்றியதன் மூலம் கல்லூரியில் இருந்து இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்ட மூவரில் ஒருவர். மலேசியாவில் நடைபெற்ற மலேசியா பாடசாலைகள் அணியுடனும், இலங்கையில் நடைபெற்ற ரூபாய் அணி, கர்கிஸ்தான் அணி, மாலைதீவு மாணவர்கள் இலங்கையில் கற்கும் நோயல் சர்வதேச பாடசாலை அணி, லண்டன் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் சர்வதேச பாடசாலை அணிகளுடன் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட அணி சார்பாக போட்டிகளில் பங்குபற்றியவர்.

  உதைபந்தாட்டத்தில் தன்னை பயிற்றுவித்த ஆசிரியர் திரு. தம்பிராஜா சிவபாலனின் அனுசரனையுடனும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதவியுடனும் காரைநகரில் உதைபந்தாட்டத்தை மேன்மைப்படுத்த திட்டம் ஒன்றை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

- திரு. க. சத்தியபாலன் (அல்லின் வீதி) மகாஜனக் கல்லூரி, சோலையான் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட அணி வீரர். 2007இலிருந்து வடமாகாண கல்விப் பணிமனை உடற்கல்வி உதவிப் கல்விப் பணிப்பளாராக கடமையாற்றுகின்றார்.

விளையாட்டுத் துறை ரசிகர்கள், ஆர்வலர்கள் நல்கிய பங்களிப்பு விளையாட்டுத் துறை விருத்திக்கு ஒரு காரணமாகும். உதைபந்தாட்டப் போட்டிகளை ரசிப்பதற்கு ரசிகர் கூட்டமே இருந்தது. உதைபந்தாட்டப் போட்டிகளின் பின்னர் வீரர்களுக்கு நன்றி கூறுவதும் பாரட்டுவதும் பண்பாக இருந்தன. இன்றும் பலர் கடந்த கால விளையாட்டு நிகழ்வுகளை நினைவுகூர்ந்து உரையாடும் சம்பவங்களும் உண்டு. இவ்வழக்கொழிந்து முகந்தெரியாத விளையாட்டு வீரர்களின் நிகழ்வுகளை தொலைக்காட்சியில் பார்ப்பதை வழக்காக்கியுள்ளோம்.

"HISTORY REPEATS" வரலாறு மீள் எழும் என வாக்கியத்திற்கு அமைவாக கடந்த சென்ற பொற்காலத்தை எதிர் காலத்தில் உருவாக்க வரலாறு வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறேன்.

A sound mind in a sound body

நான் அறிந்தவற்றையும், விளையாட்டில் ஈடுபட்டுள்ளோர், அக்கறை உள்ள ஆர்வலர்கள், காரைநகர் தொடர்பான ஆவணங்கள் மூலம் பெற்ற தகவல்களையும் கொண்டு கட்டுரை வரையப்பட்டுள்ளது. கட்டுரையை ஆக்க தகவல்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். நீக்கப்பட வேண்டியவை, சேர்க்கப் படவேண்டியவை நிறைய இருக்கலாம். ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எதிர்பார்கின்றேன். தவறுகள் இருப்பின் தயவுடன் பொறுத்து அருள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் நிறைவுகின்றேன்.

HAVE A PICTURE BEFORE YOU HAVE A PALACE

திரு. S. K. சதாசிவம் காரை இந்துக் கல்லூரியினதும் காரை விளையாட்டுக் கழகத்தினதும் கோல் காப்பாளர் என்ற நிலையில் பலருக்கு அறிமுகமானவர். 1977 தொடக்கம் 1991 வரையிலான காலப் பகுதி யில் காரை விளையாட்டுக் கழகத்தை ஓர் உன்னத நிலையில் இயக்கியவர். யாழ் மாவட்ட வடகிழக்கு மாகாண மெய்வல்லுனர் உடற்பயிற்சி போட்டிகளை நடாத்துவதில் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றியவர். 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது காரைநகர் பாடசாலைகளை காரைநகருக்கு வெளியே இயங்கச் செய்வதிலும் மிகவும் நெருக்கடியான 1999 முதல் 2002 வரையிலான காலப் பகுதியில் பரீட்சைத் திணைக்கள பரீட்சைகளையும் ஏனைய பரீட்சைகளையும் அனைத்து கல்விச் செயற்பாடுகளையும் வன்னி மாவட்டத்தில் சுமுகமாக நடைபெற வெற்றிகரமாக செயற்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அலுவலர். ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப் பகத்தின்(German Technical Cooperation GTZ) வடகிழக்கு மாகாண செயற்றிட்டங்களில் கடந்த எட்டு ஆண்டுகளாக கடமையாற்றுகின்றார்.

AIRVIEW MECHANICAL
HEATING AND AIR CONDITIONING
INSTALLATION • REPAIRS • PARTS • MAINTENANCE
Central Air Conditioning (A/C) Systems
Furnace & Ventilation Systems
Electronic Air Cleaner
Humidifier
TECHNICAL STANDARDS & SAFETY AUTHORITY TSSA
Ajan (AJ)
Certified Technician
PHONE: 416-879-1056 FAX: 416-298-7151
Leaders In Home Comfort Solutions

ஓம் சக்தி
"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

காரைநகர் - வலந்தலை

அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வரலாறு

சைவமும் தமிழும் தழைத்து ஓங்கி வளம் பெற்றுவரும்கிராமங்களுள் காரை நகர் தனக்கு நிகர் தானேனெத் திகழ்ந்து வருகின்றது. காரை நகரில் எந்த இடத்திலும் எந்தக் குறிச்சியிலும் கோவில்களும், பாடசாலைகளும் காணப்படுவது இதற்குத் தக்க சான்றாகும். இவ்வண்ணம் தொன்றுதொட்டு அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு பொதுமக்களின் வழிபாட்டுக்குமுரியதாக வந்த ஆலயங்களுள் வலத்தலை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயமும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இந்தச் சிறப்பு மிக்க ஆலயம் மிகப்பழமையும், புதுமையும், பெற்றுள்ளது.

இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தி செஞ்சந்தன மரத்தில் செதுக்கித் திருவுருவாக்கப்பட்ட கண்ணகையின் திருவுருவப் பொலிவேயாகும். இவ்விடத்தில் கண்ணகைத்தெய்வம் பேரருளும், தெய்வீகப் புதுமைகளும் கொண்டு விளங்கிய காரணத்தால், மக்கள் புதுஅம்மன் ஆத்தைஅம்மன், ஆத்தியடி அம்மன், பத்தினித்தாய், கண்ணகித்தாய், கற்புக்கரசி, உப்புத்தண்ணித்தாய் என்ற பல சிறப்புப்பெயர்களால் வணங்கி வழிபட்டு வருகின்றனர். காரைநகரில் கண்ணகை ஆலயம் இது ஒன்றேயாகும்.

காரைநகரின் வலம்புரி மகிமையுடன் திகழும் வலந்தலையின் கண்ணென அமைப்புப்பெற்றது இந்தக் கண்ணகைத் தாயின் ஆலயம். யாழ்ப்பாணக் குடாநாட்டையும் காரைநகரையும் தொடர்புபடுத்தும் பொன்னாலைப் பாலப்பிரதான வீதி காரைநகரை அண்மிக்கும் வலந்தலைச் சந்திக்கு வடக்குப்பக்கமாக அமைவுற்று மிளிர்கின்றது அவ்வாலயம். காரைநகரில் பொங்கல் வேள்விகள் நடாத்தப்பட்டுவரும் ஆலயங்கள் பல இருந்தும் வருடப்பிறப்பையடுத்து முதன் முதலாக வரும் வெள்ளிக்கிழமையில் விளக்கேற்றி ஒன்பதாம் நாள் சனிக்கிழமை பொங்கல், வேள்வி அடியார்கள்களால் நடாத்தப்படும் ஆலயமும் இதுவேயாகும்.

நாம் அறிந்தவரையில் இற்றைக்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்பு காரைநகரில் வலந்தலையில் வசித்துவந்த சைவப்பெரியார் ஸ்ரீமான் கார்த்திகேசர் தர்மத்துக்காக எழுதப்பட்ட காரைதீவு கிழக்கு வலந்தலை இறை விசாலாட்சியார் கார்த்திகேசர் பேரித்தோப்பும் காதலியார் பேரித்தோப்பும், ஆகிய இரு தோப்புக்காணிகளையும் உள்ளடக்கிய ஆத்தியடி வளவு (கண்ணகிஅம்மன் வளவு அல்லது புது அம்மன் வளவு) என்னும் காணியில் கண்ணகைத்தாயின் சின்னங்களுள் ஒன்றான வேப்பம் பத்திரங்கள் அடர்த்தியாகக் கொண்ட வேப்பமரத்தின் கீழ் அமைந்துள்ள கோயிலில் கண்ணகை வழிபாடு செய்து வந்தார். இப்பெருமகன் பிரமச்சாரியாக இருந்தமையால் தமது மகன் முறையான வேதர் கதிர்காமருக்கும், தமது மருமகன் (சகோதரியின் மகன்) புனர் விநாயகருக்கும் கோவிலையும் நிலத்தையும் எழுதிக் கொடுத்தார். அவர்களும் அதனைப் பொறுப்பேற்று வழிபாடுசெய்து வருங்காலத்தில் விளைவேலிப் பிராமணர் காரைதீவு குடி கிட்டினர் குமாரவேலருக்கும் பெண் விசாலாட்சியாருக்கும் சீதனமாகப் பராபரிப்புச்

சீட்டு எழுதிக்கைமாற்றப்பட்டது. அவர்களும் அதுவரை ஏட்டுப்பிரதியாகவே எழுதப்பட்டு வழங்கப்பட்டதை ஏற்றுப் பக்தி சிரத்தையாக வழிபாடு நடாத்திப் பரிபாலித்து வருங்காலத்தில், அவர்கள் கிராமத்தைவிட்டு வெளியே செல்ல நேர்ந்ததால், அக்காலத்தில் வலந்தலையில் பிரபல நாட்டு வைத்தியராகவும், செல்வந்தராகவும், இனபந்துக்கள் உள்ளவராகவும், கடவுள் பக்தி சிந்தனை கொண்டவராகவும் இவ்வாலயத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையவராகவும் விளங்கிவந்த உத்தம சீலப் பெருமகன் ஸ்ரீமான் நாராணர் கந்தப்பர் (பரிகாரி கந்தர்) என்பவருக்கு மேற்குறித்த கண்ணகி அம்மன் ஆலயத்தையும், கிணற்றையும் அவற்றுடன் சேர்ந்த நிலத்தையும் விற்கவோ மாற்றவோ முடியாத வகையில் அவருக்கே பராபரிப்புக்கு மட்டும் பரிசாக ஏட்டுப் பிரதியிலிருந்து நேரடியாக 1824ம் ஆண்டு ஆவணி மாசம் 17ம் திகதி 11209ம் இலக்கத்தில் யாழ்ப்பாண மாவட்டக் காணிப்பதிவாளருக்கு முன்னறிவித்தல் விண்ணப்பம் கொடுத்துப் பின்னர், அதை 1824ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் தேதி 267ம் இலக்கத்தில் யாழ்ப்பாண மாவட்டக் காணிப் பதிவாளரினால் பராபரிப்பு உறுதியாக எழுதிக்கொடுத்து, கோயில் திறப்பையும் ஒப்படைத்தார். மேலும் அவ்வுறுதியில் எந்தவேளையும் வரவும் செலவும் ஏற்றுக் கோயில் கருமங்களைத் தொடர்ந்து சரிவரப்பார்த்துப் பராபரித்து வரும்படியும் கண்டு எழுதப்பட்டுள்ளது. நாராணர் கந்தப்பருக்குப் பராபரிப்புக்கு மட்டும் பரிசாக எழுதப்பட்ட சாசனத்தின்படி அவரும், அவரில்லாக் காலம் அவரின் உரிமையாளர்கள், வழித்தோன்றல் கள், அவரால் நியமிக்கப்பட்டவர்கள் பார்த்துப் பராமரித்து வரலாமே தவிர, அவரோ அல்லது அவரது உரிமையாளரோ அல்லது அவரது வழித்தோன்றலரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்களோ இவ்வா லயத்தையும் அதற்குரிய நிலத்தையும் எவ்வகையிலும், எந்தச்சமயத்திலும் யாருக்கும் விற்கவோ, மாற்றவோ இன்றேல் யாரும் ஆட்சி செய்து கைப்பற்றவோ சொந்தம் பாராட்டவோ முடியாத வகையிற்றான் நாரணர் கந்தப்பருக்கு எழுதப்பட்ட சாதன உறுதி அமைந்துள்ளது. இச்சாதனம் ஆலயப் பொறுப்புரிமைச் சபையிடம் உள்ளது. (ஆதாரத் தகவல்:– திரு.அ. வே. பொன்னம்பலம் கிராமசேவையாளர், பொறுப்புரிமைச் சபைச் செயலாளர்.)

சொல்லப்பட்ட சைவப்பெரியார் நாராணர் கந்தப்பர் காலத்தில் ஆலய வழிபாடு விஸ்தரிக்கப்பட்டுப் பிரபலமாக்கிக் கிராம மக்கள் சகலரும் வழிபாடு செய்து அம்பாள் திருவருள் பெற்றுய்ய வழிவகுத்தார். நாளடைவில் இப்பெரியார் தமது வைத்தியத் தொழிலைக்குறைத்து கண்ணகைத் தெய்வ வழிபாட்டுடன் காணப்பட்டார். இதன்பயனாக அப் பெரியார் இந்திய யாத்திரை மேற்கொண்டு ஈற்றில் காசியில் இருந்து இரு அற்புதத் தெய்வீகக் கற்களைக் கொண்டு வந்து ஒன்றைத் தாம் வசித்தவளவில் காவலாக மந்திரித்து வைத்தார். மற்றதைத் தாம் வழிபட்டு வந்த கண்ணகை ஆலயம் அமைந்துள்ள வளவில் மந்திரித்துக் காவல் செய்து வைத்தார். இவற்றை முறையே காவல் தெய்வமாகவும், வைரவத் தெய்வமாகவும் பூசித்து இன்றும் வணங்கி வருகின்றனர்.

சைவப்பெருமகன் நாராணர் கந்தப்பர் வசித்து வந்த இடம் இன்றும் பரிகாரி கந்தர் வளவு என்ற பெயருடன் வழங்கி வருகின்றது. இவ்வளவு கண்ணகை அம்மன் தேவஸ்தான வளவிலிருந்து ஒரு கூப்பீடு தூரத்தில் உள்ளது. இவ்வளவில் தான் இப் பெரியாரின் வழித்தோன்றல்களுள் ஒருவரான கண்ணகை அம்மன் ஆலயப் பொறுப்புரிமைச் சபைச் செயலாளர் பொன்னம்பலம் விதானையார் வசித்து வருகின்றார்.

மதுரையம்பதியில் கற்பின்சிகரமாக கண்ணகி தன் கணவன் கோவலனுக்கு நிகழ்ந்த அநீதியை வாதாடி நிரூபித்து வெஞ்சிவம் கொண்டு சினம் தனியாத போது பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்கள், முதி யோர், பாலர்கள், தவிர்த்த ஏனைய தீயதன்மையு டையவர்களுடன் மதுரைமாநகரையும் எரித்து வருடமொருமுறை சித்திரைப் பூசைக்கு வையகம் வருவேன் என்றுகூறி வானகம் எய்திய அன்னை அருள்மிகு கண்ணகா தேவியை வணங்கி மக்கள் அம்மை சின்னம்மை போன்ற தாங்கொணா நோய்கள் வராது வெப்பம் தணிய மழை பெய்ய சித்திரைக்குச் சித்திரை வரும் நந்நாளில், பொங்கிக் குளிர்த்திபோட்டு, அபிஷேக ஆராதனைகள் செய்து வெஞ்சினம் தணியக் கண்மலர் சாத்திக் குங்குமம் கூடி மலர்கள் சொரிந்து குளிர்மைப் படுத்திப் பெருவேள்விகள் எடுத்து வந்துள்ளார்கள் என்பது வரலாற்று ஐதீகம். இதன் அடிப்படையிலே தான் இவ்வாலயத்திலும் வருடா வருடம் சித்திரைப் புது வருடப்பிறப்புத்தினத்தை அடுத்து வரும் முதல் வெள்ளிக்கிழமை நவதானியம் விதைத்து மூன்று முட்டிகளில் கும்பம் வைத்து திருவிளக்கேற்றி ஒன்பது நாட்கள் தொடர்ந்து பூசை நைவேத்தியங்கள் செய்து பறைமேள வாத்தியங்கள் முழக்கி ஒன்பதாம் நாள் சனிவாரம் ஆலயப்பொறுப்

பாளர் முதல் "நாயக வளந்து" வைத்துப் பொங்கல் ஆரம்பிக்க அதைத்தொடர்ந்து மற்றும் அடியார்களும் பொங்கிப்படைத்து அபிஷேக ஆராதனைகள் செய்து நீர்ச்சாதம் ஆக்கிக் கண்மலர்கள் சாத்தி மங்கள வாத்தியங்கள் முழங்கப் பெருவேள்வி நடாத்தத் திருவருள் பாலித்து வருகின்றது. இதன் பலனாகக் கிராமத்தில் கொடிய தொற்றுநோய்கள், துன்பங்கள், வறுமைகள் நீக்கி வரட்சி போய் மழைபெய்து செல்வம் செழிக்கும் கிராமமாக மேலோங்கும் என்ற திடநம்பிக்கையுடன் மெய்யடியார்கள் செயற்பட்டு வருகின்றனர்.

ஈழத்தில் கண்ணகி அம்மன் கோயில் கொண்டுள்ள தலங்கள் பலவுள. அவற்றில் வற்றாப்பளை புதுமையும், வரலாற்று முக்கியமும் பெற்றது. அங்கு கடல்நீரில் விளக்கெரித்து வருவது போல், இவ்வாலயத்திலும் கடல்நீரில் விளக்கு எரித்ததாக நம்முன்னோர் கூறக்கேட்டறிந்துள்ளோம்.

நாராயணர் கந்தப்பரின் பின் அவரது ஆண்பிள்ளைகளில் ஒருவரும் ஆசாரசீலருமான ஸ்ரீமான் கந்தப்பர் சண்முகம் (அமுதர்) என்பவர் சீரானமுறையில் ஆலயபரிபாலனம் செய்து வந்துள்ளார். இப்பெருமகன் தம்மால் பராபரிப்புச் செய்யமுடியாத நிலையெய்திய போது தமது சகோதரர்கள், ஆண்பிள்ளைகள் பலர் இருந்தும் அவர்களால் எதுவித எதிர்ப்போ மறுப்போ இல்லாத காரணத்தால், அவர்களுடைய சம்மதத்துடன் தமது மகள் மீனாட்சி (தெய்வானை) என்பவரின் கணவரும் தனது மருமகனுமான சைவநற்குண நற்சிந்தையாளருமான சாராளப்பெரியார் திரு. இராமர் கந்தப்பர் என்பவரை ஆலய பரிபாலனத்தைப் பார்த்து வருமாறு பணித்தார். அப்பெரியாரும் மாமனாரின் வேண்டுகோளுக்கிணங்கி அதன்படி ஒழுங்குமுறையாக ஆலயபரிபாலனத்தைச் செவ்வனே பார்த்து நடாத்தி வந்தார். நாளடைவில் இப்பெரியாரின் மகன் திரு. இராமுப்பிள்ளை மலாயா போயிருந்து வந்ததும் அவருடன் சேர்ந்தும் அவரில்லாக்காலம் தனித்தும் ஆலய பரிபாலனஞ் செவ்வனே நடாத்தப்பட்டு வந்தது. இவ்விதமாக நடைபெற்று வரும் காலத்தில்1965ம் ஆண்டளவில் பெருமகன் திரு. இராமப்பிள்ளை சிவபதமடைந்தார். அதன் பின் அப்பெரியாரின் பாரியாரும் நாராணர் கந்தப்பர் சண்முகம் பொன்னையா மகளுமான திருமதி. இராமுப்பிள்ளை பாக்கியம் சில ஆண்டுகள் பராபரித்துச் சிறப்புற நடாத்திவந்தார். அதன்பின் சில ஆண்டுகள் ஆலய நிர்வாகம் பூசை ஆராதனை நடைபெறாத காரணத்தால் ஒருசில அன்பர்கள் சேர்ந்து திரு. இராமப்பிள்ளை பாலகிருஷ்ணரையும் அழைத்து ஆலயத்தில் ஓர் கூட்டம் கூட்டி ஆலோசித்து பல அடியார்களின் பொருளுதவியுடன் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் சோமஸ்கந்தசர்மா என்பவரை நியமித்து ஒரு சில ஆண்டுகள் ஆலயபரிபாலனம் நடத்தப்பட்டது. இச்சமயம் முழுப் பூரணபொறுப்பும் அர்ச்சகரிட மேயிருந்து வந்தது. அவரே நாயாவளந்து வைத்துப் பொங்கல் வேள்விகளையும் நடாத்திவந்தார். இந்நாட்களில் செஞ்சந்தன மரத்தில் செதுக்கி உருவாக்கப்பட்ட கண்ணகை திருவுருவத்தின் ஒருகை பழுதடையவே அதனை மாற்றியமைக்கக் கருங்கல் திருவுருவம் அவ்விடத்தில் உருவாக்க அர்ச்சகர் நடவடிக்கை எடுத்தபோது நாராணர் கந்தர் சண்முகம் (அமுதர்) ஆசைப்பிள்ளை மகன் ஆச்சிமுத்து (எந்தரம்மா)வின் தவப்புதல்வன் ஸ்ரீமான் அம்பலவாணர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் (விதானையார்) இவ்விடயத்தைப் பொதுமக்கள் முன் பிரசுரங்கள் மூலம் தெளிவுபடுத்தி ரௌத்திரி ஆண்டு தைத்திங்கள் முதலாம் நாள் (14 –1 –1931) ஆலயத்தில் பொது அடியார்கள் கூட்டம் கூட்டி நிர்வாக விடயம் தீர ஆராயப்பட்டது. ஈற்றில் ஏழுபேர் கொண்ட ஆலயப் பொறுப்புரிமைச் சபையென ஒன்றைத் தெரிவு செய்து ஆலய நிர்வாகப் பொறுப்பையேற்று மத்தளின் பொருளுதவியுடன் பரிபாலனத்தை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இச்சபை தெரிவுசெய்து ஒரு மாதகாலத்தில் ஆலயத்தில் அர்ச்சகர் பொறுப்புரிமைச் சபை உறுப்பினர் எவருடனும் தொடர்பு கொள்ளாது உத்தரவுபெறாது ஆலயத்தைப் பூட்டி வைத்துத் திறப்புடன் வெளியூர் சென்ற அசாதாரண காரணத்தால் ஒருமாதகாலமாக நித்தியபூசை நடைபெறாதிருந்தது. இதை அவதானித்த மக்கள் சிலரும் பொறுப்புரிமைச் சபையினரும் ஒன்றுகூடி ஆராய்ந்து இப்பகுதி உதவி அரசாங்க அதிபருக்கும் விண்ணப்பித்து விளக்கங்கள் கூறியதன் பலனாக மேற்படி அர்ச்சகரே ஆலயத்திற்குத் தாமாகவந்து உதவி அரசாங்க அதிபர் சமூகத்தில் பல அன்பர்கள் முன்னிலையில் பூட்டப்பட்டிருந்த ஆலயக் கதவைத் திறந்து பொருட்களையும் திறப்பையும் பொறுப்புரிமைச் சபையிடம் ஒப்படைத்தார். இதைத்தொடர்ந்து மெய்யடியார்கள் உதவியுடன் சாந்தி கருமங்கள் ஆற்றி நிர்வாகத்தைச் சீராக ஆக்கி அர்ச்சகர் பிரம்மஸ்ரீ விசுவநாதசர்மா ஈஸ்வரசர்மாவின் நியமனத்துடன் நித்தியபூசை ஒழுங்காக நடாத்தி வருகின்றனர்.

கண்ணகி அம்பிகையின் வரலாற்று மரபை

நோக்குமிடத்து "கண்ணகி பத்திரகாளி" என்ற தேவியின் அவதாரம் என்றும், மதுரையிலே கோவில் கொண்டிருந்த அத்தேவி பாண்டிய மன்னனைப் பழிவாங்குவதற்கானதோர் முனைப்புடன் அவனது மகளாக அவதரித்துப் பூம்புகார் மாநகரச் செட்டியிடம் வளர்ப்புமகளானான். என்றும் "சிலம்புகூறல்" என்னும் கதை தெரிவிக்கின்றது. கண்ணகி தெய்வீகமுற்ற செய்தியை அறிந்த சேரன் செங்குட்டுவன் அம்பிகைக்கு அழகிய கோவில் கட்டிப் பெருவிழா எடுத்தான் என்றும், அவ்விழாவிற்கு இலங்கையில் இருந்து சென்ற "கடல்சூழ் இலங்கைக் கயவாகுவேந்தன்" மீண்டுவந்து இலங்கையிலும் பலகோவில்களை கட்டுவித்து விழா எடுப்பித்தான் என்றும் சிலப்பதிகாரம் தெளிவு படுத்துகின்றது. இதை ஈழத்து வரலாற்று நூல்களான "ராஜாவலியவும்" "ராஜரத்தினாகர" வும் சிற்சில மாற்றங்களுடன் கூறுகின்றன என்பர். சிலம்புகூறல் கண்ணகியம்மை மதுரையை எரித்தபின்னும் கோபந்தணியாதவளாய் தமிழ்நாட்டில் நின்றும் ஈழம்போன்று பல்வேறு இடங்களில் கோவில்கொண்டு அடியவர்களின் பூஜனையால் உளங்குளிர்ந்தாள் என்றும், அதனால் என்றும் நாடு செழிப்புற்று விளங்கியது என்றும் கூறப்படுகின்றது. வற்றாப்பளை என்பது பத்தாவதாகக் கண்ணகி அம்மன் வந்து அமர்ந்த இடம் எனவும், அது "பத்தாம்பளை" என வழங்கிக் காலப்போக்கில் மருவி வற்றாப்பளையாயிற் றெனவும் செவிவழிச் செய்திகளுண்டு. அத்தகைய முறையில் அம்மன் வந்து இருந்து அருள்சுரந்த இடங்களுள் வலந்தலைக் கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாகும். எனக்கொள்ளுதல் பொருத்த முடையது.

பொதுமக்கள் பொருளுதவியோடும் ஆலயப் பொறுப் புரிமைச் சபையின் விடாமுயற்சியாலும் சிறப்பாக அன்பர் ஸ்ரீமான் அ. வே. பொன்னம்பலம் விதானையார் அவர்களின் அயராத உழைப்பினாலும் ஆலயத் திருப்பணி வேலைகள் திறம்பட வெகுவிரைவில் நிறைவேற்றப்பட்டது அம்பாளின் திருவருட்டு ணையாகும். திருப்பணிவேலைகள் இரண்டு இலட்சம் ரூபாவையும் செலவில் நிறைவு பெற்றுக் கும்பாபிஷேக விழாவும் மிகச்சிறப்புற நடைபெற்றுள்ளது.

எழுசீர் ஆசிரி விருத்தம்

அருணிறையும் மதுரைநகர் வருமழகியேநீதி
யரகபுரி மீனாட்சியே
திருநிறையும் பொற்சிலம் பேந்திவருவிமலியே
சிவானந்த ஞான மணியே
தருணமழை எனவடியர்க் கருளுமாதேவியே
தமியேமைக் காத்தருள்வாய்
கருணைவளர் காரைநகர் வலந்தலைப் பதிமேவு
கண்ணகா ம்பிகையம்மையே

–அருட்கவி சீ. வி.

திரு. பொ. வன்னியசிங்கம் அவர்கள்
(இளைப்பாறிய தபால் தந்தி தொடர்பு பரிபாலன செயலாளர்)
ஐவனை, காரைநகர்.



காரைவசந்தம்

2011





கனடா காரை கலாச்சார மன்றம் Sept 30, 2012இல் நடாத்திய தமிழ்மொழித்திறன் போட்டி-2012இல் பங்கு பற்றியோர் விபரம்

பிரியங்கா
கேதீஸ்வரன்

சிறீராம் ரஞ்சன்

மீரா
சிறிவஉணசூஉயா

மிதுசா
சிறிவஉணசூஉயா

ஆஉத்தி ரமேஷ்

நிலுக்ஷனன் தயானந்தராஜா

கிருத்திகா புஷ்பலிங்கம்

பவன் புஷ்பலிங்கம்

துளசி யோகேஸ்வரன்

தனுஷ்காந்த்
யோகேஸ்வரன்

அனோஜன் சுதாகரன்

லக்ஷிகா
மோகனேந்திரன்

மாதுமை யோகராஜா

அனுசா
சிறிவஉணசூஉயா



நிலானி
பரமானந்தராஜா

நிசாந்தி
கணேசலிங்கம்

காயத்திரி
பரமேஸ்வரன்

சிறீவஉஷா ரஞ்சன்

நிதுஷா
பரமானந்தராஜா

வருடாந்த கோடைகால ஒன்றுகூடல் 2012

காரைவசந்தம்
2012

தனித்துவமான துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

பொன்விழா கண்ட நிறுவனம்



53 ஆண்டுகள் வணிகத் துறையிலும்
20 ஆண்டுகள் கனடாவில்
தனித்துவமான பணமாற்றுச் சேவையிலும்
தமிழ் மக்கள் இதயங்களில் இடம் பிடித்தவர்கள்

இரு இடங்களில் சேவை

3228 Eglington Ave. East
Suite # 3 (Markham & Eglinton)
Scarborough, ON, M1J 2H6

Tel: 416.267.8221

3351 Markham Road,
Suite #109 (Markham & Steels)
(Red building on Markham Rd)
Scarborough, ON, M1X 0A6

Tel: 416.321.8221

Find your Dream Home with

NANO COMPUTER

- Residential
- Commercial
- Downtown Condos
- Investment Properties
- Lands for Sale

Call for Free Home Evaluation

Raj Nadarajah
Nagendrarajah
Sales Representative
416-333-6115
nanohomes@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future
Realty Inc., Brokerage*
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Independently Owned and Operated

காரைநகர்
2012

CAP REIT
CAP REIT
Canadian Apartment Properties
Real Estate Investment Trust
We have you covered in Scarborough
1757 Victoria Park Ave
(Victoria Pk & Lawrence)
1,2 Bedrooms from $850
Utilities Included 416-759 9977
10 & 30 Tuxedo Court
(Markham & Ellesmere)
1,2,3 Bedrooms from $929
Utilities Included 416-289 7423
25 Bay Mills Blvd
(Warden & Sheppard)
1,2 Bedrooms from $960
Utilities Included 416-293 0924
215 Markham Road
(Markham &Eglinton)
1,2 Bedrooms from $880
Utilities Included 416-267 5223
370 McCowan Road
(McCowan & Eglinton)
1,2,3 Bedrooms from $905
Utilities Included 416-266 7025
567 Scarborough Golf Club
(Scarborough Golf Club & Lawrence)
1,2 Bedrooms from $865
Utilities Included 416- 431 6994
1050 Markham Rd
(McCowan & Ellesmere)
Jr1,1,2 Bedrooms from $720
Utilities Included 416 - 438 3400
4000/4010 Lawrence Avenue East
(Lawrence & Kingston)
1,2,3 Bedrooms from $825
Utilities Included 416- 724 4040
30 Livonia Place
(Neilson & Ellesmere)
1,23 bedrooms from $870
Utilities Included 416- 281 5353
மிகவும் தரமான
வாடகை குடியிருப்பு
Visit our website
www.capreit.net

ஸ்ரீ வரசித்தி & கோ

அனைத்து பூஜைப்பொருட்களின் களஞ்சியம்

- பூஜைப்பொருட்கள்
- மளிகைப்பொருட்கள்
- சமயப்புத்தகங்கள்
- கர்நாடக Audio CD's / DVD's
- பூக்கள், பூமாலைகள்
- பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்

உங்கள் விழாக்களுக்கான
Video & Photo தேவைகளுக்கும்

2950 Kennedy Road, Unit 10A, Scarborough
(Between Finch & McNicoll)

Tel: 416-292-0033

Web: www.srivarasiththi.com

"உங்கள் இல்லந்தோறும் இறையருள் பெற..."

கார்திரவசந்தம்
2012

EMERALD
HOME STAGING
Like a gem, a good looking home is valued

Phone: 647-654-8468
Email: info@emeraldhomestaging.com
Website: www.emeraldhomestaging.com

Suba Nadarasah, USC™
Certied UltimateStager™

TD **Canada Trust**
Banking can be this comfortable

Advice Whereever Whenever

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான
TD Canada Trust வங்கியில் அனுபவ
முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள்
பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி
தேவைகளுக்கான ஆலோசனைகளையும்
உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும
அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Competitive Rates

Supen Subramaniam
Manager, Residential Mortgage

t 416-844-8692 f 1-888-809-9154

e supenthiran.subramaniam@td.com


பாலவிமல நர்த்தனாலயம்
நடன வகுப்புகள்
புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
ஆர்வமுள்ள மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
மாணவர்கள் பரீட்சைக்கும்,
நிகழ்ச்சிகளுக்கும் தயார் செய்து அனுப்பப்படுவர்.
பரத கலாவித்தகர்
திருமதி. சித்ரா தர்மலிங்கம்
(905) 956 9385
(416) 713 0766
(416) 459 0766
339 Derrydale Drive
McLaughlin Rd & Derry Rd
SSSB Centre
5321 Finch Ave East (Markam and Finch)
Scarborough ON

Special Care For Nervous Drivers

Driving For All Ages

Discount Certificate for car Ins (With full course)

Early Road Test Arrangements

Defensive Driving Course (C.S.C)

Individual Lessons are also Available

SAABI DRIVING SCHOOL

M.T.O. Approved Beginner Driver Edu. Course Provider

A. A. KANDASAMY

41 Densgrove Rd. Scarborough, Ont. M1G 2A2

Res: 416 431 0832 **Cell: 416 569 1421**

Tel: 416 750 0411 **Cell: 416 879 3641**

காரைநகர் மாணவர் நூலகத்தின் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.



FRONT ELEVATION

அன்பார்ந்த காரைநகர் பெருமக்களே!

மீண்டும் ஒரு முறை காரை வசந்தம்–2012 சிறப்பு மலரூடாக காரை அபிவிருத்திச் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மாணவர் நூலகப்பணி குறித்த செய்திகளை தங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வுறுகின்றோம்.

காரைநகர் மேற்கு பிரதான வீதியும் இடைப்பிட்டி வீதியும் சந்திக்கின்ற மூலைப் பகுதியினை அமைவிடமாகக்கொண்டு புலம் பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களின் பேராதரவுடனும் உதவியுடனும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மாணவர் நூலகத்தின் இரு மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் முதற்கட்டப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதுடன் அவை விரைவில் நிறைவுற்று நூலக சேவையினை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இரு மாடிக் கட்டிடத்தின் நில மட்டத்திலான பகுதி (கீழ் மாடி) இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்க திட்ட மிட்டதின் அடிப்படையில் அதன் முதற்கட்ட நிர்மாணப் பணிகளே சென்ற ஆனி மாதம் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குத் திசையில் (சிவன் கோவில் வீதியை நோக்கிய பகுதி) 58 அடி நீளமும் 36 அடி அகலமும் கொண்ட கீழ்த்தள அமைப்புப் பகுதியே முதற்கட்டமாக தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இந்தப்பணி விரைவில் நிறைவுபெற்று நூலக சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நிறைவு பெறவுள்ள முதற்கட்ட அமைப்புப் பகுதியுடன் இணைந்த 42 அடி நீளமும் 36 அடி அகலமும் கொண்ட கிழக்கு கீழ்த்தளப் பகுதி (சுப்பிரமணியம் வீதியை நோக்கிய பகுதி) இரண்டாம் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இப்பகுதியினை பூர்த்தி செய்ய தேவையான நிதி கிடைக்கப்பெறின் இவ் வேலையும் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட திட்டமிடப் பட்டுள்ளது.

ஆரம்பிக்கப்படவுள்ள நூலக சேவையினை பயனுள்ள வகையில் திறம்பட வழங்குவதற்கான ஏற்பாடாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கல்விமான்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஓர் செயற்பாட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதுடன் இக்குழுவே நூலகத்தினை நிர்வகிப்பதற்கு பொறுப்புடையதாக விளங்கவுள்ளது. காரை அபிவிருத்தி சபை தமது

நிர்வாகக் கடமைகளை மேற்கொள்வதற்கு வசதியாக அச் சபைக்கான அலுவலக அறை ஒன்றும் முதற்கட்ட அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நூலக சேவையானது மாணவர்களிற்கு பெரும் வரப்பிரசாதமாக அமையவிருப்பதுடன் பாடசாலை களுடன் இணைந்து காரைநகரின் கல்வி பாரம்பரியத்தினை நிலைநிறுத்துவதற்கு பெரும் பங்காற்றும் என்பது கல்விமான்கள் பலரதும் உறுதியான நம்பிக்கையாக அமைந்து விளங்கு கின்றது.

நூலக சேவையின் உன்னதமான பயன்கள் அளவிடற்கரியது என்பதுடன் முக்கியமான சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்:

அன்ன யாவினும் கோடி புண்ணியம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
என்பதற்கொப்ப தளபாட வசதிகள் அற்றவர்களாகவும் மாதிரி வினா விடை புத்தகங்கள் வாங்குவதற்கு வசதி அற்றவர்களாகவும் உள்ள வறிய மாணவர்கள் நூல்நிலைய வசதிகளை பயன்படுத்தி அமைதியான முறையில் படிப்பினை மேற்கொள்ள முடியும்.

வாசிப்பினால் மனிதன் பூரணத்துவமடைகிறான் என்ற வாக்கியத்திற்கு ஏற்ப முன்பள்ளி மாணவர்கள் முதலாக அனைத்து தரப்பினரும் வாசிப்பு பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த நூலகம் பெரும் பங்காற்றும்.

நவீன கற்கை முறையிலான கணணி வசதிகளை கொண்டும் நூலகத்தின் ஒரு பிரிவு விளங்கவுள்ளதால் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளில் முன்னேற்றகரமான நிலையை தோற்றுவிக்கக் கூடியது.

அறிவுத் தேடல் உள்ளவர்களே சிறந்த அறிஞர்களா கவும் சாதனையாளர்களாகவும் விளங்கி தமக்கும் தாம் பிறந்த கிராமத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள். இத்தகைய தேடல் உள்ளவர்களுக்கு இந் நூலக சேவை பெரு வாய்ப்பாக அமையும்.

நூலளவேயாகுமாம் நுண்ணறிவு என்பதற்கு ஒப்ப பாடசாலைக் கல்வியினால் மட்டும் கல்வியின் பயனை அடைய முடியாது என்பதுடன் உண்மைப் பயனை அடைவதற்கு பல தரப்பட்ட நூல்களை கற்று பரந்துபட்ட அறிவை பெறுவதற்கு உறுதுணையாக விளங்கி காரைநகரில் ஓர் கற்றல் கலாச்சாரம் உருவாக ஊக்குவிக்கும்.

நகரங்களில் மட்டும் தான் நூலகங்கள் அமைக்கப் பட்டு வந்த நிலை மாற்றமடைந்து கிராமங்களிலும் நூலகங்கள் தோற்றம் பெற வேண்டும் என்கின்ற சிந்தனை வலுப்பெற்று வருகின்ற இக்காலத்தில் காரைநகரில் அமையவுள்ள நூலகம் முன்னுதார ணமாக விளங்கி ஏனைய ஊர்களிலும் இவை தோன்ற வாய்ப்பளித்து மக்கள் பயன்பெறுவர்..

மொத்தத்தில் இந்த நூல்நிலையமானது காரைநகரின் கல்வி வளத்தை மேம்படுத்தி அறிவும் பண்பும் கொண்ட மக்களைக் கொண்ட செழிப்புமிக்க கிராமமாக காரைநகரை மீண்டும் விளங்க வைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. விளங்க நாமெல்லாம் பேருவகை கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

நன்றி
நடராசா
நூலக இணைப்பாளர்
காரைநகர் அபிவிருத்தி சபை

RAJEE
BEAUTY SALON
Bring this coupon
for $5 Discount
off any Service
LADIES, GENTS & KIDS HAIR CARE
LADIES HAIR CARE
• Basic Cut: $10
• Layer Cut: $20
• Step Cut: $20
• U Cut: $15
• V Cut: $15
• Hair Oil Massage: $10, $15
• Hair Ironing: $20
• Hair Colour: $25 (Black Root Touch up)
• Full Hair Colour $35 (Black)
• Fashion Colour: $35 & up
• Highlighting: $40 & up
• Straightening: $100 & up (Permanent)
• Hair Wash: $10 with Conditioner & Blow Dry
• Facial: $20, $35, $55 (1 hr)
346 Main St. North, Markham, ON L3P 1Z1
(Markham & 16th Ave., South of 16th)
RajeeBeautySalonAndSpa
905.554.2425


Rajan Salon
For
Men & Ladies
ராஜன் சலூன்
Tel: 416 742-4665
3005 Islington Ave. # 4P, North York.



ROGERS MOTORS

Service & Repairs

Rajah
Class Lic. Automotive Master Technician

45 Munham Gate, Unit #7
Scarborough, ON. M1P 2B3

Tel: 416 755 1846
Fax: 416 755 9476

DURCAA SUPERMARKET

QUALITY YOU CAN TRUST



Tel: 905.796 6762

86 Kennedy Road
Brampton, ON



தன்னை வரசித்தி விநாயகர் வரலாறு

தன்னையன் போடு துதிப்பா ரகத்தினிற் சார்ந்திடுநா
தன்னையன் போற்று தகர்வா கனற்குத் தனிபின்றிய
தன்னையன் போத வுருவானவன்தமி யேற்குத்துணை
தன்னையன் போர்புரி யங்குச பாசம் தரித்தவனே.
(8 மு பாடல் – தன்னை யமக அந்தாதி)

திருமூல நாயனாரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட ஈழமண்டலத்தின் வடபாலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் திருக்கோயில்கள் நிறைந்துள்ள காரைலநகரில் மண்வளம் மிக்க, நெல் வயல்கள் நிரம்பிய களபூமியில் விளங்குவது தன்னைத் திருப்பதி ஆகும். காரை நகரிலுள்ள மிகப்பழைய கோயில்களுள் தன்னை பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இக் கோயில் 1835 ம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது.

ஆவர்கள் அனைவரும் பல ஊர்களைக் கடந்து உடுவிலில் உள்ள சுந்தரேஸ்வரர் கோயிலில் தங்கி அயலவர் உதவியுடன் வாழ்ந்து வந்தனர்.

மானாமுதலி வம்சத்தினரும் அயலில் வாழ்ந்த முதலியன் வம்சத்தினரும் ஏனைய பெருங்குடி மக்களும் ஒன்று சேர்ந்து இக்குடிசைக் கோயிலைக் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற ஆகம முறைப்படி ஆலயமாக அமைத்தனர். இந்தக் கோயில்தான் தன்னை சித்தி விநாயகர் ஆலயமாகும். நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுவதற்காக மானாமுதலி வம்சத்தினர் தங்களுக்குச் சொந்தமான நெற்காணிகளைக் கோயிலுக்கு உடைமையாக கியதுடன் அந்தணர் பெருமக்கள் கோயிலைச் சிறப்பாக



தன்னை பிள்ளையாரின் சிலை தென் இந்தியாவில் இராமேஸ்வரத்துக்கு அண்மையில் இருக்கும் கணபதிதிட்டு என்னும் கிராமத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. அங்கு வாழ்ந்த அந்தணர் குடும்பங்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பணம் நோக்கி வரப் புறப்பட்ட பொழுது வள்ளங்கள் ஒன்றில் விநாயகர் விக்கிரகம் கொண்டு வரப்பட்டது. அந்த வள்ளம் கடலில் ஏற்றட்ட கொந்தளிப்பால் திசைமாறி காரைநகர் கிழக்கு கடற்கரையை அடைந்தது. பிராமணக் குடும்பங்கள் வந்த வள்ளம் பொன்னாலைக்கும் மாதகலுக்கும் இடையிலுள்ள திருவடி நிலையை அடைந்தது.

நடாத்துவதற்காகவும் அவர்கள் வளமுடன் வாழ்வதற் காகவும் ஆதரவும் நல்கி வந்தனர்.

தன்னை விநாயகப் பெருமானின் சிலை மிகவும் அற்புதமானது. ஒரே கல்லில் ஒன்றரை அடி பீடத்துடன் செதுக்கப்பட்டது. விநாயகர் விக்கிரகத்தின் தொப்புள் பகுதிக்குக் கீழே பீடக்கல்லில் ஒரு துவாரம் உண்டு. அபிஷேகம் செய்யும் பால், இளநீர் முதலிய அபிஷேகத் திரவியங்கள் இத்துவாம் வழியாக வெளிவந்து பீடத்தின் முற்பகுதியால் வெளியேவது மிகவும் அற்புதமானது.

தன்னைப் பிள்ளையாரை ஆதரித்து வந்த குடும்பத்தில்

வந்த தம்பதிகளுக்குப் பத்து வருடங்களாகப் பிள்ளைப்யபேறு இல்லாதபடியால் பிள்ளை வரம் வேண்டி தன்னைப் பெருமானை வணங்கியும் சந்தான கோபாலரைப் பிரதிஸ்டை செய்தும் ஆண் மகவைப் பெற்று மகிழ்ந்தார்கள். காரை நகரில் தன்னைப் பிள்ளையார் கோயிலில் மட்டும் பிள்ளைவரம் கொடுக்கும் சந்தான கோபாலர் பரிவாரமூர்த்தியாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இக் கோயிலுக்குப் பெருமை கொடுக்கக் கூடியது இக்கோயிலின் பெயரிலுள்ள பழந் தமிழ் பிரபந்தமான தன்னை யமன அந்தாதி. ஆரம்ப காலத்தில் இக்கோயில் அர்ச்சகராக இருந்தவர் பிரம்மஸ்ரீ ச. முருகேசு ஐயர் ஆவர். இவர் தன்னைப் பிள்ளையார்மீது தன்னை யமக அந்தாதி பாடியுள்ளார். இந்த அந்தாததியின் முதல் எழுபது செய்யுள்களுமே இவராற் பாடப்பெற்றன. மற்றைய முப்பது செய்யுள்களும் இவரது மகன் கார்த்திகேயப் புலவராற் பாடப் பட்டனவாகும். இவ்வந்தாதி நீண்ட காலமாக ஏட்டுச் சுவடியாகவே இருந்தது. கலாநிதி சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் பெரும் முயற்சியினால் புலவர்மணி, பண்டிதர், கலா பூஷணம் வட்டுக்கோட்டையூர் க. மயில்வாகனம் அவர்களின் உரையுடன் 2004 ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்திய அறிஞர் ஒருவரால் எழுதப்பட்ட "அந்தாதி இலக்கியம்" என்னும் நூலில் தன்னை யமக அந்தாதியும் குறிப்பிட்டிருப்பது இதன் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டும்.

இவ்வாலயம் பல ஆண்டுகளாக எவ்வித திருப்பணிகள் வேலையும் நடைபெறாமையால் பாதிப்படைந்த நிலையில் இருந்தபடியால் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று, புனர் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. இதற்குப் பெரும் அளவில் நிதி தேவைப்படுகிறது. இத்தகைய கோயில்களைத் திருத்திப் பழைய சிறப்புடன் இருக்கச் செய்தால் பெரும் புண்ணியம் சேரும் என்பதைச் சிவஞான சுவாமிகள். அறியத்தந்தார்.

With the best compliments from

Scotiabank Residential Mortgages

Whether you're buying or selling a home, or renewing or refinancing your existing mortgage, you can look to my 15 years of banking experience for:

- Expert Advice
- Competitive Rates and
- Innovative Financing Solutions

I am available at a time convenient for your schedule.

Ask me about...

- The Scotia Free Down Payment™ Mortgage
- The Welcome to Canada Program
- The *Scotia* Total Equity™ Plan
- Refinancing
- Switching to Scotiabank
- Financing for the Self-Employed

Scotiabank has a mortgage plan that will suit your personal needs and meet your financial goals.

Let's get started. Call today!

Sri T.Sridharan, B.Sc., AMP
Mortgage Development Manager
(Scotiabank Residential Mortgages)

Tel: 416.953.3297
Fax: 416.287-2483
E-mail: tharma.sridharan@scotiabank.com

Scotiabank™

Life. Money. Balance both.™

™Trademarks of The Bank of Nova Scotia.
All mortgages are subject to certain credit criteria and the home meeting Scotiabank residential property standards. Mortgage plans can be changed or withdrawn at any time without notice.

Best Wishes

உங்கள் மனங்கவர்ந்த புகைப்பட நிறுவனம்

Bharat Studio

Soma 905 507 2999, Cell: 416 566 9552

கருணை உள்ளம் கொண்ட கருணாகரன்

பழமையும் வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் என்னும் நிலத்தை சொந்த ஊராக மதித்து வாழ்ந்த அமரர் கருணாகரன் அவர்கள் அனைவரது மனங்களையும் கவர்ந்த சிறந்த மனிதர் ஆவர். காரை இந்துக்கல்லூரி, யாழ்மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் கல்வி பயின்றார். பின்னர் கொழும்பில் தனது மேற் கல்வியை தொடர்ந்து பட்டயம் கணக்காளர் (Charted Accountant) தகுதியைப் பெற்றார். சிறிலங்காவில் பல நிறுவனங்களில் கணக்காளராகவும், கலாசாலைகளில் பேராசிரியராகவும் வேலை செய்து புகழையும் அனுபவங்களையும் பெற்றார்.

1972 ம் ஆண்டு சிறிலங்காவை விட்டு சாம்பிய அரசாங்க நிறுவனங்களுக்கு கணக்காளராகச் சென்றார். அங்கு பல மன்றங்களில் சேவை செய்தார்.

1978 ம் ஆண்டு ஜமேகா நாட்டிற்கு Common Wealth அமைப்பினால் தெரிவு செய்யப்பட்டு, Accountant Lecturer ஆக வேலை செய்தார்

1987 ம் ஆண்டு Canada நாட்டிற்கு வருகை தந்து பல நிறுவனங்களில் வேலை செய்தார். அவர் காரை கலாச்சாரமன்றத்தின் ஆரம்ப காலம் முதல் ஆயுட்கால அங்கத்தவராகவும், போஷகர் சபை உறுப்பினராகவும் இருந்தார். அக்காலத்தில் இரண்டு வருடங்கள் தலைவராகவும் பணி புரிந்தார்.

அங்கு பல தமிழ் அமைப்புகளில் இணைந்து பணியாற்றி வந்தார். தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் ஆரம்பகால அமைப்பு உறுப்பினராகவும் அங்கத்தவராகவும் தொடர்ந்து சேவை செய்தார். மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்திலும் அக்கறை காட்டிவந்தார். அமரர் கருணாகரன் தீராத இனப்பற்றுடையவர். தமிழர் நலனில் அக்கறை உள்ளவர். இனத்திற்காக இயன்றளவு பங்களிப்பினை வகித்துள்ளார்.

இவருக்கு திருப்பணிகளிலும் ஈடுபாடு உண்டு. ரிச்மண்ட் ஹில் பிள்ளையார் கோவில் நலன்களில் பங்கு பற்றி அங்கத்தவராக ஆரம்பகாலம் முதல் இருந்துள்ளார். சனீஸ்வரன் அமைப்புப் பணிகளில் அபிஷேகம் ஆகியவற்றில் பங்குபற்றுவார்.

காரை அன்னை மீது பற்றுக்கொண்ட அமரர் கருணாகரன் அவர்கள் 1937 ம் ஆண்டு மலேசியா நாட்டில் பிறந்து காரைநகர் சிதம்பரா மூர்த்தி கேணியடியில் வசித்தவர் ஆவர். கனடா காரை கலாச்சார மன்றத்தில் ஆயட் கால அங்கத்தவராகவும் மன்ற உறுப்பினராகவும் போஷகர் சபை உறுப்பினராகவும் இருந்ததுடன் இரண்டு வருடங்கள் (2007 2006) தலைவராகவும் பணிபுரிந்தார்.

ஊர்ப்பணியோடு நின்றுவிடாமல் பல் தமிழ் அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றி வந்தார். கனடிய பட்டயக்கணக்காளர் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் ஆரம்ப கால அமைப்பு உறுப்பினராகவும் பொருளாளராகவும் இருந்து சேவை செய்தார். மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்திலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். தீராத இனப்பற்றுடைய அமரர் கருணாகரன் இறுதிக்காலத்தில் எம்மினத்தின் அவலம் கண்டு மனம் கலங்கினார். தனது உடல் நிலையையும் பாராது வைபவங்களில் சமுகமளித்து இயன்றளவு பங்களிப்பினை எமது இனத்திற்காக செய்து வந்த பெருந்தகையாளர்.

பொதுப்பணிகளில் ஈடுபட்டு "என் கடன் பணி செய்து கடப்பதே" என்ற வாக்குக்கமைய ரிச்மண்ட் ஹில் பிள்ளையார் கோவிலுக்கு ஒழுங்காக சென்று வழிபடுவதுடன் நின்றுவிடாமல் அதன் திருப்பணிகளிலும் பங்கு பற்றி வந்தார். குறிப்பாக இவ் ஆலயத்தில் அமைந்துள்ள நவக்கிரகங்களிற்கான விக்கிரகங்களை நிறுவும் பணியில் முன்னின்று உதவினார். அத்துடன் சனீஸ்வரன் அபிஷேகத்தை வருடந்தோறும் புரட்டாதி மாதம் கடைசிச் சனிக் கிழமையில் தானே பொறுப்பேற்று செய்து வந்தார்.

கனடா காரை கலாச்சார மன்றத்தினால் இக் கோவிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆருத்திரா தரிசனம் விழாவில் மாலையில் சூடாக கோப்பி பானம் வழங்கி வருவார்.

எளிமையான தோற்றமும், பதுமையான நடையும் பொறுமையான குணமும், பெரும் தன்மையான மனமும், கனிவான பேச்சும், அன்பான அரவணைப்பும் புன்சிரிப்பும் கொண்டவர் அமரர் கருணாகரன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை அருள் புரிவார். சாந்தி, சாந்தி, சாந்தி.

நன்றி நவில்கின்றோம்

அன்பின் உறைவிடமாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய் நட்பின் களஞ்சியமாய் உறவினரின் சொந்தமாய், மக்களின் வழிகாட்டியாய், குடும்பத்தின் பாசமிக்க அப்பாவாய், மாமாவாய், தாத்தாவாய், அத்தானாய், அண்ணாவாய், பெரியப்பாவாய் வழிநடத்தி மறைந்த தெய்வம் அமரர் கருணாகரன் அருணாசலம் அவர்களின் மறைவின் போது ஆறாத்துயருற்றிருந்த எங்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறி, பல நிகழ்ச்சியிலும் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், ஊர் மக்கள், காரை அபிவிருத்தி சபையினர் மற்றும் யாவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி. நன்றி, நன்றி

குடும்பத்தினர், மனைவி மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

பரமசிவனாடும் பரதக்கலைக்கு பாரினில் உயர் ஒப்பு உண்டோ

பரதகலா வித்தகர் திருமதி. சித்ரா தர்மலிங்கம்
அதிபர் – பாலவிமல நர்த்தனாலயம்

பரதக்கலை மிகத்தொன்மையான வரலாற்றைக் கொண்டதாகும் ஆதிமனிதன் தனது எண்ணங்களை அபிநயத்தின் மூலமே அடுத்தவர்க்கு வெளிக் காட்டினான். அந்த அபிநயத்தின் வளர்ச்சிக்கட்டமே பரதநாட்டியமாக பரிணமித்தது என்று வரலாறு கூறுகின்றது. கி.மு. 1000 ஆண்டுகள் பழமையான வேதகாலத்தில் தோன்றிய சாமவேதத்தில் இக்கலை பற்றி கூறப்பட்டுள்ளது.

விஞ்ஞானத்திலும் நாகரீகத்திலும் அசுரவேகத்தில் பாய்ந்து செல்லும் நாடுகள் கூட நம்மை வியந்து பார்க்கின்ற அம்சங்களில் பரதக்கலையும் நன்றாக இருந்து நமக்கு பெருமை சேர்க்கின்றது. ஆரம்பகாலத்தில் மக்கள் கலையாக மக்களால் பாதுகாத்து வளர்க்கப்பட்டது. அதன்பின் மன்னர்கள் காலத்தில் இதை மதிப்பதும் வளர்ப்பதும் தர்மமாகவே கருதிபோற்றப்பட்டது.

இவ்வாறு தோற்றம் பெற்று வளர்ந்து வரும் இக்கலை பல்வேறுபட்ட நாகரீக மாற்றங்களினால் பல்வேறு இனமக்கள் கங்கள் சூழல் சமய பழக்கவடக்கங்களுக்கு ஏற்ப கலை கலாச்சார பாரம்பரிய விழுமியங்களைக் கொண்டு விளங்குகிறார்கள். அந்த வகையில் பரதம் பல்வேறுபட்ட மாநிலங்களில் பல்வேறு இனமக்கள் வாழும் நாடுகளிலும் வளர்ந்து நிற்கிறது.

இதன் தாக்கம் ஈழத்திலும் ஏற்பட்டதில் வியப்பில்லை. ஈழத்தில் கூத்து, இசை, நாடகவடிவமாக கிராமிய நடனங்களாக அவைக்காற்றுகை செய்யப்பட்டகலை பாரதத்தில் இருந்து வந்த பரத கலைஞர்களினால் விழிப்புணர்வு ஏற்பட வழி சமைத்து கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா, திரு. வீ. கே. நல்லையா போன்றோரால் இக்கலை முன்னெடுக்கப்பட்டு பரதக் கலை ஈழத்தில் தனக்கென ஒரு தடம்பதித்து வந்தது.

இப்படியான கலை மேலைநாட்டு நாகரீகங்களினால் நம் முன்னோர்கள் நமக்காத் தேடிவைத்த பரதக்கலையின் தரம் குன்றிவிடுமோ என்ற பயம் இன்றும் என் மனதின் ஓரத்தில் சிறிதாக இருப்பதை உணர்கிறேன். நாட்டியப் பேராசான்கள் பலவர் நாட்டியத்திற்காகவே வாழ்ந்து மறைந்துள்ளார்கள். பரதத்தை மட்டுமல்ல எக்கலையானாலும் சரி முழுமனதுடன் தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் பயிலும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக கலையுலகில் தனியோர் இடமுண்டு.

இன்று இந்த பரதநாட்டியமானது இந்தியாவில் பிறந்தது என்றாலும், இந்தியா இலங்கை மட்டுமன்றி புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்ற எல்லா நாடு களிலும் பரதக்கலை வளர்க்கப்பட்டு வருகிறது. இன்றைய இளம் சந்ததியினரிடையே மொழியும் கலாச்சாரமும் தொடர்ந்து வளர்க்கப்பட வேண்டு மாயின் அது கலைமூலம் வளர்க்கப்படுவதே சாலச் சிறந்ததாகும். கடந்த காலங்களில் மாணவரிடையே கலை அறிவானது ஒரு குறிப்பிட்ட வீதத்திலேயே காணப்பட்டதாயினும் தற்போதய காலகட்டத்தில் நல்லொரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு ஏதாவதொரு கலையைக் கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியவர்களாகவே காணப் படுகிறார்கள்.

அதுவும் பரதக்கலையை கற்பிப்பதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். இது பரதக்கலையின் வளர்ச்சியை எமக்கு நன்கு பறைசாற்றுகிறது.

எனவே பெருமைமிக்க இந்நாட்டியக் கலை புனித ஆன்மீக வளர்ச்சியுள்ள நற்பண்புகள் பொருந்திய சிறப்பாற்றலுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.
இக்கலையானது வேர்விட்டு கிளைவிட்டு காயாகி கனியாகி பெரு விருட்சமாக மிளிர்கிறது. இதை பாதுகாக்கும் பொறுப்பு இன்றைய சந்ததியினரின் கைகளில் தங்கி நிற்கின்றது.

ஸ்ரீ கற்பக விநாயகர் கிரியாபீடம்

திருமணம், பதிவுத்திருமணம், உட்பட அனைத்து இந்து மத கிரியைகளும், ஆகம விதிமுறைப்படி செய்துகொள்வதுடன் திருமணத்திற்கு வேண்டிய முத்துமணவறை, பூமணவறை போன்ற அனைத்து ஒழுங்குகளும் செய்துகொள்ள நாடுங்கள்.

சிவஸ்ரீ. ஐயம். ஆரிஹரக்குருக்கள் (ஹரி ஐயா)
(உரும்பிராய் - கைதடி)

905-458-9990
416-989-9797
647-892-6780

வானெலியின் செவிநுகர் வனப்பில் ஓர் புதிய பரிமாணம்.
இளையதம்பி தயானந்தா
பற்றிய ஒரு சிறுகுறிப்பு

-பேராசிரியர் கா. சிவத்தம்பி

தொடர்பியல் என்பது இருபதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் குறிப்பாக 60 களில் இருந்து, முக்கிய சமூக ஆய்வியல் துறையாகப் பயின்று வரப்படுகின்றது. இதில் ஊடகங்களின் இயல்பு, பயன்பாடு, தாக்கம் ஆகியன மிக விரிவாக எடுத்து ஆராயப்பட்டுள்ளன. 20 ஆம் நூற்றாண்டின் பத்தாண்டில் இனங்காணக் கூடியதாக உலகக் கணிப்புப் பெற்ற "பூகோள மயமாக்கம்" என்ற முதலாபளித்துவப் பாய்ச்சல், ஊடாகங்களின் வலிமையினாலேயே சாத்தியப்பட்டது. சந்தைப் பொருளாதாரத்தில் ஊடகங்கள் முக்கியம் பெறத்தொடங்கவே வெகுசனப் பண்பாடு (Mass Culture) உருப்பெறத்தொடங்கி, அதன் பரிணாமமாக ஊடகப் பண்பாடு (Media Culture) எனும் நிகழ்வு (Phenomenon) நிகழ்ச்சி ஆகிற்று. (Event). ஊடகப் பண்பாட்டின் இந்த வளர்ச்சியில் வானொலியின் பங்கு மிக மிக கணிசமானது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் அனைத்துலக தொடர் பாடலுக்கான சாதனமாக விளங்கிய வாமொலி, இது 1950 60 களில் தென்னாசியாவில் தன் முக்கியத்துவத்தைப் பதித்துக் கொண்டது.

இந்த வானொலி முக்கியத்துவப் பதிப்பில் அக்காலம் "ரேடியோ சிலோன்" என அழைக்கப்பட்ட இலங்கை வானொலியின் பங்கு மிக மிக கணிசமானது. 50 களின் பிற்கூற்றிலும், 60 களிலும், ஹிந்தி முதல் தமிழ் வரை இதன் செல்வாக்கு ஓர் ஏகாதிபத்தியமாகவே இருந்தது என்றுகூடச் சொல்லலாம். அனைத்திந்திய வானொலி நிலையம் தன்னுடைய நிகழிச்சி அமைப்பு முறையை மாற்றிக்கொள்ள வேயண்டிய நிர்ப்பந்த த்தை இது ஏற்படுத்தயது. இப்பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பே.

S.P. மயில்வாகனன் என்ற அறிவிப்பாளர் இச் செல்வாக்கின் குறியீடாக விளங்கினார்.
ஆனால் இலங்கைக்குள் சம முக்கியத்துவம் பெற்று அதற்கும் மேலே போய் சிங்களத் தமிழ் பண்பாடுகளின் நவீன மயமாக்கத்திலும், பாரம்பரியத்தின் கையளிப்பிலும் முக்கிய இடம் பெற்றது இலங்கை வானொலியின் தேசிய ஒலிபரப்பே. தமிழ் ஒலிபரப்பிலேயே மறக்க முடியாத பெயர்களான சிவபாத சுந்தரம், வி. என். பாலசுப்பிரமணியம், சானா சண்முகநாதன், போன்றோர், இலங்கை தேசிய தமிழ் ஒலிபரப்பின் உருவாக்க சக்திகளாக விளங்கினார்கள். அக்காலத்தில் 1950 முதல் 70 வரை தமிழகத்தின் தென்மாவட்டங்களில் கூட இலங்கை வானொலியின் தேசிய ஒலிபரப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டது. இத்தெரியப்படுத்தலில் குஞ்சிதபாதம், செந்திமணி, கபூர், சுந்தரலிங்கம் என வரும் அறிவிப்பாளர்கள் முக்கிய இடம் பெற்றனர்.

இலங்கைத் தமிழர்களின் போராட்ட அரசியலின் முதல் விளைவுகளுள் ஒன்றாக, அரசின் சந்தேகங்கள் காரணமாக இலங்கை வானொலி தமிழித் தேசிய ஒலிபரப்பாளர் வளமும், ஒலிபரப்பு வட்டமும் படிப்படியாக சென்று தேயத் தொடங்கின. "இச்சென்று தேய்ந்திறுதல், இலங்கை வானொலி தமிழ்த் தேசிய ஒலிபரப்பை அவசர கால செய்திகளுக்கும், அகாலமரண அறிவிப்புகளுக்குமான ஓர் ஊடகமாக வரையறுத்து விட்டது என்று சொலுமளவிற்கு சுருங்கிப் போய், பொன்மணி குலசிங்கம், ராஜ°சுந்தரம், பரராஜசிங்கம் ஆகியோர் 70 களில் செய்த பிரயத்தனங்களும் மறக்கப்பட்டவையாகவே இருந்த வேளையில், கோடை மழை போன்ற ஒரு அறிவிப்பாளர் நியமனம் 90 களின் தொடக்கத்தில்

நடைபெற்றது. இளையதம்பி தயானந்தா என்ற சென்னை கிறித்தவக் கல்லூரி, பட்டதாரி, அறிவிப்பாளர் ஆனார்.

தயானந்தாவின் குரலும், ஒலிபரப்பு அணுகுமுறையும் காய்ந்து வறண்டு கிடந்த மண்ணில் பெய்த கனத்த மழை போன்று இருந்தது. அறிவிப்பில் ஒரு கனதி, எடுத்துக் கூறும் விஷயங்களில் ஒரு செவிகவனர் வனப்பு, கேட்போர் எல்லோர் கவனத்திலும் விழுந்தது. தயானந்தாவின் திறன் வெளிப்பாட்டின் வலுமிக்க அம்சமாக இருந்தது (இருப்பது) அவரது நேர் காணல்களே. நேர்காணல் என்பது நேர்காணப் படுபவரின் தராதர விவரணமாகவும், தங்களின் கருத்து யாதோ என்கிற வியங்கோளாகவும், தாங்கள் வானொலி நேயர்களுக்கு விடுக்கும் செய்தி யாது எனகிற பிரார்த்தனையாகவும் விளங்கிய நேரத்தில், விஷயம் தெரிந்த இரண்டு பேர்களுக்கிடையிலான, ஒரே வேளைகளில் நேர் காணப்படுபவரை சற்று மடக்கிப் பிடிப்பதுமான ஒரு தொடர்பாடலாக ஆக்கி, நேர் காணப்படுபவரின் முழு ஆளுமையையும் வெளிக்கொணரும் வகையில் இவரது நேர்காணல்கள் அமையும்.

அந்த அளவில் தயானந்தாவின் நேர்காணல்கள் உலகத் தரமானவை. பேசுபவரைப் பற்றியும் பேசுபொருளைப் பற்றியும், பரிச்சயமும் ஆழமாக அறிவும் கொண்ட ஒருவராகவே இவர் நேர்காணல் களை நடத்துகின்றார். இதனால் நேர்காணப்படுபவர் தனது முழு பிரக்ஞை உணர்வுடனே பதில் கூறுகிறார். இவர் செய்த நேர்காணல்கள் பல, கலைஞனின் முழுப் பின்புலம் மாத்திரமல்லாமல் ஒரு நுண்ணுணர்வுடைய கலைஞனின் ஆதங்கங்களும் அச்சங்களையும் வெளிக்கொணரும் ஆற்றல் கொண்டது. நேர் காணப்பட்ட எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், பிரபலங்கள் எல்லோரும் நம் முன் பெரும் ஆளுமைகளாக (Personalities) நிற்பதிலும்பார்க்க ஆட்களாகவே (Persons) தங்கள் தங்கள் மனிதத்துவ உயிர்ப்புடன் நம்முன் நிறுத்தப்பட்டார்கள்.

சினிமா தொலைக்காட்சிக்கு இல்லாத ஒரு பலம் வானொலிக்கு உண்டு. அது கேட்குநர், நிகழ்ச்சியை கேட்டுக்கொண்டு இருக்கும்பொழுதே தம் மனக் கண்ணில் கேட்கும் விஷயத்தை ஒருநிலைப்படுத்திப் பார்ப்பதாகும். தயானந்தாவின் நேர்காணலின்போது கேட்குநர், தம் மனக்கண் முன் கேட்கப்படுநரை அவரது பல்வேறு கோணங்களிலும் நிறுத்திப் பார்க்கின்றனர்.

தயானந்தாவின் ஊடக ஆற்றல் மேலும் வளர வேண்டும். வளர்க்கப்பட வேண்டும். வளர்வதற்கான சூழலமைவுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

கோவளம் வெளிச்சவீடு



இலங்கையில் உள்ள மிகவும் உயரமான இரண்டாவது வெளிச்சவீடு கோவள வெளிச்சவீடாகும். இது பாக்குநீரிணையில் நடைபெறும் கப்பற்போக்கு வரத்திற்கு பாதை காட்டுவதற்காக 1916ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியில் கட்டப்பட்டது. பாக்கு நீரிணையின் முனைப்பகுதியாக கோவளம் இருந்ததால் இவ்விடம் தெரிவு செய்யப்பட்டது. ஐந்து தட்டுக்களைக்(மாடிகள்) கொண்டதாக கட்டப்பட்ட இந்த கோவளம் வெளிச்சவீட்டின் உயரம் 30 மீற்றர்கள் ஆகும். இவ்வெளிச்சவீட்டின் உச்சியில் உள்ள ஒளிச்சமிக்ஞை பத்து வினாடிக்கு ஒருமுறை இரண்டு வெள்ளை ஒளிகள் வீசும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தது.



சுமார் 25 வருடங்களுக்கு முன்பு வரை நிறப்பூச்சு வேலைகள் நடைபெறும் காலங்களில் மக்கள் ஏறிப்பார்ப்பதற்கு அனுமதிப்பது உண்டு. பின்னர் உள்நாட்டு யுத்தம் உச்சகட்டமடைய இதனை பராமரிப்பது நின்று போனது. 1991இல் இலங்கை கடற்படை காரைநகரை கைப்பற்றிய பின் வெளிச்ச வீட்டினை அண்டிய பகுதி பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்டது. கடந்த வருடத்திலிருந்து மக்கள் பாவனைக்கு இப்பகுதி திறந்து விடப்பட்டுள்ளதுடன், துறைமுக அதிகார சபையிடம் கோவளம் வெளிச்சவீடு அடங்கலாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழு வெளிச்ச வீடுகளை மீள் புனரமைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கடலுக்கு அருகில் இந்த வெளிச்சவீடு கட்டுவதற்கு அத்திவாரமிடப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது...

அ.காண்டீபன்

காரை வசந்தம் 2012 சிறப்புற வாழ்த்துக்கள்

With the best complements

from

Paramsothy Nanthakumar

வசந்தத்தில் ஓர் நாள்

கனடா வாழ் எம் காரை உறவுகளுக்கு வணக்கம். இன்று 12 ஆவது வருடமாக வீசும் இந்த வசந்தத்தில் நேரடியாக உங்களை சந்திக்கும் வாய்ப்பழித்த கனடா காரை கலாச்சார மண்டபத்திற்கு, பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

ஒரு ஊரின் வளர்ச்சி என்பது அதன் அபிவிருத்தி யிலேயே தங்கியிருக்கின்றது. அபிவிருத்தி எனும்போது கல்வி, சுகாதாரம், கலை கலாச்சாரம், பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கையுடன் கூடிய வாழ்வு. இந்த வகையில் நாங்கள் பின்தங்கி நிற்கும் விடயம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இயற்கையுடன் கூடிய வாழ்வு. ஆகவே வெளிநாடுகளில் இயங்கிவரும் அனைத்து சங்கங்களும் நன்றாக இணைந்து எதிர்காலத்தில் ஒரு சிறு கைத்தொழில்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தல். முற்றும் சுய தொழில் வாய்ப்புக்களை வழங்கல் ஆகிய துறைகளில் நாங்கள் கவனம் எடுக்க வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

2 அல்லது 3 சகாப்தங்களுக்கு பின்னர் பார்த்தீர்க ளானால் ஊரில் இருந்து சிறு கைத்தெதாழில் மூலம் உருவாக்கப்பட்ட பல பொருட்கள் ஊர் மக்களின் உபயோகத்திற்கு மட்டுமன்றி காரைநகருக்கு வெளியிலும் அனுப்பப்பட்டது. சவர்க்காரம், கயிறு, பனங்கட்டி, கருவாடு, சுருட்டு, எமது கற்பகதருவான பனைமரத்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட பாய், கடகம் போன்ற பல பொருட்கள் உதாரணமாகும். ஆகவே இவற்றையெல்லாம் நாம் மீண்டும் நடைமுறையில் கொண்டுவரவேண்டும்.

இயற்கையுடன் கூடிய வாழ்க்கை எனும் போது சிறுபோக, பெரும்போக விவசாயத்தை ஊக்குவித்தல், மரம்நடுதல் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்களில் சிரமதான முறைகளை மீழ்கொண்டு வருதல். நெல்லி [illegible]ள் நடுவதனால் தண்ணீரை நன்னீராக மாற்றலாம். என்று ஆய்வுகள் கண்டு பிடித்துள்ளது. முருங்கை தூதுவளை, மிசிட்டை போன்ற வீட்டில் தானே வளரும் தாவரங்களில் ஒரு மனிதனுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் உள்ளது. இதைவிட இவைகள் ஒரு நோய் எதிர்ப்பு உணவுவகைகள் ஆகும். இவற்றை யெல்லாம் வீட்டில் வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இங்கிருக்கும் சங்கங்கள் ஒன்று சேர்ந்தால் மட்டும் இது சாத்திய மாகாது. ஊரில் உள்ள அபிவிருத்தி சபையின் ஒத்துழைப்பும் காரைநகர் வாழ் மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம்.

பழைய முதுமொழி ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது ஆம் உண்மைதான் எங்களிடம் சுவர்கள் ஏராளம் உண்டு. சித்திரங்களும் ஏராளம் உண்டு. ஆனால் ஓவியர்கள்தான் குறைபாடு. உருவாக்க வேண்டியது எங்கள் கடமை.

கனடா காரை கலாச்சார மன்றம் மேலும் பலநற்செயற் பாடுகளை ஆற்றி மன்றம் மேன்மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"இன்னும் பல எம் எண்ணங்களில் அது
வண்ணம் பெறும் வரும் காலங்களில்"

ப. தவராசா
தலைவர் – பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கம்.

காரை வசந்தம் 2012 சிறப்புற வாழ்த்துக்கள்

With the best compliments

from

லிங்கராஜன் நாகலிங்கம்

பலகாடு, காரைநகர்

என் மனம்

என் மனம் ஒரு மயான பூமி. எத்தனையோ எண்ணங்கள் ஞாபகம் என்னும் கல்லறைக்குள் கண் துயிலுகின்றன.

நினைக்கத்தெரிந்த மனத்திற்கு மறக்கத் தெரிவ தில்லை. சந்தோஷத்தில் சிலிர்த்துப் போகின்ற என் மனம் சோகத்தின் கனம் தாளமுடியாமல் பல தடவை கண்ணீரில் கரைந்து விருகிறது.

நடந்ததை நினைத்துப் பார்ப்பது கூட என் மனதிற்கு ஒரு ஒளைடதமாக அதேவேளை வேடிக்கையாகவும் இருக்கிறது. என் வாழ்க்கையே ஒரு வாகனம். இல்லை! வாகனத்திலே தான் வாழ்க்கை. வீடு விற்பனை முகவரான பின் ஓடாத பாதையில்லை. தேடாத மனிதரில்லை! திறக்காத படலையில்லை! கேட்காத கதைகள் இல்லை! இங்கே அத்தனையும் சொல்ல எனக்கு நேரமில்லை!

ஒரு மனம் ஒன்றே எண்ணம் என்று வாழ்ந்தவர் களாால் தான் சாதனையாளர்களாக சரித்திரத்தில் இடம் பிடிக்க முடிந்தது.

பசு மேய்ந்த பின்பு மரநிழலில் இரை மீட்கும். முழு மானையே இரையாக்கிய பின்பும் புலி கூட்டில் குறுக்கும் நெடுக்குமாகத்தான் நடக்கும்.

"என் மனம் தான் என் வாழ்வின் மையம்." This is Your Life, and it's been waiting for you to discover it!

ஆனந்த பைரவியில் ஆலாபனை செய்து கொண்டு இருக்கும் பொழுது மனம் கல்யாணியில் கலந்து விட்டால் கச்சேரி களைகட்டாது.

எந்த ஒன்றில் நான் ஈடுபடுகின்றேனோ அதே ஒன்றில் என் மனம் முழுதாக ஒன்றிவிட வேண்டும். ஒரே நேரத்தில் ஒரே இலக்கில் தான் என் கவனம் முழுவதும் குவிந்து இருக்கவேண்டும். ஒரு மனம் ஒன்றே எண்ணம் என்பது கைவரப் பெற்றால் இந்த உலகில் எதுவும் சாத்தியமே என்ற சுவாமி விவேகானந்தர்: பிரான்சின் ஆதீக்கம் ஜப்பான் படையெடுப்பு சீன எதிர்ப்பு அனைத்தையும் முறியடித்து சிந்தனைத் தவம் சிறிதும் கலையாமல் ஏற்ற சபதத்தை நிறைவேற்றி முடித்த ஷோசிமின்: விசாகப் பூரண சந்திரன் வானவெளியில் நிலவொளி பரப்பிய ஓர் இரவில் புத்தரான சித்தார்த்தன்

ஒரு மனம் ஒன்றே எண்ணம் என்பதை வாழ்க்கையின் வேதமாக்கியவர்களைத்தான் உலகம் வணங்கும்.

பத்துத் திசைகளில் என் பார்வை திரும்பினால் எந்தத் திசையையும் நான் ஆளமுடியாது என்பது தான் உண்மை.

அத்தனைக்கும் ஆசைப்படுவதில் எனக்கு உடன் பாடில்லை அதில் அர்த்தம் இருப்பதாக புலப் படவுமில்லை.

மேடு பள்ளம் இல்லாத வாழ்க்கைப் பயணம் ஏற்ற இறக்கம் இல்லாத சங்கீதம் போல. அதில் உணர்ச்சியும் இல்லை: நெகிழ்ச்சியும் இல்லை.

மழையும் பனியும் குளிரும் காற்றும் கலந்தது தானே காலநிலை. இனம் தெரியாத விரக்தி: காரணம் இல்லாத வெறுப்பு: கண்ணீரை வரவழைக்கும் கசந்த நினைவுகள் என....!!! எல்லாம் எனக்கே எனக்கா! இங்கே யாருக்குத்தான் இல்லை இவை. இன்பமும் துன்பமும் இணைந்தது தானா வாழ்க்கை?

சொர்க்கத்தை நரகமாகவும்: நரகத்தை சொர்க்க மாகவும் மாற்றக்கூடியது மனதில் எழும் எண்ணமே என்றான் கவிஞன் மில்டன்.

ஏதோ ஒரு சோகத்தில் இதயம் ரணமாகி உறவுகள் வெறுப்பாகி இன்னும் இன்னுமாகி! ஒப்புக்கு உதடுகளில் மட்டும் புன்னகையின் ஊர்வலத்தை நடத்திக்கொண்டிருப்பவர்கள் நாங்கள்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனச்சான்றில் சுவர்களில் நல்லொழுக்கத்தின் குரல் எதிரொலித்துக் கொண்டு தான் இருக்கிறது. அதை நன்றாக உணர்ந்து கேட்டால் யாருக்கும் தவறு செய்யத்தோன்றாது.

இது போட்டியும் பொறாமையும் நிறைந்த உலகம். தன்னுடைய இருப்பைத்தக்க வைத்துக்கொள்ள ஒவ்வொருவரும் ஓயாமல் போராட வேண்டியுள்ளது. "வல்லமை உடையதே வாழும்" என்ற டாஆவின் கொள்கை வரவேற்புடையதாகிறது. முயற்சியும் உழைப்பும் இல்லாத மனிதனுக்கு வாழ்க்கை இல்லை. வளர்ச்சியும் இல்லை.

"உனக்கு வேண்டிய ரொட்டித்துண்டை உன் வியர்வையில் தேடு" என்றார் கர்த்தர். "உழைப்பின்றி உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம்" என்றான் என் இஸ்டதெய்வம் கண்ணன். "சோம்பியிருப்பதை விட உழைப்பதே சுகமானது" என்றார் எட்வின் அர்னால்ட். ஒளியை வேண்டி பெரும் சிரமத்துடன் சிறு கழுகு போட்டியிடுகிறது. அது தான் வாழ்க்கைப் போர்! முட்டி மோதும் துணிவே இன்பம்! உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி.

விதியை நோவதா? தலை எழுத்து இப்படி ஆகிவிட்டதே என சமாதானம் தேடுவதா? எழுதியதை அழித்து எழுத முடியுமா? என்ற தத்துவப் புலம்பலா. ஆண்டவனுக்கு ஏன் கண் இல்லாமல் போனது என கண்ணீர் விடுவதா? "விழுவது மீண்டும் எழுவதற்கே!" என்ற முயற்சியின் மூல மந்திரத்தை என் மனம் மறந்தது ஏன்?

What you are thinking now is creating your Future Life. You create your life with your thoughts. "Your Life is in Your Hands".

கைகட்டி யாசிப்பவனுக்கு நாம் போடுவது பிச்சை. கேட்காத போதே ஒருவன் தேவையறிந்து உதவுவது தானம்! பிச்சை சமூகத்தின் சாபம்! தானம் மனிதன் சகமனிதனுக்கு வழங்கும் வரம்.

"இருக்கும் இடமே போதும்" என்ற மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் இந்த மண்ணில் வாழ்பவர்கள் குறைவு. வேதனை விரக்தி நிராசை ஆற்றாமை நம்பிக்கை வரட்சி வெறுப்பு கோபம் கசந்த நினைவுகள் என்ற கணக்கற்ற மனக்காயங்களுக்கு மருந்து தேடும் மனிதர்கள் தான் இங்கே அதிகம்.

சொந்த வீடு சுகமான வாகனம் Blue Rays Video, I Pod, I phone, I pad இத்தியாதி இத்தியாதியோடு வங்கிக் கணக்கில் வளரும் பணம் என்ற இடைவிடாத தேடலில் பலருக்கு வாழ்வே இயந்திரமயமாகி விட்டது. ஒரு வேளை உணவையாவது ஒரே மேசையில் கணவன் மனைவி குழந்தைகளோடு சேர்ந்து உண்ண: தொலைக்காட்சியின் ஒரு நிகழ்ச்சியையாவது சேர்ந்து ரசிக்க: அல்லது அவர்களோடு சேர்ந்து பாட: அருகில் உள்ள பூங்காவிற்கு உலாப்போக: குழந்தைகளோடு துவிச்சக்கர வண்டியில் பயணிக்க: Back yard புல்லில் படுத்துப்புரள: விடுமுறை நாளில் தாயின் மடியில் தலைசாய்த்துப் பேச: தாரத்தின் புலம்பலின் நடுவே புத்தகம் வாசிக்க: ரெலிபோன் கதைக்க: ஆகக் கூடியது தண்ணி அடிக்க: குறைந்தது தண்ணியின் பின் சாப்பிடாமல் படுக்க நம்மில் யாருக்கும் இப்பொழுது நேரம் இல்லையெனில் தூ! இது என்ன வாழ்க்கை!

"இருக்கும் இடத்தில் இந்த நொடியில் இன்புற்றிரு" என்ற அமெரிக்க அறிஞர் இங்கர்சாலின் வார்த்தை வேதம்.

மன்மத எழுத்துக்களுக்கு மாலை சூட்டும் இந்த வணிகப் பொருளாதார யுகத்தில் மனித நேய எழுத்துக்களுக்கு மரியாதை இல்லை. "எழுத்தும் தெய்வம் எழுதுகோலும் தெய்வம்"என்றான் பாரதி. இங்கே வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள் புகையை மேகம் என்று மயங்கி தோகை விரித்தாடுகின்றன.

சர்வாதிகாரிகளுக்கு சாவுமணி அடித்த சரித்திரம் எழுத்துலகில் உண்டு.

இங்கே திருக்குறளும் தேவாரமும் திருப்புகழும் மாணவர்களினால் மதிப்பெண்களுக்காகவே மனப்பாடம் செய்யப்படுகிறது. இந்த மண்ணில் (கனடாவில்) எழுதுவதற்கு நிறையவே இருக்கிறது. சமுதாயத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளை கருவாக்கி அவற்றுக்கு கலையழகோடு தீர்வு சொல்வது தான் எழுத்தின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். கனடாவில் கலை என்பது .. ·····..! @ # ? $ % & * = + - > < . Please choose the best symbol according to your Knowledge.

என் மனம்! இல்லை! என் எழுத்து இங்கே யாரையும் சலவை செய்யாது. அதே நேரம் எழுத்தை வேள்வியாக்கும் டால்ஸ்டாய் அல்ல நான்! விளக்கின் ஒளி விட்டில் பூச்சிகளை வீழ்த்துவது போல பல

பக்குவப்படாத மனிதர்கள் விளம்பர வெளிச்சத்தில் மயங்கி விடுகிற காலம் இது.

கூடிக்கலையும் மேகம் போல பார்த்துக்கொண்டு இருக்கும் பொழுதே விளம்பர வெளிச்சம் விலகிவிடும். மழை பொழிவது போல மலர் மலர்வது போல நதி நடப்பது போல தென்றல் தவழ்வது போல கைமாறு கருதாமல் மக்கள் சமூகத்திற்கு காரியம் ஆற்றும் மனிதர்களுக்கு எந்த விளம்பரமும் தேவை இல்லை. மகிழம் பூ காய்ந்து சருகான பின்பு தான் அதிகம் மணக்கிறது.

பொது நலனுக்காக இடையறாமல் இயங்குபவர்களுக்கு வாழும் பொழுதே அதற்குரிய மரியாதையை வரவேற்பைக் கொடுக்க நாம் மறுக்கிறோம். வாழும்போது அவர்களைப் புறக்கணித்து வறுமையில் தள்ளி செத்த பின்பு சிலையெழுப்புவதும் மாலை சூட்டுவதும் எந்த வகையில் நியாயமென்று எனக்குத் தெரியவில்லை.

நேர்மையும் நல்லொழுக்கமும் வாய்மையும் தூய்மையும் துலங்க பொது வாழ்வில் பவனி வந்தால் நாங்கள் "நன்றி + அற்று = நன்றியற்று நடந்து கொள்வது" ஏனென்று என் மனதிற்கு இன்னும் புரியவில்லை.
என் பொது வாழ்க்கையும் நாளுக்கு நாள் புளுத்து தான் போனது. காரணம் மேய்ப் – பவர்களே மேய் – பவர் – களாக மாறியதால் ஆடுகளின் கூடாரத்தில் அன்றாடம் மரண ஓலம்.

ஊருக்கு உழைத்திடல் யோகம் பிறர் நலம் ஓங்கிடுமாறு தன்னை வருத்துதல் யாகம் என்று வாழ்ந்து காட்டிய அந்த நாள் தலைவர்களின்

(மாண்புமிகு எம் பி தியாகராஜா உட்பட) நேர்மை இன்று நம் கண்முன்னே பொய்யாய்ப் பழங்கதையாய் கனவாய்ப் போய்க் கொண்டிருப்பதில் நல்லவர்கள் யாருக்குத்தான் வருத்தமில்லை.

பூமிப்பந்தை காலடியில் புரட்டிய தன்னை விட டயோஜனிஸ் எந்த விதத்தில் உயர்ந்தவன் என்று சிந்தித்த மாவீரன் அலெக்ஸ்ஸாண்டர் பல காலமாக விடை கிடைக்காமல் இறுதியில் டயோஜனிஸ் இடமே நேராகப் போய்க் கேட்டான். மக்கள் என்னை விட உங்களை மிகுதியாக மதிப்பது ஏன்?

அலெக்ஸ்ஸாண்டர்! "நீ வெறும் மண்ணை வென்றவன்! நான் என்னை வென்றவன்!" என்றான் டயோஜனிஸ்.

தேவர்கள் பாற்கடலை கடைந்த பொழுது முதலில் வெளிப்பட்டது ஆலகால விஷம். அதற்குப் பின்பு வந்தது தான் உயிர் காக்கும் அமுதம்.

மனித வாழ்க்கையில் அமைதியைத் தருவதே மதங்களின் நோக்கம் மட்டமல்ல எங்கள் ஊர் மன்றங்களின் நோக்கமும் ஆகும். எங்கள் மண்ணில் பற்றுள்ள ஈரமனமுள்ள யாரும் இனி விலகி நிற்கக் கூடாது என்பது மட்டுமல்ல யாரும் யாரையும் விமர்சிக்கவும் கூடாது.

சீசர் புரூட்டஸை வானத் தேவனாக நெஞ்சில் வைத்துப் போற்றினான். அந்த நெஞ்சில் புரூட்டஸ் குத்தியதுதான் எல்லாவற்றையும் விட இரக்கமற்ற கத்திக் குத்து!

நீங்களும்! நானும்! இயந்திர கதியில் தான் ஓடிக்கொண்டிருக்கின்றோம். புரிகிறது! என்றாலும் எங்கள் ஊரைப்பற்றிச் சிந்திக்க மனமில்லாதவர்களா? பொருளாதார வேகத்தில் மண்ணின் முகம் மறந்து போனதா! அல்லது வாழ்க்கைத்தரம் தான் மாறிப்போனதா? "உலகில் எங்கள் ஊர் மண்ணுக் கோர் வாசம் இருக்கிறது! மேதா விலாசம் இருக்கிறது!" தேடிப்பாருங்கள்! உண்மைதானா தெரியும்!

ரோம் நகரம் தீப்பற்றி எரியும் பொழுது நீரோ மன்னன் தான் பிடில் வாசித்தான். நாங்களுமா?

முகம் தெரியாத ஒருவனை புற்று நோய் தாக்கிய பொழுது அந்தத் தாயின் புலம்பல் கேட்டுக் கண்ணீர் துடைக்க பல்வேறு திசைகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான கைகள் போட்டியிட்டதை நினைக்கும் பொழுது மழை விழுந்த செம்மண் நிலமாக என் மனம் நெகிழ்கிறது. சக மனிதர்களின் நலனில் நாட்டம் உள்ளவர்களால் தான் சமூகம் சிறப்புறுகிறது.
பாடுகளைச் சுமந்து சிலுவையில் அறையப்பட்டு தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று வேதனையில் குரல் கொடுத்து ஏசு தலை சாய்ந்தது ஏன்?

செல்வச்சீமாட்டி கதீஜாவின் கணவனாய் இன்பங்களை அனுபவிக்காமல் கல்லடியும் சொல்லடியும் காயங்களும் ஏற்று இஸ்லாமை அரபு மக்களின்

இதயங்களில் இறக்கி வைக்க நபிகள் துடித்தது ஏன்? தான் உண்டு தன் வக்கீல தொழில் உண்டு என்றிருக்காமல் மக்கள் உரிமையை நிலை நாட்ட மிக மோசமான தாக்குதலுக்கு மகாத்மா உள்ளானது ஏன்? அடிமை முறையை ஒழிக்க முயன்று ஆபிரகாம் லிங்கன் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானது ஏன்?

கறுப்பர்களின் நலன் காக்க மார்டின் லூதர்கிங் மண்ணில் சாய்ந்தது ஏன்? ஏன்? ஏன்?

சந்நியாசம் என்பது வாழ்வைத் துறப்பது அன்று. செய்யும் தொழிலின் பலனைத் துறப்பது. வேள்வி என்பது நெய் ஊற்றி நெருப்பு வளர்ப்பது அன்று. சமூக நலன் என்னும் அக்னியில் சுயநல ஆசைகளைச் சுட்டு எரிப்பது.

தொண்டும் துறவும் கொண்ட மனிதர்களை பொது வாழ்வில் நாம் கண்டெடுக்க வேண்டாமா? அப்படிப்பட்ட மனிதர்கள் நரம்போடும் சதையோடும் எங்கள் மண்ணில் எங்கள் ஊரில் புலம்பெயர் நாடுகளில் நடமாடவில்லையா?

தலைமை பதவி பெயர் புகழுக்காக என் ஊர் மக்கள் யாரும் எங்கும்! எந்த நாட்டிலும்! "நாக்கு யாகம்" நடத்தவில்லை "எழுத்து வேள்வியும்" தொடங்க வில்லை.

ரோம் நரகம் ஒரே நாளில் கட்டி முடிக்கப்படவில்லை. குரங்கிலிருந்து மனிதன் உருவாகுவதற்குள் எத்தனை பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்தனவோ அத்தனை மாற்றங்கள் எம் மண்ணின் மன்றங்கள் உருவாகு வதிலும் நிகழ்ந்தன நிகழ்கின்றன.

தவறுதல் மனித இயல்பு!!! ஒருவர் தவறிழைத்தால் மற்றவர் மன்னித்து மறத்தலே நல்லது!!! குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை!!! விட்டுக் கொடுத்தல் அடிமைத்தனம் அன்று!!! விட்டுக் கொடுத்தலில் தான் மனப்பூர்வமான மகிழ்ச்சி மலர்கிறது!!!

உறவுகளுக்காக உதவிக்கரம் நீட்டுவதில் தான் நிஜமான தேசத்தின் நிறம் தெரிகிறது. சரியான புரிதலில் தான் வாழ்க்கை ஒளிமயமாகிறது.

இணைந்திருப்போம்!!! ஆனால் இணைப்பில் இடைவெளி இருக்கட்டும். கோயிலைத்தாங்கும் தூண்கள் இடைவெளி விட்டே நிற்கின்றன. இசை தரும் இனிய வீணையின் நரம்புகள் விலகியே இருக்கின்றன. விளக்கில் எண்ணெய் இருக்கிறது. ஒளிதரும் திரியும் எண்ணெயில் நனைந்தபடி தலையை நீட்டுகிறது. திரியில் தீபமேற்றும் தீப்பெட்டியும் பக்கத்தில் மௌனமாய் படுத்துக்கிடக்கிறது. தீப்பெட்டி திறந்து தீக்குச்சி எடுத்து திரியில் சுடர்பரப்ப வாருங்கள்!!!

ஏனெனில் ஏற்றப்பட்ட விளக்கை விட ஏற்றி வைத்த தீக்குச்சியே உயர்வானது.!!!

உசிரைக் கொடுத்த மண்ணைவிட்டுப் போகாதீங்க!
இந்த ஊரை விட்டு எங்கேயும் போய்ச் சாகாதீங்க!
வயசை மறங்க! வாய் விட்டுச் சிரிங்க!
பாடுபட்டு உழைங்க! பகுத்து உண்டு வாழ்ந்து பாருங்க!

If You See it in Your Mind,
You are going to hold it in your Hand.

"With the deepest gratitude I wish to thank every person who has come into my life and inspired touched, and illuminated me through their presence. Specially to My Daddy".

Ranjson Kanapathippillai
ranjson@rogers.com

KK ELECTRONICS

Digital Video Production & State-of-the-art Digital Imaging



FULLY DIGITAL VIDEO DVD PRODUCTION

- Specializing in the Fine Art of Video Production
- DVD Mastering/Authoring
- Media Duplication CD, DVD, Tape, Disk
- Videos Available on DVD
- Overseas-PAL-NTSC-SECAM Transfers
- Custom Packages Available

We capture memories forever...
Simply the best in quality, service & price
Satisfied customers since 1985

tel: 905.472.0877 • 416.566.9776 • 416.566.4139

www.kkelectronics.ca

குமார் ஒருவர் துறைகள் இரண்டு

✸ கல்விச் சேமிப்புத் திட்டம் ✸ காப்புறுதி

RBC Insurance | BMO | Manulife Financial | Canada Life™

மேலும் பல காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதி



Kumar
Tel: 416-491-4558
Cell: 416-566-7924

கட்டிய பணம் திரும்பப் பெறக்கூடிய ஆயுள் காப்புறுதி **Life Insurance**

✸ **Term Life Insurance**
✸ **Permanent Life Insurance**

இதுவரை மரணத்தைத் தழுவிய சிலருக்கு ஐந்து நாட்களில் ஆயுள் காப்புறுதித் தொகையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்

Critical Illness Insurance

Heart Attack, cancer, stroke or Coronary Artery Bybass Surgery போன்ற 22 வகை நோய்கள் உங்களைப் பீடித்தால் உங்கள் Insurance பணம் முழுவதும் உங்களுக்குக் கிடைக்கிறது. இப்படியான வருத்தங்கள் வரா விடடாலும் நீங்கள் கட்டிய பணம் முழுதும் திரும்பக் கிடைக்கும்.

Diability Insurance

வேலை செய்ய முடியாதபடி ஏலாத்தன்மை ஏற்படின் உங்கள் மாத வருமானம் வரக்கூடிய வகையில் Insurance செய்யலாம்.

Mortgage Insurance

Mortgage எடுத்த வங்கியில் Mortgage Insurace எடுத்தால் மரணம் ஏற்படும் பட்சத்தில், அந்த நேரத்தில் உங்களுக்கு எவ்வளவு கடன் (Mortgage) இருக்கிறதோ அதை வங்கி கட்டி விடும். ஆனால் எங்கள் Plan, நீங்கள், Mortgage எடுத்த தொகை முழுவதையும் உங்களுக்குச் செலுத்தும். நீங்கள் உங்கள் கடனைச் செலுத்திவிட்டு மிகுதியை வைத்திருக்கலாம் அல்லது முழு Insurance பணத்தையும் வைத்துக்கொண்டு மாதாந்த Mortgage பணத்தைச் செலுத்திக் கொண்டு வரலாம். Mortgage எடுத்த வங்கி மாறினாலும் இத் திட்டத்தில் Insurance தொகையோ அல்லது கட்டுப்பணமோ மாறாது.

16 வருடங்களுக்கு மேலாக 7,000க்கும் மேற்பட்டோருக்கு நாம் காப்புறுதி செய்து கொடுத்துள்ளோம்

வீடுகள், வியாபாரநிலையங்கள் வாங்க விற்க

HOMELIFE HIGHER STANDARDS

Kumar Kathiravelu

Sales Representative

Cell: 416-566-7924

E.mail:kumar.k@sympatico.ca

REALTOR®
MLS MULTIPLE LISTING SERVICE®

HomeLife/Landmark Realty Inc., Brokerage

Independently Owned and Operated

Scarborough Office:
5200 Finch Ave.E., Suite 206
Toronto, ON. M1S 4Z4
TEL: 416 293 5093
FAX: 419 293 5237

North York Office:
75 The Donway West, Suite 708
Toronto, ON. M3C 2E9
TEL: 416 386 1200
FAX: 419 386 1500

அழையுங்கள்: குமார் 416-491-4558
Cell: 416-566-7924 E-Mail: kumar.k@sympatico.ca

வீடு வாங்க, விற்க

RE/MAX

NOBODY IN THE WORLD SELL
MORE REAL ESTATE THAN RE/MAX

Jey Nadarasah
Sales Representative

RE/MAX Vision Realty Inc., Brokerage
2210 Markham Rd # 1 Toronto,ON M1B5V6
Cell: (416) 305-1111 Office: (416) 321-2228 Fax: (416) 321-0002

Email: jey@jeyhomes.ca www.jeyhomes.ca

கனடா காரை கலாச்சார மன்றம் Sept 30, 2012இல் நடாத்திய தமிழ்மொழித்திறன் போட்டி-2012இல் பங்கு பற்றியோர் விபரம்

தியானா தவமலிங்கம்

நிந்துஜா
மோகனேந்திரன்

லினோசா
இராஜேஸ்வரன்

ஆதிரை
இராசமோகன்

ஆதினி
விநாயகமூர்த்தி

அஞ்சனன் சிவகுமார்

ஆரூசன் சுதாகரன்

யாழினி
யோகேஸ்வரன்

வாசுகி
தயானந்தராஜா

அயிலாஸ் சிவகுமார

துர்கா சிவகுமார


அனந் சற்குணராஜா

அஞ்சனா
சற்குணராஜா

சயந்தன்
கணேசலிங்கம்

துளசி தவராஜா

பவிஷா
மோகனேந்திரன்

கிருஜானி
நடனசபேசன்

ஹரிணி
விநாயகமூர்த்தி

டிலக்ஷி
இராஜேஸ்வரன்

மாதங்கி மகாராஜா

கிரிசன் பிறைசூடி

ஹரிணி தயானந்தராஜா

காவத்திக் சிவகுமார

ஆரபி இராசமோகன்

தனுஷன் மகாராஜா

(scan code to msg me)

We work with Banks, Credit Unions,
Trust Companies and Private lenders.
We offer 2nd mortgages and line of credits
to consolidate all your bad debt.

அனைத்து கடன்களுக்கும் ஒரு முழுமையான
தீர்வு காண அழையுங்கள்!

SUGANTHAN
suganthan.ca

OBSIDIAN
MORTGAGE CORPORATION

35 Grand Marshall Drive, Scarborough ON M1B 5W9

DIRECT 416-859-2564

Office: 416-283-2377 x 116, Fax: 416-283-5820

Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic # 10473 #M08010501

கவிச்சரம்

'க' எனின் வடஎழுத்தில் ஒன்று – எங்கள்
காரை வசந்தமும் கலைகளில் நன்று

காரைநகரும் காகமும் ஒன்றோ – எங்கள்
ஊரின் பெயரும் ஒற்றுமையும் இன்றோ

கிழக்கு வெளுக்கும் பாரீர் – பாரோர்
கீரிடும் ஓசையும் கேளிர்

குடும்பம் என்றால் சலசலப்பு இல்லையோ – அவை
கூறியும் ஒன்றாய் சுறுசுறுப்பு வரவில்லையோ

கெட்டிப் பிடியுங்கள் சபையை – நீவிர்
கேண்மின் கேண்மின் ஊரின் நிலமையை

கையில் வருமோ காசு – சபை
பையில் விழுமோ காசு

கொடுப்பார் கொடுத்துக்கொண்டேயிருப்பார் – அதை
கெடுப்பார் கெடுத்துக்கொண்டேயிருப்பார்

கை நிறைய கொடுங்கள் உங்கள் ஆதரவை – சபை
பை நிறைய கொடுங்கள் உங்கள் ஆதரவை

கோயில் எங்கள் சிவன்கோயில் – கோயில்கள்
போயில் அல்லால் என்ன வாயில்

கோடி இல்லாவிடில் இலட்சம் – எமது
கௌரவமே சில இலட்சங்களோ

ஆக்கியோன்
பூ.விவேகானந்தா – சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை
சுவிஸ் வாழ் காரை மக்கள் சார்பாக

கனடா காரை கலாச்சார மன்றம் Oct 7, 2012இல் நடாத்திய தமிழ்த்திறன் போட்டி - 2012இல் வெற்றி பெற்றோர்கள் பற்றிய விபரம்

பேச்சுப் போட்டி

பாலர் பிரிவு

முதலாம் இடம் – நிந்துஜா மோகனேந்திரன்
இரண்டாம் இடம் – யாழினி யோகேஸ்வரன்
மூன்றாம் இடம் – ஆதிரை ராஜமோகன்

கீழ்ப் பிரிவு

முதலாம் இடம் – துர்கா சிவகுமார்
இரண்டாம் இடம் – துளசி தவராஜா
மூன்றாம் இடம் – சயந்தன் கணேசலிங்கம்
கிருஜானி நடனசபேசன்

மத்திய பிரிவு

முதலாம் இடம் – துளசி யோகேஸ்வரன்
இரண்டாம் இடம் – ஆரபி ராஜமோகன்
மூன்றாம் இடம் – கார்த்திக் சிவகுமார்

மேற் பிரிவு

முதலாம் இடம் – லக்ஷிகா மோகனேந்திரன்
இரண்டாம் இடம் – கிருத்திகா புஷ்பலிங்கம்
மூன்றாம் இடம் – நிலானி பரமானந்தராஜா

அதிமேற் பிரிவு

முதலாம் இடம் – சிறிவர்ஷா ரஞ்சன்
இரண்டாம் இடம் – நிஷாந்தி கணேசலிங்கம்
மூன்றாம் இடம் – நிதுஷா பரமானந்தராஜா

கனடா காரை கலாச்சார மன்றம் Oct 7, 2012இல் நடாத்திய தமிழ்த்திறன் போட்டி - 2012இல் வெற்றி பெற்றோர்கள் பற்றிய விபரம்

வாசிப்புப் போட்டி

பாலர் பிரிவு

முதலாம் இடம் – நிந்துஜா மோகனேந்திரன்

கீழ்ப் பிரிவு

முதலாம் இடம் – துர்கா சிவகுமார்
இரண்டாம் இடம் – பவிஷா மோகனேந்திரன்
மூன்றாம் இடம் – வாசுகி தயானந்தராஜா

மத்திய பிரிவு

முதலாம் இடம் – துளசி யோகேஸ்வரன்
இரண்டாம் இடம் – ஆரபி ராஜமோகன்
மூன்றாம் இடம் – தனுஷ்காந்த் யோகேஸ்வரன்

மேற் பிரிவு

முதலாம் இடம் – லக்ஷிகா மோகனேந்திரன்
இரண்டாம் இடம் – நி ரமானந்தராஜா

அதிமேற் பிரிவு

முதலாம் இடம் – நிஷாந்தி கணேசலிங்கம்
இரண்டாம் இடம் – சிறீவர்ஷா ரஞ்சன்
மூன்றாம் இடம் – நிதுஷா பரமானந்தராஜா

கனடா காரை கலாச்சார மன்றம் Oct 7, 2012இல் நடாத்திய தமிழ்த்திறன் போட்டி - 2012இல் வெற்றி பெற்றோர்கள் பற்றிய விபரம்

பண்ணிசைப் போட்டி

பாலர் பிரிவு

முதலாம் இடம் – ஆரூசன் சுதாகரன்
இரண்டாம் இடம் – ஆதிரை இராசமோகன்
அஞ்சனன் சிவகுமார்
மூன்றாம் இடம் – நிந்துஜா மோகனேந்திரன்
யாழினி யோகேஸ்வரன்

கீழ்ப் பிரிவு

முதலாம் இடம் – அஞ்சனா சற்குணராஜா
ஹரிணி விநாயகமூர்த்தி
இரண்டாம் இடம் – சயந்தன் கணேசலிங்கம்
துர்க்கா சிவகுமார்
மூன்றாம் இடம் – மாதங்கி மகாராஜா
கிருஜானி நடனசபேசன்
துளசி தவராஜா

மத்திய பிரிவு

முதலாம் இடம் – ஹரிணி தயானந்தராஜா
மீரா சிறிவர்ணசூர்யா
இரண்டாம் இடம் – கார்த்திக் சிவகுமார்
மிதுஷா சிறிவர்ணசூர்யா
மூன்றாம் இடம் – தனுஷ்காந்த் யோகேஸ்வரன்
ஆரபி இராசமோகன்
ஆர்த்தி ரமேஷ்

மேற் பிரிவு

முதலாம் இடம் – மாதுமை யோகராஜா
நிலானி பரமானந்தராஜா
இரண்டாம் இடம் – நிலுக்ஷனன் தயானந்தராஜா
அனுஷா சிறிவர்ணசூர்யா
மூன்றாம் இடம் – லக்ஷிகா மோகனேந்திரன்

அதிமேற் பிரிவு

முதலாம் இடம் – நிதுஷா பரமானந்தராஜா
இரண்டாம் இடம் – காயத்திரி பரமேஸ்வரன்
மூன்றாம் இடம் – நிஷாந்தி கணேசலிங்கம்

With the best compliments from
CIVIC TYPE R
HONDA
FORMULA
HONDA
Formula
Formula Honda
For your Brand New and
Quality Pre Owned used Vehicles
Shan(Atheesan) Sarvananthan
Tel: 416-754-4555 Ext.2705
Fax: 416-754-9465 Service:416-754-4096
e-mail:atheesan@formulahonda.com
web: www.formulahonda.com
by:atm365.com, 647-706-6611

நன்றி நவில்கின்றோம்

காரை வசந்தம் 12வது ஆண்டு கலைவிழாவில் கலந்து கொள்ள வருகை தந்த அனைத்து கனடா வாழ் காரைநகர் மக்களுக்கும், அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும், அந்தணப்பெருமக்களுக்கும்,

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ள வைத்தியக் கலாநிதி கனகமலர் ஸ்ரீகாந்தா அவர்களுக்கும் அவர்தம் கணவருக்கும், மற்றும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்த ஊடகவியலாளர் திரு.இளையதம்பி தயானந்தா அவர்களுக்கும் இலண்டன் காரை நலன்புரிச் சங்கத் தலைவர் திரு.பரமநாதர் தவராஜா அவர்களுக்கும் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத் தலைவர் திரு.அருளானந்தம் செல்வச்சந்திரன் அவர்களுக்கும்

இன்றைய விழாவினை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த பெரியோர்களுக்கும்

இவ்விழாவில் கடவுள் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம், தமிழ்தாய் வாழ்த்து, மன்ற கீதம் ஆகியவற்றை வழங்கிய காரை மாணவர்களுக்கும், வரவேற்புரையை வழங்கியிருந்த மன்றத்தின் செயலாளர் திருமதி மலர் குழந்தைவேலு அவர்களுக்கும், தமிழ் பேச்சுப் போட்டிகளை வழங்கிய காரை சிறார்களுக்கும், விழாவினை அலங்கரித்த முதல் நிகழ்வான ஞானாமிர்தம் இசை நிகழ்ச்சியினை வழங்கிய செல்வி ராகவி மனோராகவனுக்கும் சக கலைஞர்களுக்கும், காரைநகர் மான்மியம் நூலினை வெளியிட்டு வைத்த பெரியோர்களுக்கும், Contemporary நடனத்தை வழங்கிய Chandrashekara Dance Academy ஆசிரியர் திருமதி. அனுஷா ஜெயன் அவர்களுக்கும் அவர்தம் மாணவிகளுக்கும்

லயாமுமுதம் இசை நிகழ்ச்சியினை வழங்கிய செல்வன் அமுதீசர் சச்சிதானந்தம் அவர்களுக்கும் சக கலைஞர்களுக்கும், மதுரம் நடனத்தை வழங்கிய பாலவிமல நர்த்தனாலய அதிபர், பரதகலா வித்தகர் திருமதி சித்ரா தர்மலிங்கம் அவர்களுக்கும் அவர்தம் மாணவர்களுக்கும், இசையருவி நிகழ்ச்சியினை வழங்கிய செல்வி சுபன்யா சிவஜோதி மற்றும் சக கலைஞர்களுக்கும், இசைத்துளிகள் இசை நிகழ்ச்சினை வழங்கிய செல்வன் நிர்சாந்த் ஞானேஸ்வரன் அவருடைய சக கலைஞர்களுக்கும் , வானலையின் வரிகள் நூலினை வெளியீட்டு வைத்த ஊடகவியலாளர் திரு. இளையதம்பி தயானந்தா மற்றும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள் அனைவருக்கும்

Joys of Spring நடனத்தை வழங்கிய Niro Dance Creations நிரோதினி பரராஜசிங்கம் அவர்களுக்கும்

Luxury வறுமை-3(சொல்வதெல்லாம் உண்மை) நாடகத்தை வழங்கிய இளையதம்பி தயானந்தா(இலண்டன்), பரமநாதர் தவராஜா(இலண்டன்), சங்கரப்பிள்ளை தவராஜா, ரவி ரவீந்திரன், கந்தையா சந்திரஷேகர் ஆகியோருக்கும்

விவாத அரங்கினை தொகுத்து வழங்கிய ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா மற்றும் இலண்டன் காரை நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு. பரமநாதர் தவராஜா, பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. அருளானந்தம் செல்வச்சந்திரன், பரமசிவம் தர்மலிங்கம், பைரவி சிவராமலிங்கம் ஆகியோருக்கும்

விழாவுக்கான மாலைகளை வருடந்தோறும் எமது மன்றத்திற்காக வழங்கிவரும் வாகீசர் ஐயாவுக்கும்,

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற்ற தமிழ்த் திறன் போட்டிகளில் பங்கு பற்றிய

சிறார்களுக்கும், இந்த போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கும், பண்ணிசை போட்டி நடுவர்களாகக் கடமையாற்றிய சங்கீத ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,

இவ்விழாவை நடத்துவதற்கு மண்டபத்தை வழங்கி சிறந்த முறையில் ஒலி, ஒளியமைப்பு செய்த Chinese Cultural Centre நிர்வாகிகளுக்கும்,

விழாவுக்கான பிரதான அனுசரனையாளர்கள் டாக்டர் வி. விஜயரத்தினம் அவர்களுக்கும், ஏனைய அனுசரனை வழங்கும் Double Seal Insulation நிறுவன அதிபர் திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம், காசிப்பிள்ளை சக புத்திரர்கள் நிதி நிறுவன அதிபர் திரு. முருகேசு காசிப்பிள்ளை, Home Life / Gta Reality Inc முகவர் திரு. ரவி ரவீந்திரன், வரசித்தி அன்ட் கோ நிறுவன அதிபர் P.S. சுதாகரன், Capreit நிறுவனம் திரு. கோபால் மயில்வாகனம், Nano Micro Computer & Home Life Future Reality Inc. திரு. ராஜ் நடராஜா, RBC Insurance முகவர் திரு. குமார் கதிரவேலு, K.K. Electronics நிறுவன அதிபர் திரு.பொன்னம்பலம் குழந்தைவேலு ஆகியோரிற்கும், விழாவுக்கான விளம்பரங்களை வெளியிட்டு உதவிய CMR, TVI, CTBC நிறுவனங்களுக்கும்

இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய P.S சுதாகரன், ஞானபண்டிதன், S. தவராஜா, CTR அறிப்பாளர் கோகுலன் திருஞானசம்பந்தர் ஆகியோருக்கும் மேடைக்குப் பின்னால் உதவிய அனைத்துத் தொண்டர்களிற்கும்,

இவ்விழா நிகழ்ச்சிகளை வருடா வருடம் ஒளிப்பதிவு செய்து வரும் K.K.Electronics நிறுவனத்தினருக்கும் புகைப்பட அனுசரனை வழங்கும் பாரத் ஸ்ரூடியோ நிறுவன உரிமையாளர் திரு. சோமா அவர்களுக்கும்

காரை வசந்தம் 12ம் ஆண்டு மலரிற்குரிய அட்டைப் படத்தை வடிவமைத்துக் கொடுத்த திருமதி. மலர் குழந்தைவேலு அவர்களுக்கும் சிறந்த முறையில் தயாரித்து அச்சுப்பதிவு செய்து கொடுத்த Graphic Land நிறுவனத்தினருக்கும்,

Karianagar.com இணையத்தள ஆலோசகர் திரு. விமலசிறி குலசேகரம் அவர்களுக்கும், தினமும் இணையத்தள பராமரிப்பு செய்யும் K.K. Electronics உரிமையாளருக்கும். Karaianagar.com இணையத் தளத்திற்கு காரைநகரிலிருந்து உடனுக்குடன் செய்திகளை வழங்கும் செய்தி நிருபர் திரு. ஜங்கரன் பத்மநாதன் அவர்களுக்கும்

இவ்விழாவின் வெற்றிக்கும் பொலிவிற்கும் அயராது உழைத்த மன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும்
கனடா – காரை கலாசார மன்றம் தனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

HOMELIFE
HIGHER STANDARDS

Ravi R. Raveendran BSc.(Eng)
Real Estate Broker
416.817.8479

HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave East, Suit 203,
Toronto, Ontario, M1S 0C2
Bus: 416-321-6969

காரை வசந்தம் சிறப்புற வாழ்த்துக்கள்

காரை அன்னையின் செல்வங்கள்

எடுக்கும் விழா காரை வசந்தம் இனிதாய் முடிந்திடும்

இன்னும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

இமயப் பணிகளை மன்ற மாற்றிடும்.

குழந்தை வைத்தியநிபுணர்

Dr.V.Vijayaratnam M.D

M.R.C.P(U.K), M.R.C.P.C.H, F.R.C.P(Canada),
F.A.A.P, D.C.H(London), D.C.C.H(Edin)

3430 Finch Ave E Unit#6A
Scarborough ON. M1W 2R5
Tel:416-496-1990
Fax:416-496-1984

600 Sherbourne St Suite #711
Toronto,ON. M4X 1W4
Tel:416-929-0929
Fax:416-929-8084